
கல்கி



KALKI
22.6.1969
40காசு



மபத்லால் க்ரூப் வாயில்கள்

'டெரீன்'/காட்டன் டெபிலேஸ்டு மற்றும் மாபிளைஸ்டு ரகங்கள்

ஸ்டாண்டர்டு, பம்பாய் • ஸ்டாண்டர்டு (நியூ சைனா), பம்பாய் • ஸ்டாண்டர்டு தேவாஸ் • மபத்லால் ஃபைன், கல்யாண் யூனிட் நம்பர் 1 • மபத்லால் ஃபைன் (ஸஸூன்), பம்பாய் யூனிட் நம்பர் 2 • மபத்லால் ஃபைன் (நியூ யூனியன்), பம்பாய் யூனிட் நம்பர் 3 • நியூ ஷோராக், அகமதாபாத் • நியூ ஷோராக், நடியாத் • சூரத் காட்டன், சூரத் • மிஹிர் டெக்ஸ்டைல்ஸ், அகமதாபாத்.


கோத்ரேஜ் அளிக்கும் அழகுசாதன சோப் ந.1
No.1
அபரிமிதமான நுரைவளத்துடன்
ரோஜாமலர்களின் நறுமணத்தையும்
இணைத்துப் பாருங்கள் : அதுவே இதுவரை
தயாரிக்கப்படாத அளவுக்கு சொகுசுமிக்க
சோப்.

இப்பொழுது நடைபெறுகிறது

சென்னை **சாந்தி** (டிலக்ஸ் ஏர்கண்டிஷன்ட்)
கிரௌன் · புவனேசுவரி மற்றும்
தென்னாடெங்கும்.....

சிவாஜி கணேசன்
அளிக்கும்



ஸ்ரீ கஜலக்ஷ்மி பிலிம்ஸ்

குருதட்சணை

பாடல்கள்·கவிஞர் கண்ணதாசன்·இசை·மேற்பார்வை·K.V.மகாதேவன்
இசை·புகழேந்தி · ஒளிப்பதிவு·பிரசாத் · கலை·கங்கா
ரிகார்டிங்-ரீரிகார்டிங்-T.S.ரங்கசாமி·ஸ்டுடியோ·ஸ்ரீ சாரதா

மூலக்கதை **வீர.பழனியப்பன்** · தயாரிப்பு **முருகு**

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A.P.நாகராஜன்




தேசபக்தர் ஸ்ரீ கே. ஆர். கலியாணராம ஐயர் குமாரர் ஸ்ரீ கே. கே. சிவராமன் - லலிதா திருமணம் சமீபத்தில் இராணிப்பேட்டையில் சிறப்பாக நடைபெற்றது. வரதட்சிணை இன்றி, மணமகன் வீட்டிலேயே திருமணம் நடந்தது.

வாழ்க மணமக்கள்!

கல்கி

பொருளடக்கம்

சௌமிய௵ ஆனி௴ 8உ — 1969 ஜூன் 22



நாடெரிந்தாலும் சரி,
காடெரிந்தாலும் சரி,
நாற்காலியை விட்டு
நகரமாட்டேன்.
காங்கிரஸ்
எனக்கு ஒரு
ஓநாயும் தென்படவில்லை.
ஏன் பயமுறுத்து
கிறீர்கள்?
தில்லி
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

மலர் 28 ✲ இதழ் 47

ஹைகோர்ட்டிடம் வங்க அரசு மன்னிப்புக் கேட்கிறது!

கோர்ட்டை அவமதித்த குற்றத்துக்காக மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த இரண்டு போலீஸ் அதிகாரிகளுக்குக் கல்கத்தா ஹைகோர்ட் அபராதம் விதித்திருக்கிறது. ஒரு தொழிற்சாலையின் அதிகாரிகளை 'கேரோ'விலிருந்து மீட்கும்படி மாஜிஸ்திரேட் பிறப்பித்த உத்தரவை அமுல் செய்வதற்கு அவர்கள் தவறிவிட்டனர் என்பதுதான் குற்றம். தமது தீர்ப்பில் நீதிபதிகள் வெளியிட்ட கருத்துக்கள், நான் இடையறாது கூறி வந்திருப்பவைகளை உறுதி செய்வனவாகவே அமைந்துள்ளன.

போலீஸ் அதிகாரிகளுக்கு இரண்டு மாத வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் எதிரிகள் நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டுக் கொண்டதால் தண்டனையை வஜா செய்து விட்டு அபராதத்தை மட்டும் விதித்தனர் என்று செய்தி கூறுகிறது.

தீர்ப்பளித்த நீதிபதிகள் ஆர். என். தத்தர், ஏ. பி. கான் ஆகியோர். ''இந்த வழக்கில் தெரிவிக்கப்பட்ட மன்னிப்பை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோமாயினும் ஓர் எச்சரிக்கையையும் கூடவே செய்ய விரும்புகிறோம். மீண்டும் கோர்ட்டின் உத்தரவை வேண்டுமென்றே புறக்கணித்து அதற்குக் கீழ்ப்படியாத நிலைமை ஏற்படுமாயின், அதை மிகக் கடுமையான விஷயமாகக் கருதுவோம். சட்டத்தின் நிர்வாகத்தில் சம்பந்தப்பட்டுள்ள எல்லோரும் சட்டத்தின்படியான ஆட்சியை நிலைநிறுத்துவதில் தமக்குரிய பங்கினைச் செய்வர் என நம்புகிறோம்'' என்று கூறினர்.

தங்கள் தொழிற்சாலையில் 'கேரோ'வுக்கு உள்ளாகியிருந்த சில அதிகாரிகளை மீட்குமாறு ஒரு கம்பெனியின் நிர்வாகிகள் கோரியதை ஏற்றுக் கொண்டு பேரக்பூர் சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் அவர்களை மீட்கும்படி போலீசுக்கு உத்தரவிட்டார். அதை அவர்கள் நிறைவேற்றி வைக்காதது கோர்ட்டை அவமதிக்கும் குற்றமெனக் கட்டளையிடுமாறு, கம்பெனி சார்பில் கல்கத்தா ஹைகோர்ட்டில் மனுச் செய்து கொள்ளப்பட்டது. அவ்வகையில் உத்தரவை ஹைகோர்ட் பிறப்பித்தது. சாட்டர்ஜி என்ற போலீஸ்காரரை கோர்ட்டார் விடுதலை செய்தனர். மேலதிகாரியின் உத்தரவுப்படியே அவர் நடந்து கொண்டிருக்கிறார் என்பது ருசுவானதால் அவருக்கு விடுதலை கிடைத்தது.

'கேரோ' என்பது தவறான முறையில் தடுத்து அடைத்து வைப்பது. அது இ. பி. கோ. 342வது பிரிவின்படி குற்றமாகிறது என்று நீதிபதிகள் கூறினர். அது போலீஸார் தாமே முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய குற்றமென்றும், 'கிரிமினல் புரொசீஜர் கோடி'ல் விதித்தபடி ஒவ்வொரு போலீஸ் அதிகாரியும் நடவடிக்கை எடுத்தாக வேண்டிய கடமையுண்டு, இதைப் பற்றிய சட்டம் மிகத் தெளிவாக இருக்கிறது என்றும் கோர்ட்டார் கூறினர்.

போலீஸ் அதிகாரிகள் கடமை தவறியதன் மூலகாரணம் அரசாங்கத்தின் கொள்கைதான். ஆனால் மேற்கு வங்க மந்திரி சபையை நீதிபதிகள் குறை கூறுவது இங்கிதமாகாது. ஆகையால்தான் அப்படிச் செய்யவில்லை. ஆனால் குற்றவாளிகள் என்று ஹைகோர்ட் நீதிபதிகள் கண்டறிந்தது யாரை என்பதை மந்திரி சபை விரும்பினால் கண்டுகொள்ள இயலும். மேலதிகாரிகளின் கட்டளைப்படி நடந்து கொண்டார் என்பதற்காகக் கான்ஸ்டேபிளை ஹைகோர்ட்டார் விடுதலை செய்து விட்டு இரண்டு போலீஸ் அதிகாரிகளையும் தண்டித்தார்கள். இந்த நியாயத்தை மேலும் ஒரு படி சென்று பிரயோகிக்க முடியும். போலீஸ் அதிகாரிகள் மேற்கு வங்க சர்க்காரின் கொள்கையைத்தான் நடத்தி வைத்



ஆசாரியர் அருள்வாக்கு

அழகிய நிலா மாடத்தில் ஒளி வீசும் சந்திரன், — அதேபோல் காட்டுப் புதரின் மீதும்தான் ஒளி வீசுகிறது. தேவி, அவ்வாறே நீயும் தகுதிகளைப் பாராமல், உனது அலர்ந்த நீலோற்பல நயனத்தின் கடைப் பார்வையில் எட்ட நிற்கும் அநாதையான என்னையும் கருணைகொண்டு நீராட்டுவாயாக!

தார்கள். நிர்வாக அதிகாரத்தின் நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டு, மாஜிஸ்திரேட்டின் கட்டளைகளை அவர்கள் புறக்கணிக்க வேண்டியதாயிற்று. கோர்ட்டை அவமதித்த குற்றத்தை இழைத்ததாகத் தீர்ப்பான அதிகாரிகள் நிபந்தனையின்றி மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர். சிறைத் தண்டனையை ஹைகோர்ட் வஜா செய்தது. தெரிவிக்கப்பட்ட மன்னிப்பு உண்மையில் அரசாங்கத்தின் மன்னிப்பே ஒழிய துரதிர்ஷ்டசாலிகளான போலீஸ் அதிகாரிகள் தெரிவித்த மன்னிப்பு அல்ல.

சட்டத்துக்கும், ராஜீய வகையில் பதவிப் பொறுப்பில் அமர்ந்துள்ள நிர்வாகத்துக்கும் நடந்த கடும் போர் என்று இந்த விவகாரத்தை வர்ணிக்கலாம். இந்தப் போரின் முடிவு திண்ணமாக, நியாயப்படி, சட்டமும் அமைதியும் அடைந்த வெற்றி. கல்கத்தா ஹைகோர்ட் காண்பித்த உறுதிக்காகத் தேசமனைத்தும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பின் மூலம் 'கேரோ'க்கள் இனி கூடாது என்ற நிலைமை இறுதியாக உறுதியாகிவிட்டது என்று நம்புவோமாக.

போலீஸார் காண்பிக்கும் மனப்பான்மை விஷயத்தில் மந்திரிகள் அதிருப்தி கொண்டால்கூட, இனிமேல் போலீசாரும் மாஜிஸ்திரேட்டுகளும் 'கேரோ'க்களைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று நம்புவோமாக.

மாநில ராஜீயவாதிகளின் தவறான ஆட்சியை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டு இந்திய சர்க்காரின் உள் துறை அமைச்சகம் சும்மா இருப்பது தகாது. கல்கத்தா ஹைகோர்ட்டின் தெளிவான தீர்ப்பு அதற்குத் தைரியமூட்ட வேண்டும்.

இருபதாண்டுகளுக்குமுன் தில்லியில் உள் நாட்டு அமைச்சகம் என் பொறுப்பில் இருந்த போது, ஹைகோர்ட் நீதிபதிகளின் நியமன விஷயமாகச் சில மரபுகள் இருந்து வந்தன. அப்பொழுது இருந்ததைவிட அதிகமான செல்வாக்கு இப்பொழுது இந்த நியமனங்கள் விஷயத்தில் மாநில முதலமைச்சர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஆழ்ந்த வருத்தமேற்படுகிறது. ஹைகோர்ட்டுகளின் நீதிபதிகளாக நியமனம் பெற யார் யாருக்குச் சிறந்த தகுதி உண்டு என்பதை சுப்ரீம் கோர்ட்டின் பிரதம நீதிபதி அப்பொழுது முடிவு செய்து வந்தார். அது நல்ல நடைமுறை: நீதிபதிகளின் சுதந்திரத்துக்குப் பாதுகாப்பாகவும் அது அமைந்தது. இப்பொழுது ஹைகோர்ட் நீதிபதிப் பதவிகளை விரும்புவோர் மாநில மந்திரிகளின் தயவைச் சம்பாதித்தாக வேண்டிய நிர்ப்பந்த நிலை இருந்து வருவதைக் குறித்து வருந்துகிறேன். தேசம் முதன்மையாக மதிப்பது நீதிமன்றங்களின் சுதந்திரத்தைத்தான். அதைப் பயனற்றதாக்குவதன் காரணமாக, இப்போதைய நடைமுறை, அரசியல் சாஸனத்துக்கே குழி பறிப்பதாக இருக்கிறது.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதிய கட்டுரையின் சுருக்கம்)

ராஜாஜியின் கருத்துக்கள்

பால் கிளாஸ் என்ற பிரெஞ்சு நிபுணர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் சென்னை வந்து நீர் நிலை வசதிகளை ஆராய்ந்தார். மாநில அரசிடம் ஒரு யாதாஸ்தைக் கொடுத்தார். கொற்றலையாறு படுகையில் பூமி மட்டத்துக்குக் கீழ் உள்ள ஊற்று நீரை ஒரு புது முறைக் குழாய் வசதியின் மூலம் வெளிக் கொண்டு வரலாம் என்பது அவரது யோசனை. கொற்றலையாறு சென்னைக்குப் பத்து மைல் வடக்கே கடலில் விழுகிறது.

சமீபத்தில் உலகம் சுற்றிய திரு எஸ். கிருஷ்ணய்யர் பிரெஞ்சு நிபுணர் கிளாஸை பாரிஸில் கண்டார். "மிகக் குறைந்த செலவில் நடத்தி வைக்கக் கூடிய என் புது முறைத் திட்டத்தைக் கடும் பஞ்ச காலத்திலும் நடத்திவைக்க உங்கள் சர்க்கார் முன் வராதது ஆச்சரியமாயிருக்கிறது" என்று கிருஷ்ணய்யரிடம் அவர் கூறினாராம்.

கிளாஸ் திட்டத்துக்கு ரூ. 10 லட்சம்தான் செலவாகும். ஆனால் தினமும் கொற்றலையாறு ஊற்றுக்களிலிருந்து ஒரு கோடி முதல் இரண்டு கோடி காலன் வரை நீர் சென்னை நகருக்குக் கிடைக்கும் என்கிறார் கிளாஸ். இப்பொழுதுகூட காலம் கடந்துவிடவில்லை

என்று அவர் நினைக்கிறார். அவரது திட்டத்தைப் பற்றிய யாதாஸ்தை முடிந்துபோன விஷயம் என்று கட்டி வைக்கப்பட்டிருக்கும் பைல்களிலிருந்து எடுத்துத் தமிழ் நாட்டு சர்க்கார் மீண்டும் பரிசீலிப்பது நல்லது.

★

தெற்கு வியட்நாமில் தேசிய விடுதலை முன்னணியினர் ஒரு புரட்சி அரசாங்கத்தை நிறுவியுள்ளனர். நியூ அரசாங்கத்தைப் பிரித்து வைத்து விட்டதாகக் கூறியுள்ளனர். இந்த ஏற்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்கிறது அமெரிக்கா. பழைய மதுவைப் புதிய புட்டியில் போட்டுத் தருகிற காரியமே இது எனக் கருதுகிறது அமெரிக்கா. தேசிய விடுதலை முன்னணியுடன் பேச்சு வார்த்தை நடத்துவதாலேயே அதை அரசாங்கமாக ஏற்றுக் கொண்டதாகாது என்கிறது அமெரிக்கா. பிற நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா ஈடுபடக் கூடாது என அந்நாட்டு மக்கள் தீவிரமாக எண்ணி வரும் இக்காலத்தில் அமெரிக்கா இன்னும் எவ்வளவு நாள் உறுதியாக இருக்கும் என்று போகப் போகத் தெரியும். அமெரிக்க மக்கள் ஒதுங்கியிருக்க விரும்புவதே கம்யூனிஸ்டுகளுக்குப் பெரும் பலமாக உள்ளது.

★

ஸ்ரீமதி இந்திரா காந்தி காங்கிரஸ் கட்சியில் ஒரு முக்கிய தலைவராகவும், பிரதமராகவும் இருக்கையில், இந்திய ராஷ்டிரபதி பதவிக்கு ஒரு காங்கிரஸ்காரர் நியமிக்கப்பெற்றால், அது இன்றுள்ள நிலையில் காங்கிரஸ் கட்சியின் பலத்துக்கோ புகழுக்கோ ஏற்றம் அளிக்கப் போவதில்லை. அதற்கு மாறாக, காங்கிரஸினிடம் நம்பிக்கை குறைய அதுவே ஏதுவாகும். எந்த அரசியல் கட்சியையும் சேராத ஒருவர் நியமிக்கப் பெற்றால் அது ஒரு பெரிய நல் சமிக்ஞையாகக் கருதப்படும். பிரதமரின் நிர்வாகத் திறமைக்கு மேலும் புகழை ஈட்டித் தரும்.

★

தங்களது சர்வாதிபத்தியத்தை விட்டுக் கொடுக்கிற பிரச்னை எழுந்தால், அப்போது ருஷிய ஏகாதிபத்தியவாதிகள் கட்சிக் கருத்தையோ, உலகக் கருத்தையோ பொருட்படுத்துவதில்லை. இருப்பினும், ஸ்பெயின், ஸ்விட்ஜர்லாந்து, இத்தாலி, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் செக்கோஸ்லோவேகியாவில் ருஷியா தலையிட்டதைக் கண்டித்திருப்பது குறிப்பிடத்தக்கது. ருஷியத் தலைவர்கள், வார்ஸா உடன்படிக்கையின் கீழ் வரும் நாடுகளையெல்லாம் கடுமையான கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே பாதுகாப்பு யுக்தி எனக் கருதுகின்றனர்.

★

ஜூன் 11ந் தேதி பம்பாயில் ஒரு ரோட்டரி கூட்டத்தில் ஸ்ரீ எஸ். கே. பாட்டீல் பின்வருமாறு பேசியுள்ளார்:

> "இந்தியாவில் சுதந்திரம் சுற்றி வளைத்து நெரிக்கப்படுகிறது. பிரஜைகள் எவ்விதச் சுதந்திரமும் அநுபவிக்கவில்லை."

தாம் மிகைப்படுத்தவேயில்லை என்றார் பாட்டீல். "இன்று வெறும் வார்த்தைக் கோஷங்களும் பிரசார மந்திரங்களும்தான் நிலவுகின்றன. நாளை என்ன நடக்கும் என்று தெரியாத நிலையாகிவிட்டது" என்று பேசியிருக்கிறார்.

பாட்டீல் குறிப்பிடும் நெரிசலிலிருந்து பிரஜையை விடுவிப்பதே சுதந்திரக் கட்சியின் லட்சியம்.

அம்பிகையின் ஆலயப் பணி




திருக்கழுக்குன்றத்தின் அருகிலுள்ள சதுரங்கப்பட்டினம் என்னும் கடற்கரை கிராமத்தில் ஸ்ரீ காமாட்சியம்மை திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கிறாள். இந்தக் கோயிலின் அமைப்பு, எழுந்தருளியிருக்கும் தெய்வத் திருஉருவத்தின் சிலையழகு உருவமைப்புகளைக் கொண்டு, இக்கோயில் ஒரு பல்லவப் படைப்பு என்று கருதப்படுகிறது.

தற்சமயம் இக்கோயில் மிகவும் சேதமடைந்துள்ளது. கோயிலின் புனர் நிர்மாணப் பணியைச் சில தொண்டர்கள் ஏற்றிருக்கிறார்கள். அன்பர்கள் யாவரும் இந்த நற்காரியத்துக்குத் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து அன்னை தெய்வத்தின் ஆசியைப் பெற வேணும். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி:


தோ சீனிவாசன், தலைவர்,

c/o Dr. M. R. Srinivasan, Chief Construction Engineer, Madras Atomic Power Project, Kalpakkam P. O. Chingleput Dt.,



மோட்டார் கார்களில் 'ரோல்ஸ் ராய்ஸ்' எப்படியோ அப்படி துப்பாக்கிகளில், 'பர்டே'. இவர்களிடம் துப்பாக்கி வாங்கச் செல்பவன் பெரும் பணக்காரனாகவோ அல்லது உலகப் பிரசித்தமானவனாகவோ இருக்கலாம்; சாமான்யமான மனிதனாக விளங்கித் தனது சேமிப்பிலிருந்து ஆயிரம் பவுன்களை (சுமார் பதினேழாயிரம் ரூபாய்) ஒரு முதல் தரமான துப்பாக்கிக்காகச் செலவழிக்கத் தயாராக உள்ளவனாயும் இருக்கலாம். எப்படியானாலும் சரி, பர்டே ஸ்தாபனத்தில் துப்பாக்கி வாங்கும் நோக்கத்துடன் நுழையும் எல்லோருக்கும் ஒரே விதமான வரவேற்புதான் கிட்டும்!

துப்பாக்கிக் கலை!



ரெடிமேட் ஆடைகளுக்கும் தையல்காரர் அளவெடுத்துத் தயாரிக்கும் ஆடைகளுக்கும் வித்தியாசமில்லையா? அதே போலத்தான் பர்டேயில் தயாராகும் ஒவ்வொரு துப்பாக்கியும் ஒரே ஒரு தனி மனிதனுக்கு முழுத் திருப்தி அளிக்கும் வகையில் உருவாகிறது.

நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பட்ட ஜேம்ஸ் பர்டே ஸ்தாபனம், துப்பாக்கிகள் தயாரிப்புக்கு இயந்திரங்களைப் பயன்படுத்துவதில்லை. ஒவ்வொரு துப்பாக்கியும் அதன் ஒவ்வொரு பாகமும் மனிதக் கரங்களின் நுணுக்கமான செயல் திறனால் உருவாகின்றவை.

இங்கிலாந்தின் மூன்றாவது ஜார்ஜ் மன்னரிலிருந்து தொடங்கிப் பல நாடுகளின் தலைவர்கள் இங்கு தமக்கென்று பிரத்தியேகமாகத் துப்பாக்கி தயாரிக்க அளவு கொடுத்திருக்கின்றனர். துப்பாக்கி யாருக்காகத் தயாரிக்கப்படுகிறதோ, அவரது உயரம், கனம், கரத்தின் நீளம் ஆகியவை மட்டுமின்றி அவரது இரு விழிகளுக்கும் இடையில் உள்ள தூரம் கூடக் கணக்கிடப்படுகிறது.

இதைத் தவிர இந்தக் கம்பெனியில் விநோதமான ஒரு 'மாதிரித் துப்பாக்கி' உள்ளது. இத்துப்பாக்கியின் பல பாகங்களையும் நீட்டவோ குறைக்கவோ பருமனாக்கவோ இளைக்கச் செய்யவோ முடியும்! துப்பாக்கிக்கு 'ஆர்டர்' கொடுப்பவர் இந்த மாதிரித் துப்பாக்கியை — தமக்கு ஏற்ற விதத்தில் சரி செய்யப்பட்ட பின் — பல முறை தூக்கிக் கண்ணுக்கு நேரே வைத்துக் குறி பார்க்கிறார். அப்போது குறி சரியில்லை என பர்டே ஊழியர் கண்டாரேயானால் மேலும் சில திருத்தங்களை இம்மாதிரித் துப்பாக்கியில் அவர் செய்கிறார்.

இதுபோல் அளவு கொடுக்க பர்டே ஸ்தாபனத்துக்கு வர இயலாதவர்கள் ஒரு கடிதம் எழுதினால் போதும், அந்தக் கம்

பெனியின் மானேஜிங் டைரக்டரே பறந்து வந்து விடுவார் அளவெடுக்க!


இம்மாதிரி தனி நபருக்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு துப்பாக்கியும் தயாராவதால் பல விநோதமான துப்பாக்கிகள் இங்கு உருவாகியுள்ளன. உதாரணமாக ஒற்றைக் கண் உடையவருக்கு அவரது வலது தோளில் துப்பாக்கியின் அடிவாரம் முட்டுக் கொடுத்த போதிலும் இடது கண்ணால் குறி பார்க்க வசதியாக ஒரு துப்பாக்கி தயாரிக்கப்பட்டது!

இன்னொரு தடவை ஒரு நபர், 'தமது பர்டே துப்பாக்கி சரியாக இயங்கவில்லை; குறி தவறுகிறது' என்று குற்றம் சாட்டினார். ''பர்டே துப்பாக்கியில் தவறே இருக்க முடியாது! உங்கள் கண் பார்வை மங்கி வருவதுதான் குறி தப்பக் காரணமாயிருக்கும்'' என்று நிர்வாகிகள் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். அவர்கள் கூறியதை நூற்றுக்கு நூறு உண்மை எனக் கண் டாக்டர் பிறகு மெய்ப்பித்தார்!

துப்பாக்கியை அதன் சொந்தக்காரருக்கு ஏற்ற அளவிலும், கனத்திலும் தயாரிப்ப

படங்கள் :

- ☐ துப்பாக்கியின்மீது சித்திரக் கோலங்கள் செதுக்கப்படுகின்றன.
- ☐ துப்பாக்கியின் அடிவாரம் வலது தோளில் முட்டுக் கொடுத்தாலும் குறி பார்ப்பது இடது கண்ணால். துப்பாக்கியின் நெளிவைக் கவனிக்கவும்.
- ☐ துப்பாக்கி தயாரிக்கு முன்னர், அதனைப் பயன்படுத்தப் போகிறவரை விசேஷக் கருவிகள் கொண்டு அளவெடுக்கிறார் பர்டே ஊழியர். அளவு கொடுப்பவர் ஏந்தி நிற்கும் துப்பாக்கி நீள அகலமும் கனபரிமாணமும் மாறக்கூடிய தன்மை கொண்டது. அளவெடுக்கவென்றே ஏற்பட்ட விசேஷத் தயாரிப்பு.
- ☐ துப்பாக்கிக் குழல்களில் இறுதிக் கட்ட வேலை நடைபெறுகிறது.




துடன் அவரது விருப்பப்படியே அதனை அலங்கரிக்கவும் செய்கிறார்கள். எந்தவிதமான சித்திர வேலைப்பாடு வேண்டும் என்று சொன்னால் அதன்படி துப்பாக்கியில் அழகுறச் செதுக்குவதுடன் தேவையானால் தங்கம் அல்லது வெள்ளியை அந்தச் சித்திர வேலைப்பாடுகளில் பதித்துத் தருவார்கள். குடும்பச் சின்னங்கள், ராஜ முத்திரைகள் இவற்றைத் துப்பாக்கியில் பதிக்கலாம். அல்லது வேட்டைக் காட்சி, பறவைகள் போன்றவற்றை அழகுறச் செதுக்கலாம்.

இந்த ஆண்டில் ஒரே ஒரு வாரத்தில் இந்நிறுவனத்துக்கு இருபத்திரண்டு நாடுகளிலிருந்து 42½ லட்சம் ரூபாய்க்கு 'ஆர்டர்கள்' வந்து குவிந்துள்ளன. பர்டே துப்பாக்கியின் சொந்தக்காரராக விளங்க ஏராளமான பேர்கள் விரும்பி கியூவில் நிற்கவும் தயாராகிறார்கள். ஒரு பர்டே துப்பாக்கியை வாங்கக் குறைந்தது இரண்டு வருஷங்கள் ஒருவர் காத்திருக்க வேண்டும்!

பர்டே துப்பாக்கிகள் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு மனிதக் கரங்களினாலேயே தயாரிக்கப்படுவதால் இதனைத் துப்பாக்கி உற்பத்தி என்பதை விடத் துப்பாக்கிக் கலை என்றே சொல்லலாம். பர்டே ஊழியர்கள் தங்களைத் துப்பாக்கிக் கலைஞர்கள் என்றே வர்ணித்துக் கொள்கின்றனர். ஓவியர் தமது கலைப் படைப்பில் கையெழுத்திடுவது போல் இந்தத் துப்பாக்கிக் கலைஞர்களும் தமது ஒவ்வொரு படைப்பிலும் கையெழுத்திடத் தவறுவதில்லை!

— பீ.ஐ.எஸ்.



ஷண்மத மகாநாடு – சம்மத மகாநாடு

"சிகாகோ மகாநாட்டிலிருந்து ஆரம்பித்து உலகத்தின் பல மதங்களையும் ஒன்று கூட்டும் மகாநாடுகள் பல நடைபெற்றுள்ளன. ஹிந்து மதத்தின் சித்தாந்தங்களை ஒருங்கு கூட்டியும் மகாநாடுகள் நடந்துள்ளன. ஆனால் **நான் அறிந்த மட்டும்** ஹிந்து மதத்தின் அங்கங்களாகிய ஷண்மதங்களையும் இணைத்து நடக்கும் முதல் மகாநாடு இதுவே" என்று பேராசிரியர் ஸ்ரீ டி. எம். பி. மகாதேவன் அவர்கள் சென்னையில் நடைபெற்ற சங்கர—ஷண்மத மகாநாட்டுத் தொடக்க தினத்தில் கூறினார்.

ஸ்ரீ மகாதேவன் **அறிந்த மட்டும்** இப்படி ஒரு மகாநாடு நடக்கவில்லையென்றால், நமது வரலாற்றில் இப்படிப்பட்ட மகாநாடு **நடந்ததே இல்லை** என்றுதான் பொருள்.

விநாயகர் — முருகன் — திருமால் — சூரியன் —அம்பிகை — சிவபெருமான் ஆகிய ஆறு தெய்வங்களைக் குறித்த வழிபாட்டு முறைகள் ஒரே இடத்தில் சேர்ந்ததால் இந்த ஆறும் ஒன்றுகிற எம்மதமும் சம்மதம் என்கிற சமரச மகாநாடாகவே இவ்விழா நிறைவேறியதை முதற்கண் சொல்ல வேண்டும். இது வெறும் ஷண்மத மகாநாடல்ல; சங்கர — ஷண்மத மகாநாடு. அதாவது அந்தந்த மதத்தவரும் தம் கொள்கையே உயர்ந்தது என்று வாதிக்கிற மகாநாடல்ல; சங்கரர் கண்ட சமய நெறிப்படி பிற தெய்வ பக்தர்களை இழிவு படுத்தாமல் தம் தெய்வத்தைப் போற்ற வேண்டும் என்ற உணர்வைக் கொண்டிருந்த மகாநாடு. இம் மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் இதைப் பிரதிபலித்தது அதி விசேஷமான காரியம். 'வெவ்வேறு சமய நெறியினரைப் பேச விடுகிறீர்களே! உரசலும் முரண்பாடும் உண்டாகி விடப் போகிறதே! சமய ஒற்றுமைக்காக மகாநாடு நடத்தப் போய் அதன் விளைவாக, இதுகாறும் தெரியாதிருந்த பிளவுகளும் பிணக்குகளும் வெளிப்பட்டுவிடப் போகின்றனவே' என்று சில அன்பர்கள் ஆரம்பத்தில் நியாயமானதோர் அச்சத்தைத் தெரிவித்தனர்.

ஆனால் ஐயன் காமகோடி தனது அன்புச் சாந்நித்தியத்தை மகாநாட்டுப் பந்தலில் அலைமோத விட்டதனால்தான் போலும், வாதப் போர்களுக்குப் பெயர் எடுத்தவர்களும் கூட எவர் மனமும் புண்படாமல் தம் கருத்தின் சிறப்பை எடுத்துக் கூறினர். எவ்வித பேதமும் இன்றி மகாநாடு இனிது முடிந்ததிலிருந்தே அதன் லட்சியமான சமய ஒற்றுமை எய்தப்பட்டு விட்டது; திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறினாற்போல் 'ஷண்மத மாநாடு சம்மத மாநாடாயிற்று' எனலாம்.

இது மத ஒற்றுமை மகாநாடு என்பதை அடிக் கோடிட்டுக் காட்டவே தொடக்க தினமாகிய ஜூன் முதல் தேதியன்று சமய சமரசம் குறித்துக் கல்கத்தா நீதிபதி பி. பி. முகர்ஜி, ஸ்ரீ அக்னிஹோத்திரம் ராமாநுஜ தாதாசாரியார், திரு ம.பொ.சி., பேராசிரியர்கள் ராகவன், டி. எம். பி. மகாதேவன், நாகராஜராவ் ஆகியோரின் உரைகள் ஏற்பாடாகியிருந்தன. இவர்கள் அனைவரும் ஹிந்து மதத்தின் அடிப்படையும், ஆசாரிய சங்கர சித்தாந்தத்தின் அஸ்திவாரமும் எல்லா மார்க்கங்களையும் ஒப்புக் கொள்வதுதான் என உள்ளங்கை நெல்லிக்கனியாக விளக்கினர். இவற்றில் பி. பி. முகர்ஜியின் உரையைக் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். 'சமய ஒற்றுமை, சமூக ஒற்றுமை என்பதற்காக எல்லாவற்றையும் ஒரே அளவைக்கு உட்படுத்த வேண்டியதில்லை. அவரவர் மனப் பக்குவப்படி வெளி பேதங்கள் இருப்பினும் அடிப்படையில் இசைவு இருக்க வேண்டியதே அவசியம்' என்றார் அவர். ஒருகால் இன்றைய சமத்துவவாதிகளுக்கு இது விரும்பத் தகாததாக இருக்கலாம். எனினும் இதுவே ஆசாரிய சங்கரரின் கொள்கை என்பதில் ஐயமில்லை. இல்லாவிடில், அவர் ஷண்மதங்களைத் தனித்தனியாக ஸ்தாபிக்காமல் எல்லாவற்றையுமே சேர்த்து ஒன்றாக நிறுவியதோடு நின்றிருப்பார். ஆதி ஆசாரியரின் உள்ளக் கருத்தை நம் காமகோடி பெரியவாள் அன்றி யார் இயம்ப முடியும்? ஷண்மத விழா முடிந்த பிறகு ஒலிபரப்பப்பட்ட ஸ்ரீ காமகோடி ஆசாரியர்களின் பதிவு செய்யப்பட்ட உரையில் இவ்விஷயம் வலியுறுத்தப்பட்டது. 'எல்லாருக்கும் எல்லா தர்மங்களும் பொது என்று விதித்து விட்டால் யாருமே அவற்றை அநுசரிக்காத நிலைதான் ஏற்படும். இன்னின்னாருக்கு இன்னின்ன சில ஒழுக்கங்கள் வேண்டும் என்று வரையறை செய்தாலோ, அவர்கள் நிச்சயம் அவற்றைப் பின்பற்ற முடியும். ஆகாய விமானம் கண்டு பிடிக்குமுன் பறக்கவிடப்பட்ட பலூனில் ஒரே பெரிய காற்றுப் பையாக வைக்காமல் பல சிறிய காற்றுப் பைகளை வைத்தார்கள். ஏனெனில், ஒன்றாக இருந்தால் அதில் ஒரு சிறு துவாரம் விழுந்தாலும் மொத்தமும் பாழாகிவிடும். சிறிய பல பைகள் இருந்தால் ஒன்று போனாலும் மற்றவை இருப்பதால் பலூனுக்கு ஊனமில்லை. பலூன் ஊனமில்லாமல் பறக்கும் போது, சேதமுற்ற பையையும் சீர் செய்து விடலாம். வயல்களுக்கிடையே வரப்பே வேண்டாம் என்றால், எங்காவது ஓரிடத்தில் நீர் புகுந்தாலும் அவ்வளவு நிலமும் சேதமாகி விடும். **பரஸ்பர ரட்சணைக்காகவே** வெளிக் காரியத்தில் பிரிவுகள் இருக்க வேண்டியதுதான். ஆனால் மனத்தில், தத்துவத்தில் அனைவருக்கும் ஒரே அன்புமயமான ஒற்றுமை இருக்க வேண்டும். இதுதான் வேற்றுமையில் ஒற்றுமை' என்று அந்த உபந்நியாஸத்தில் ஜகத்குரு கூறியிருந்தார்.

மகாநாட்டின் லட்சியங்களில் ஒன்று ஆதிசங்கர பகவத்பாதர்களின் பக்திப் பணியைப் பாருக்குப் பிரகடனம் செய்வது. தினமும் அன்றைய தெய்வம் பற்றி சங்கரரது துதிகளின் பாராயணமும், துதிகளைப் பற்றிய சிறப்புரையும் நிகழ்ந்தது மட்டுமின்றி மற்றப் பேச்சாளர்களும் கூட சங்கரரின் 'ஷண்மத ஸ்தாபனப் பணி'யைக் குறிப்பாக வலி













1. விழாப் பந்தலில் அருட்சக்தி பரப்பிய பரமாசாரியர்களின் திரு உருவப்படம்.

2. விழாத் தொடக்கத்தன்று பிரசன்ன மான ஸ்ரீ பத்ரி சகடபுரம் சங்கராச்சாரியார்.

3. காணபத்திய தினத்தில் ஸ்ரீ டி. வி. போத்தார் (புரு) தலைமை உரை.



காணபத்திய தினத்தில் பேசியவர்கள்:

4. ஸ்ரீவத்ஸஸோமதேவ சர்மா
5. கி. வா. ஜகந்நாதன்
6. ஸ்ரீமதி சௌந்தரா, கைலாசம்
7. பேராசிரியர் டிகேகர்
8. ஸ்ரீ முருகேச முதலியார்

















கௌமார தினம்:

1. ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு அவர்களின் 'குமார சம்பவம்' கதாகாலட்சேபம். 2. ஆசி நல்கிய திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள். 3. திரு சஞ்சீவியும் திரு முருகவேளும். 4. ஸ்ரீ சோமு. 5. ஸ்ரீ சுநீதி குமார் சாட்டர்ஜி. 6. பழூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள். 7. டா் பி. டி. ராஜன். 8. மகாநாட்டுக்குத் திரளாக வந்திருந்த பெருமக்கள். 9. ஸ்ரீ சங்கரலிங்கம்














ஸௌர நினைத்தில்: 1. காமதர்பீடம் ஸ்ரீ வித்யா சங்கர பாரதி சுவாமிகள். 2. அக்னி ஹோத்ரம் தாதாசாரியார். 3. டாக்டர் பராத்கர் 4. பேராசிரியர் ஆர்.என். சம்பத். 5. டாக்டர் வி. கிருஷ்ணசுவாமி. 6. தூப்புல் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மன். 7. பேராசிரியர் கே. ஸ்ரீனிவாச ராகவன். 8. கூட்டத்தில் மாதர் பகுதி.



யுறுத்தினர். சங்கரர் பரம பக்திமான் என்பதையும் அவர் ஷண்மத ஸ்தாபகர் என்பதையும் ஐயம் திரிபற உணர்த்திவிட்டனர் எனலாம். மகாநாட்டில் இன்னோர் உண்மையும் தெளிவாகத் தெரிந்தது. ஸ்ரீ சங்கரரின் பக்தியை உலகுக்குத் தெரிவிப்பதோடு சங்கரரிடம் உலகுக்கு உள்ள பக்தியை வெளிப்படுத்தவும் மகாநாடு உதவிவிட்டது. அத்வைதத்துக்கு மாறுபட்ட கொள்கை உள்ளவர்களும் கூட அவரிடம் எப்படிப்பட்ட கௌரவ புத்தி கொண்டிருக்கின்றனர் என்பது மகாநாட்டில் நிதரிசனமாயிற்று.

''இனி நாம் ஒவ்வொருவரும் நம்மை சங்கர சித்தாந்தி, ராமானுஜ சித்தாந்தி என்று பிரித்துச் சொல்லிக் கொள்ளாமல், அனைவரும் சேர்ந்து நாங்கள் 'சங்கர — ராமானுஜ சித்தாந்திகள்' என்று சொல்வோம்'' என்று ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் கூறியதை மறக்க முடியுமா? 'புறச் சமயங்களிலிருந்து ஆதி சங்கரர் ஹிந்து மதத்தைக் காப்பாற்றியதால்தான் இன்று வைஷ்ணவர்கள் வைஷ்ணவர்களாக இருக்கிறோம். இதை இந்த மேடையில் பகிரங்கமாகச் சொல்லி அந்த மகானுக்கு நன்றியும் நமஸ்காரமும் தெரிவிக்க வேண்டும்' என்று ஸ்ரீ எம்பார் விஜயராகவாச்சாரியார் கூறியது பொன்னெழுத்தில் பொறிக்கத் தக்கது அல்லவா?

அதோடு நமது காமகோடி ஜகத்குரு மக்களின் உள்ளங்களை யெல்லாம் எப்படிக் கொள்ளை கொண்டிருக்கிறார் என்பதும் மகாநாட்டில் நிதரிசனமாயிற்று. 'பெரியவர்கள் பௌதிகமாக இங்கு இல்லாவிடினும், இன்று இங்கு எல்லோர் இதயத்திலும் அவர் இலங்குவதைப் பிரத்யட்சமாகக் காண முடிகிறது' என ஸ்ரீ கஜேந்திர கட்கர், ஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள் ஆகியோர் நெஞ்சாரச் சொன்னது முற்றிலும் உண்மை. பேச்சாளர் அனைவரும் பெரியவாளைப் பற்றி உருகிப் பேசினர். அவையோரும் 'பெரியவாள்' என்ற சப்தம் வந்தாலே மனம் கரைந்து விட்டனர். பந்தலில் அமைந்திருந்த பெரியவாளின் திரு உருவத்தை மக்கள் கூட்டம் கூட்டமாக வணங்கிச் சென்றது மறக்கவொண்ணாத நிகழ்ச்சி.

ஃ ஃ ஃ

ஒன்பது நாட்கள். ஏகப்பட்ட பேச்சுக்கள். காலம் போதவில்லை என்ற குறைதான். மாலை ஆறிலிருந்து இரவு பன்னிரண்டு மணி வரை ஆயிரமாயிரம் மக்கள் குழுமியிருந்தது அதிசயம். இப்படிப்பட்ட மகாநாட்டைப் பற்றி, பேரறிஞர்கள் பற்பல கருத்துக்களைப் பொழிந்ததைப் பற்றி எவ்வளவு பக்கம் எழுதினாலும் போதாது. சாராம்சத்தை மட்டும் பார்ப்போம்.

காணபத்திய தினத்தன்று, மகானுபாவ மகாமகோபாத்தியாய டி. வி. போத்தார், பழுத்த பழமும் குழந்தைத்தனமும் ஒன்றி நிஷ்களங்கமாகப் பேசினாரே அதுதான் மகாநாட்டின் சாராம்சம் :

''இந்த மகாநாட்டில் அறிஞர்கள் ஒவ்வொருவரும் தெய்வ வழிபாடு பற்றி ஆராய்ச்சி பூர்வமாகப் பேசினார்கள். ஆராய்ச்சி வேண்டியதுதான். அதில் பயன் உண்டு. ஆனால் பக்திதான் முக்கியம். நீண்ட காலமாக நம் நாட்டில் எந்த மதாசாரங்கள் பின்பற்றப்பட்டனவோ அவற்றை நாம் அப்படியே தொடர்ந்தாலே போதும். வாதப் பிரதிவாதம் பக்தியின் பக்கம் தலை காட்ட வேண்டாம்'' என்றார் ஸ்ரீ போத்தார்.

இது முதலில் வணங்கப்படும் விநாயகரின் விழாவில். பூர்த்தி தினத்தன்று மகாநாட்டின் மகத்தான நற்பேறாக ஆசி மொழிந்த ராஜாஜியும் இதையேதான் கூறினார்:

'' நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்ற விசாரணை வேண்டாம். நம்பிக்கையுடன், முழு மனத்துடன் பகவானிடம் பக்தி செலுத்துவோம். அதுவே விமோசனத்துக்கு வழி ''

என்றார் அவர். தாம் ஆசி அளிப்பதாகச் சொல்லி அவர் மேலே தொடர்ந்த விதம் இருக்கிறதே அது நெஞ்சை உருக்கிவிட்டது:

''வயது காரணமாக உங்களுக்கு எல்லாம் ஆசி சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது. அநேகமாக இங்கு கூடியுள்ள எல்லாரையும்விட நான் வயதில் பெரியவன். ஆனால் இது என் பாக்கியமா, துரதிர்ஷ்டமா என்று தெரியவில்லை. சில சமயங்களில் 'இந்தக் கஷ்டங்களையெல்லாம் நீ பார்த்துக் கொண்டே இரு' என்றே பகவான் என்னை வைத்திருக்கிறானோ என்று தோன்றுகிறது. நான் சொல்வதைக் கேட்பாரில்லை''

என்றார் ராஜாஜி. அவர் சொல்வதென்ன ? 'கபடமின்றி பக்தி பண்ணுங்கள்' என்பதுதான். அப்படிப் பக்தி பண்ணுவதற்கு மக்களைத் தூண்டவே காமகோடி பீடாதீச்வரர் மகாநாட்டை அநுக்கிரகித்திருக்கிறார். எனவே, ராஜாஜி தமது தீர்க்காயுள் துரதிருஷ்டமல்ல, பாக்கியமே என்று நிறைவு கொள்ளும் நாள் விரைவில் பிறக்கும் என நம்புவோமாக!

(தொடரும்)

சங்கர - ஷண்மத சிறப்பு மலர்

சங்கர - ஷண்மத மகாநாட்டை ஒட்டி, இம் மகாநாட்டின் நிறைவு நாளன்று வெளியிடப்பட்ட சிறப்பு மலர், வருகிற பூர்ணிமையன்று (ஜூன் 29) ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பரமாசாரியர்களிடம் சமர்ப்பிக்கப்படும். அதன்பிறகே மலர் விற்பனைக்கு வெளியிடப்படும். விலை அப்போது அறிவிக்கப்படும்.

இம்மலர் வெளிநாட்டு அறிஞர்களை முன்னிட்டே முக்கியமாக வெளியிடப்படுவதால் ஆங்கிலத்தில் மட்டுமே பிரசுரிக்கப்படுகிறது.

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

கிள்ளிவளவன் யானை

சூடு முடிவதற்கும் சமையல் ஆவதற்கும் சரியாயிருந்தது. கட்டுக் கட்டாகத் தாமரை இலைகளைக் கொண்டு வந்து அவ்வீரர்களின் முன்னால் போட்டார்கள். பிறகு பொங்கலும் கறியமுதும் கொண்டு வந்து பரிமாறினார்கள்.

வீரர்கள் சாப்பிடத் தொடங்கியபிறகு இளவரசர் அவர்களிடையே பந்தி விசாரணை செய்து கொண்டு வலம் வந்தார். அங்கங்கே நின்று அவ்வீரர்களின் உடல் நலத்தைப் பற்றி விசாரித்தார். அவர்களுடைய ஊரையும், பெயரையும் விசாரித்தார். அப்படி விசா



ரிக்கப்பட்டவர்கள் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார்கள். பக்கத்திலிருந்தவர்கள் அவர்களுடைய அதிர்ஷ்டத்தைப் பாராட்டினார்கள்.

ஏற்கனவே சோழ நாட்டு வீரர்களுக்கெல்லாம் இளங்கோவின் பேரில் மிக்க அபிமானம் இருந்தது. சமீபத்தில் அந்த அபிமானம் பன்மடங்கு பெருகியிருந்தது. தாய் நாட்டிலிருந்து தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தருவிப்பதற்கு இளவரசர் பெரும் பிரயத்தனம் செய்ததை அவர்கள் அறிந்திருந்தார்கள். அத்துடன் சாதாரணப் போர் வீரர்களுடனே இளவரசர் சம நிலையில் கலந்து பழகி க்ஷேமம் விசாரித்து அவர்களுக்கு உற்சாகத்தை அளித்து வந்தார். இந்தக் குணாதிசயம் இளவரசரை அவ்வீரர்கள் தங்கள் கண்ணுக்குக் கண்ணாகக் கருதுமாறு செய்திருந்தது.

ஆகையால், வீரர்கள் அங்கங்கே இளவரசரை நிறுத்த முயன்றார்கள். துணிச்சலை வருவித்துக் கொண்டு அவரை ஏதேனும் கேள்வி கேட்பார்கள். முக்கியமாக, அவர்களில்பலரும் கேட்டகேள்வி, ''புலத்தியநகரத்தின்மீது படையெடுப்பு எப்போது?''என்பதுதான். இந்தக் கேள்விக்கு விடையாக இளவரசர் ''புலத்திய நகரின்மீது படை எடுத்து என்ன பயன்? மகிந்தன் ரோஹணத்துக்கு அல்லவா போயிருக்கிறான்?'' என்று சிலருக்குச் சொன்னார். ''கொஞ்சம் பொறுத்திருங்கள்; மழை காலம் போகட்டும்'' என்று வேறு சிலரிடம் சொன்னார். யுத்தமின்றிச் சோம்பி இருப்பதில் சில வீரர்கள் தங்கள் அதிருப்தியை வெளியிட்டுக் கொண்டார்கள். வேறு சிலர் ''தாங்கள் மாதமொரு முறையாவது இவ்விதம் வந்து எங்களைப் பார்த்து விட்டுப் போனால் பொறுமையாயிருக்கிறோம்'' என்றார்கள்.

பந்தி விசாரணை முடிந்ததும் இளவரசர் சற்று ஒதுப்புறமாக அவருக்கென அமைத்திருந்த படை வீட்டுக்குச் சென்றார். வந்தியத்தேவனையும் ஆழ்வார்க்கடியானையும் அவர் தம்முடன் அழைத்துக் கொண்டு போனார்.



"இந்த வீரர்களின் உற்சாகத்தைப் பார்த்தீர்கள் அல்லவா? தஞ்சையிலிருந்து மட்டும் தகுந்த ஒத்துழைப்புக் கிடைத்திருந்தால் இதற்குள் இந்த இலங்கைத் தீவு முழுவதும் நம் வசமாகியிருக்கும். அருமையான சந்தர்ப்பம் வீணாகிப் போய்விட்டது. இங்கே மழை காலத்தில் யுத்தம் நடக்க முடியாது. இன்னும் மூன்று நாலு மாதம் நம் வீரர்கள் சும்மா இருக்க வேண்டியதுதான்!" என்று சொன்னார்.

இதைக் கேட்ட திருமலை, "இளவரசே! தாங்கள் இதைப் பற்றிக் கவலைப்படுவது வியப்பாயிருக்கிறது. அங்கேயோ சோழ சாம்ராஜ்யத்துக்கே பேரபாயம் நேர்ந்திருக்கிறது! விஜயாலய சோழர் ஸ்தாபித்த ராஜ்யம், பராந்தகராலும் சுந்தர சோழராலும் பல்கிப் பெருகிய மகாராஜ்யம், உள் அபாயங்களினால் சின்னாபின்னமாகிவிடும் போலிருக்கிறது!" என்றான்.

"ஆம், ஆம்! நீங்கள் இருவரும் முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் என்னுடைய அற்பக் கவலையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன். நல்லது: இப்போது நீங்கள் சொல்ல வேண்டியதையெல்லாம் விவரமாகச் சொல்லுங்கள். முதலில் இவர் ஆரம்பிக்கட்டும்!" என்று இளவரசர் வந்தியத்தேவனைச் சுட்டிக் காட்டினார்.





வந்தியத்தேவன் உடனே தன் கதையைத் தொடங்கினான். காஞ்சியிலிருந்து தான் புறப்பட்டது முதல், கண்டவை கேட்டவை எல்லாவற்றையும் கூறினான். பற்பல அபாயங்களிலிருந்து தப்புவதற்குத் தான் புரிந்த சாகஸச் செயல்களைக் குறித்து அதிகமாக விஸ்தரிக்க விரும்பாதவன் போல் காட்டிக் கொண்டு, அதே சமயத்தில் தன் பிரதாபங்களை வெளியிட்டான். கடைசியில், ''ஐயா! தங்கள் அருமைத் தந்தையாரைச் சிறையில் வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள். நெருங்கிய பந்துக்களும் பெருந்தர அதிகாரிகளும் சிற்றரசர்களும் சேர்ந்து பயங்கரமான சதி செய்கிறார்கள். இதனாலெல்லாம் தங்கள் சகோதரி இளையபிராட்டி பெருங் கவலையில் ஆழ்ந்திருக்கிறார். ஆகையால் தாங்கள் உடனே புறப்பட்டு என்னுடன் பழையாறைக்கு வர வேண்டும். ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது!'' என்று முடித்தான்.

பிறகு ஆழ்வார்க்கடியான் தனது வரலாற்றைக் கூறினான். வந்தியத்தேவன் கூறியவற்றையெல்லாம் அவனும் ஆமோதித்தான். அத்துடன் திருப்புறம்பயம் பள்ளிப்படையருகில் நள்ளிரவில் நடந்த கொலைகாரர்களின் சதியைப் பற்றியும் கூறினான். சோழ நாட்டு நிலைமை இவ்வளவு அபாயகரமாயிருப்பதால் தற்சமயம் இளவரசர் அங்கு வராமல் இருப்பதே நல்லது என்று முதன் மந்திரி அநிருத்தர் சொல்லி அனுப்பிய செய்தியை மறுபடியும் வற்புறுத்திக் கூறினான்.

''தாங்கள் சோழ நாட்டுக்குத் தற்சமயம் வராமலிருப்பது மட்டுமல்ல; இங்கேயும் படையெடுப்பை மேலும் விஸ்தரித்துக் கொண்டு போக வேண்டாம் என்று முதன் மந்திரி கேட்டுக் கொள்கிறார். படைகளையெல்லாம் திரட்டி வட இலங்கையில் சேர்த்து வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறார். சதிகாரர்கள் சீக்கிரத்தில் வெளிப்பட்டு வந்து தங்கள் உண்மை சொரூபத்தைக் காட்டுவார்கள். அச்சமயம் இப்போது இலங்கையிலுள்ள படை மிக்க உபயோகமாயிருக்கும் என்று முதன் மந்திரி அபிப்பிராயப்படுகிறார். பாண்டிய நாட்டில் தற்சமயம் உள்ள கைக்கோளர் படை, வன்னியர் படை, வேளாளர் படை — மூன்றும் இளவரசருக்காக உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்யக் காத்திருக்கின்றன. இதையும் தங்களுக்குத் தெரிவிக்கும்படி முதன் மந்திரி எனக்குக் கட்டளையிட்டார்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''திருமலை! உன் குருநாதர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்? பாடலிபுரத்துச் சாணக்கியரைப் போல் இவர் அன்பில் சாணக்கியர் என்று தம்மை எண்ணிக் கொண்டிருக்கிறாரா? என் உற்றார் உறவினரோடு நான் சண்டை போட வேண்டும் என்கிறாரா?'' என்று இளவரசர் ஆத்திரமாய்க் கேட்டார்.

''இல்லை, ஐயா! அநிருத்தர் அவ்விதம் சொல்லவில்லை. ஆனால் சக்கரவர்த்திக்கு விரோதமாகச் சதி செய்கிறவர்களை,— சாம்ராஜ்யத்துக்குத் துரோகம் செய்ய முயற்சி தொடங்கியிருப்பவர்களை, — சமயம் பார்த்துத் தண்டிக்க வேண்டும் என்கிறார். அதற்கு உதவி புரிவது தங்கள் கடமை அல்லவா?'' என்றான் திருமலை.

''அதற்கு நான் எப்படி அதிகாரியாவேன்? சதி நடப்பது உண்மையானால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது சக்கரவர்த்தியல்லவா? என் தந்தையின் கட்டளையின்றி நான் எப்படி இந்தக் காரியத்தில் பிரவேசிக்க முடியும்?'' என்றார் இளவரசர்.

வந்தியத்தேவன் இப்போது குறுக்கிட்டு, ''இளவரசே! தங்கள் தந்தை இப்போது சுயாதீனமாயில்லை. பழுவேட்டரையர்கள் அவரைச் சிறைவைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள். யாரும் நெருங்க முடியாதபடி அரண்மனைக்குள்ளே வைத்திருக்கிறார்கள். தங்கள் தமையனாரோ தஞ்சைக்கு வருவதில்லை என்று விரதம் வைத்துக் கொண்டிருக்கிறார். இந்த நிலைமையில் சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பது தங்கள் பொறுப்பல்லவா? உடனே பழையாறைக்கு வரவேண்டியது தங்கள் கடமை அல்லவா?'' என்றான்.

''இளவரசர் பழையாறைக்கு வர வேண்டிய அவசியம் என்ன? அதுதான் எனக்குத் தெரியவில்லை!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

இளவரசர் சற்று சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு, ''மண்ணாசை மிகப் பொல்லாதது. இராஜ்யத்தின் பேரில் உள்ள ஆசையினால் இவ்வுலகில் என்னென்ன பயங்கரமான பாவங்கள் நடந்திருக்கின்றன? இன்று சிம்மகிரிக் கோட்டைக்குப் போயிருந்தேனல்லவா? அந்தக் கோட்டையின் வரலாறு உங்களுக்குத் தெரியுமா?'' என்றார்.

''நான் கேட்டதில்லை'' என்றான் வந்தியத்தேவன்.

''சொல்கிறேன், கேளுங்கள்! சுமார் ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு இந்த இலங்கைத் தீவைத் தாதுசேனன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள்.

ஒருவன் பெயர் காசியபன்; இன்னொருவன் மகல்லன். தாதுசேனனின் சேனாபதியும் காசியபனும் சேர்ந்து சதியாலோசனை செய்தார்கள். காசியபன் தன் சொந்தத் தந்தையைச் சிறையில் அடைத்து விட்டுச் சிங்காதனம் ஏறினான். மகல்லன் கடல் கடந்து தமிழ் நாட்டுக்கு ஓடிப் போனான். சில நாளைக்குப் பிறகு தாதுசேனனின் சிறையைச் சுற்றிச் சுவர் எழுப்பி அடைத்து அவனைக் கொன்று விட்டார்கள். இந்தக் கொடூர பாவத்தைச் செய்த காசியபனுக்குத் தன் சகோதரன் மகல்லன் திரும்பி வந்து பழிக்குப் பழி வாங்குவான் என்ற பீதி உண்டாகி விட்டது. அதற்காக இந்த ஸிம்மகிரிக் குன்றுக்கு வந்தான். இதன் உச்சியில் கோட்டை கட்டிக் கொண்டு வசித்து வந்தான். செங்குத்தான குன்றாகையால் பகைவர்கள் அதன் பேரில் ஏறிக் கோட்டையைப் பிடிப்பது இயலாத காரியம் என்று நினைத்தான். இம்மாதிரி பதினெட்டு வருஷங்கள் ஒளிந்து வாழ்ந்திருந்தான். கடைசியில் ஒரு நாள் மகல்லன் தன் உதவிக்குப் பாண்டிய ராஜாவின் சைன்யத்தையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். ஸிம்மகிரிக் கோட்டையை அணுகினான். அச்சமயத்தில் காசியபனின் புத்தி பேதலித்து விட்டது. அத்தனை வருஷம் கோட்டையில் ஒளிந்திருந்தவன் அசட்டுத் தைரியத்துடன் வெளிவந்து போராடி இறந்தான்! அப்பேர்ப்பட்ட பாதகன், — தந்தையைக் கொன்ற பாவி, — கட்டிய கோட்டையில் சில அற்புதமான வர்ணச் சித்திரங்கள் இருக்கின்றன. இன்று சீன யாத்திரீகர்களுடன் போயிருந்த போது பார்த்தேன். அடடா! அந்தச் சித்திரங்களின் அழகை என்னவென்று சொல்வது? பல நூறு வருஷங்களுக்கு முன்பு எழுதியவை. ஆனால் இன்றைக்கும் சிறிதும் வர்ணம் மங்காமல் புத்தப் புதிய சித்திரங்கள் போல் இருக்கின்றன....''

''ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கலாமா?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''தயக்கம் ஏன்? தாராளமாய்க் கேட்கலாம்.''

''ஸிம்மகிரிக் கோட்டை இன்னும் பகைவர் படைகளின் வசத்திலேதானே இருக்கிறது?''

''ஆமாம்; அதைக் கைப்பற்றும் முயற்சியை இப்போது தொடங்கும் உத்தேசம் எனக்கு இல்லை. அதனால் வீணான உயிர்ச் சேதம் ஏற்படும்.''

''அதைப் பற்றி நான் கேட்கவில்லை, ஐயா! பகைவர் கோட்டைக்குள் தாங்கள் பிரவேசித்தது உசிதமா என்று கேட்டேன். சீன யாத்திரீகர்களுக்கு யானைப் பாகனாகத் தாங்கள் போக வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? யானையின் கழுத்தில் தங்களைப் பார்த்ததும் என் கண்களை நம்புவதா இல்லையா என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டு விட்டது. தங்களுடைய புருவத்தின் நெரிப்பைப் பார்த்துத்தான் சந்தேகம் தெளிந்து நிச்சயப்படுத்திக் கொண்டேன். இப்படித் தங்கள் உயிருக்கு அபாயத்தை ஏற்படுத்திக் கொள்ளலாமா?''

'' என் உயிர் மட்டும் அவ்வளவு உயர்ந்ததா, திருமலை! எத்தனை சோழ



நாட்டு வீரர்கள் இந்த இலங்கையில் வந்து உயிரை விட்டிருக்கிறார்கள்?....''

'' அவர்கள் போர்க்களத்தில் உயிர் துறந்தார்கள். தாங்கள் அநாவசியமாகத் தங்களை அபாயத்துக்கு உள்ளாக்கிக் கொண்டீர்கள்!''

''அநாவசியமில்லை; இரண்டு காரணங்கள் உண்டு. ஸிம்மகிரி சித்திரங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு வெகுநாளாக இருந்தது. அந்த ஆசையை இன்று பூர்த்தி செய்து கொண்டேன்....''

''இளவரசே! இன்னொரு காரணம்?''

''பார்த்திப பல்லவர் திரிகோணமலையில் வந்து இறங்கினவுடனே, எனக்குச்

செய்தி கிடைத்தது. அவரை இன்று பார்க்க விரும்பவில்லை. ஏனெனில்....''

''ஏனெனில்?....''

''மாதோட்டத்துக்கு முதன் மந்திரி வந்திருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியும். அவரிடமிருந்து செய்தி வரும் என்று எதிர்பார்த்தேன். இரண்டு மூத்தவர்களிடமிருந்து செய்தி வந்தால், முதலில் கிடைக்கிற செய்தி யின்படிதானே நான் நடந்தாக வேண்டும்?''

வந்தியத்தேவன், ''ஆகா! அப்படிச் சொல்லுங்கள். என் கட்சிதானே ஜயித்தது?'' என்று குதூகலித்தான்.

''அரசே! இவன் தங்களைத் தந்திரத்தினால் ஏமாற்றி விட்டான்....''

''அவன் ஏமாற்றவில்லை. நானாகவே ஏமாந்தேன். உன்னை அழைத்து வருவதற்கு வைத்திருந்த வீரனை இவன் குதிரை மேலிருந்து தள்ளிவிட்டு அக் குதிரை மீது தான் ஏறிக் கொண்டு வந்ததை நான் கவனித்து விட்டேன். இவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்பினேன்......''

''நல்ல பாடம் கற்பித்தீர்கள்! ஒவ்வொரு பாடமும் ஒரு மணங்கு நிறையிருக்கும். இப்போது நினைத்தாலும் என் முதுகும் மார்பும் வலிக்கின்றன! ஓலை கொண்டு வந்த தூதனை இப்படித்தானா நடத்துவது? போனால் போகட்டும்; தாங்கள் மட்டும் என்னுடன் பழையாறைக்கு வருவதாயிருந்தால்..''

''எனக்கு ஒரு பழைய பாடல் ஞாபகம் வருகிறது! திருமலை! என் முன்னோர்களில் பெருங்கிள்ளி வளவன் என்று ஒரு மன்னர் இருந்தார். அவரிடம் ஓர் அதிசயமான யானை இருந்தது. அதன் ஒரு கால் காஞ்சியில் இருக்கும்; இன்னொரு காலினால் தஞ்சையை மிதிக்கும்; மற்றொரு கால் இந்த ஈழ நாட்டை மிதிக்கும். நாலாவது கால் உறையூரில் ஊன்றி நிலைத்திருக்கும்.

> 'கச்சி ஒரு கால் மிதியா, ஒரு காலால்
> தத்துநீர்த் தண்நஞ்சை தான்மிதியாப் - பிற்றையும்
> ஈழம் ஒரு கால் மிதியா வருமே நம்
> கோழியர் கோக் கிள்ளி களிறு!'

என்று அற்புதமான கற்பனையுடன் ஒரு புலவர் பாடியிருக்கிறார். இந்த இலங்கையில் மந்தை மந்தையாக ஆயிரம் ஆயிரம் யானைகள் இருக்கின்றன. இருந்து என்ன பயன்? புலவருடைய கற்பனை யானையைப் போல் ஒரு யானை இருந்தால் நானும் ஒரே சமயத்தில் காஞ்சியிலும் பழையாறையிலும் மதுரையிலும் இலங்கையிலும் இருக்கலாம் அல்லவா?''

புலவரின் யானையைப் பற்றிக் கேட்டதும் வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''அப்படிப்பட்ட யானைதான் இல்லையே? தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று திருமலை கேட்டான்.

''சந்தேகம் என்ன? பழையாறைக்கு வருவதென்றுதான் முடிவாகி விட்டதே?'' என்றான் வந்தியத்தேவன்.

''உங்கள் சண்டையைக் கொஞ்சம் நிறுத்தி வையுங்கள். நாளை அநுராதபுரம் போவோம். அங்கே பார்த்திப பல்லவரை நான் எப்படியும் சந்தித்தாக வேண்டும். அவர் சொல்வதையும் கேட்டு விட்டுத்தான் முடிவு செய்ய வேண்டும்'' என்றார் இளவரசர்.

முப்பத்துமூன்றும் அத்தியாயம்

சிலை சொன்ன செய்தி

மறு நாள் காலையில் சூரியன் உதயமாவதற்குள் அருள்மொழி வர்மர், ஆழ்வார்க்கடியான், வந்தியத்தேவன் ஆகிய மூவரும் அநுராதபுரத்துக்குப் புறப்பட்டார்கள். சிறிது தூரம் காட்டுப் பாதையில் வந்த பிறகு இராஜ பாட்டையை அடைந்தார்கள். வேறு வீரர்கள் யாரையும் இளவரசர் தம்முடன் மெய்காவலுக்கு அழைத்து வராதது வந்தியத்தேவனுக்கு வியப்பை அளித்தது. ஆனால் அன்றையப் பிரயாணத்தில் அவனுக்கிருந்த உற்சாகத்தைப் போல் அதற்கு முன் என்றுமிருந்ததில்லை. காலை நேரத்தில் இருபுறமும் மரங்களடர்ந்த அந்த இராஜ பாட்டையில் பிரயாணம் செய்வதே ஓர் ஆனந்த அநுபவம். பழையாறை அரசிளங் குமரி தன்னிடம் ஒப்புவித்திருந்த வேலையைச் செய்து முடித்து விட்டோம் என்ற பெருமித உணர்ச்சி அவன் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. அது மட்டுமா? பல வருஷங்களாக அவன் இருதயத்தில் பொங்கிக் கொண்டிருந்த ஆசையும் நிறைவேறி விட்டது. சோழவள நாட்டின் செல்லப் பிள்ளையைப் பார்த்தாகி விட்டது. நாடு நகரமெல்லாம் மக்கள் எந்த வீர இளைஞரின் வீரப் பிரதாபங்களையும் குணாதிசயங்களை

யும் பாடிப் புகழ்ந்து கொண்டிருந்தார்களோ, — அந்த அரசிளங் குமரரைச் சந்தித்தாகி விட்டது. அந்தச் சந்திப்புதான் எவ்வளவு அதிசயமான சந்திப்பு? — அருள்மொழிவர்மர் ஒரு விசித்திரமான மனிதர் என்று தான் கேள்விப்பட்டிருந்தது உண்மைதான்! திடீரென்று குதிரையைத் திருப்பித் தன்னைத் தாக்கித் திக்குமுக்காடச் செய்து விட்டாரே? அவர் சேனைக்குத் தலைமை வகித்துச் செல்லுமிடங்களிலெல்லாம் வெற்றி மேல் வெற்றியாக இருந்து வருவதின் இரகசியமும் இதுதான் போலும்! பகைவர்கள் எதிர்பாராத சமயத்தில் எதிர்பாராத இடத்தில் தாக்குவதே இவருடைய போர் முறை போலும்! ஆனால் இவரது இடைவிடா வெற்றியின் இரகசியம் இது மட்டுந்தானா? சேனா வீரர்களுடன் எவ்வளவு பவ்யமாக இவர் பழகுகிறார்? எப்படி அவர்களைத் தம் அன்புக்கு வசப்படுத்தி வைத்திருக்கிறார்!

போர் வீரர்களை மட்டுந்தானா? தாம் வெற்றிகொண்ட நாட்டின் மக்களையும் எப்படி வசீகரப்படுத்தி வைத்திருக்கிறார்? சமீபத்தில் மாபெரும் போர் நடந்த நாடு என்று இதைச் சொல்ல முடியுமா? சாலைகளில் மக்கள் எவ்வளவு உல்லாசமாக நடந்து கொண்டிருக்கிறார்கள்! இரு பக்கங்களிலுமுள்ள கிராமங்களில் ஜனங்கள் எப்படி நிர்ப்பயமாகவும் கவலையின்றியும் தத்தம் காரியங்களையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்? மக்களின் முகங்களில் பீதியின் அறிகுறியோ துயரத்தின் சின்னமோ சிறிதும் காணப்படவில்லையே? கலகல வென்று



பெண்களும் குழந்தைகளும் சிரிக்கும் சத்தம்கூட அடிக்கடி காதில் விழுகிறதே! இது என்ன விந்தை! இவர் எத்தகைய விந்தையான மனிதர்! — வெற்றி கொண்ட நாட்டு மக்களிடமிருந்து உணவுப் பொருள்களைக் கைப்பற்றக் கூடாது என்று இளவரசர் பிடிவாதம் பிடித்துச் சோழ நாட்டிலிருந்து சைன்யத்துக்கு உணவுப் பொருள் வர வேண்டும் என்று வற்புறுத்தியதும், அதன் காரணமாகப் பழுவேட்டரையர்களுக்கு ஏற்பட்ட கோபமும், அவர்கள் சுந்தர சோழரிடம் புகார் கூறியதும், — இவையெல்லாம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தன. அன்றியும், ஆதித்த கரிகாலர் கையாளும் கொடூரமான போர் முறையையும் அருள்மொழி வர்மரின் தயாளம் பொருந்திய தர்ம யுத்த முறையையும் அவன் தன் மனத்துக்குள்ளே ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான். சில நாளைக்கு முன்பு வரையில் தன்னுடைய எஜமானராயிருந்த ஆதித்த கரிகாலரைப் பற்றி எவ்விதத்திலும் குறைவாக எண்ணுவது அவனுக்கே பிடிக்கவில்லை. ஆயினும் அந்த அநுராதபுரத்து இராஜ பாட்டையில் இருபுறமும் வசித்த கிராம ஜனங்களின் மலர்ந்த முகங்களைப் பார்க்கும்போதெல்லாம் அவன் மேற்கண்டவாறு ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அம்மம்மா! ஆதித்த கரிகாலர் யுத்தம் செய்து திரும்பிய நாடுகளில் இத்தகைய காட்சிகளைக் காண முடியுமா? எங்கெங்கும் ஒரே ஓலக் குரல் அல்லவா கேட்டுக் கொண்டிருக்கும்?

இத்தகைய அபூர்வ குணாதிசயம் படைத்த இளவரசருடன் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும். எவ்வளவோ காரியங்களைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று வந்தியத்தேவனுடைய உள்ளம் துடிதுடித்தது. ஆனால் புரவிகளின் பேரில் ஆரோகணித்து விரைவாகச் சென்று கொண்டிருக்கும் சமயத்தில் பேசுவதற்கு இடம் எங்கே? — ஆம். பேசுவதற்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் மட்டும் அவனுக்குக் கிடைத்தது.

அநுராதபுரத்துக்குக் கிட்டத்தட்ட போய்க் கொண்டிருந்தபோது சாலை ஓரத்தில் பெரியதொரு புத்த பகவானின் சிலை நிற்பதை வந்தியத்

தேவன் கண்டான். இம்மாதிரி சிலைகள் இலங்கையில் பற்பல இடங்களிலும் இருந்தபடியால் அதைப் பற்றி வந்தியத்தேவன் அதிக கவனம் செலுத்தவில்லை. ஆனால் பொன்னியின் செல்வர் அச்சிலையின் அருகில் குதிரையைச் சடேரென்று இழுத்துப் பிடித்து நிறுத்தியதும் இவனும் நிற்க வேண்டியதாயிற்று. சற்று முன்னாலேயே போய்க் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானும் குதிரையை நிறுத்தி இவர்கள் பக்கம் திரும்பினான்!

பொன்னியின் செல்வர் சற்று நேரம் அந்தப் புத்த பகவானுடைய கம்பீரமான சிலையைக் கவனமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''அடடா! என்ன அற்புதக் கலை!'' என்றார்.

''எனக்கு ஒரு அற்புதமும் தெரியவில்லை. இந்த நாட்டில் எங்கே பார்த்



தாலும் இத்தகைய பிரம்மாண்டமான புத்தர் சிலைகளை வைத்திருக்கிறார்கள். எதற்காகவோ தெரியவில்லை!'' என்றான் வந்தியத்தேவன்.

இளவரசர் வந்தியத்தேவனைப் பார்த்துப் புன்னகை செய்தார். ''மனத்தில் உள்ளதை உள்ளபடி பேசுகிறீர். அதில் எனக்கு மகிழ்ச்சி!'' என்றார்.

''இளவரசே! வல்லவரையர் இன்றைக்குத்தான் உண்மை பேசுவதென்கிற வழக்கத்தைக் கைக் கொண்டிருக்கிறார்!'' என்றான் திருமலை.

''வைஷ்ணவரே! எல்லாம் சகவாச தோஷந்தான்! வீர நாராயணபுரத்தில் உம்மைப் பார்த்தது முதல் என் நாவில் கற்பனா சக்தி தாண்டவமாடி வந்தது. இளவரசரைப் பார்த்ததிலிருந்து உண்மை பேசும் வழக்கம் வந்துவிட்டது!'' என்றான் வந்தியத்தேவன்.

அவர்களுடைய சொற்போரை இளவரசர் கவனிக்கவில்லை. சிலையின் தோற்றத்தில் ஆழ்ந்திருந்தார்.

'' உலகத்திலேயே சிற்பக் கலையின் அற்புதம் பூரணமாக விளங்கும் வடிவங்கள் இரண்டுதான். ஒன்று நடராஜர்; இன்னொன்று புத்தர்'' என்றார்.

''ஆனால் நடராஜ வடிவங்களை இம்மாதிரி பிரம்மாண்ட வடிவங்களாக நம் நாட்டில் செய்வதில்லையே?''

''இலங்கையில் முற்காலத்தில் இருந்த மன்னர்களில் சிலர் மகாபுருஷர்கள். அவர்கள் ஆண்ட ராஜ்யம் சிறியது. ஆனால் அவர்களுடைய இருதயம் பெரியது; அவர்களுடைய பக்தி மிகப் பெரியது. புத்தபகவானிடம் அவர்களுடைய பக்தியை இப்படிப் பெரிய வடிவங்களை அமைத்துக் காட்டினார்கள். புத்த சமயத்தில் அவர்களுடைய பக்தியைப் பெரிய பெரிய ஸ்தூபங்களை அமைத்துக் காட்டினார்கள். இந்த நாட்டில் உள்ள புத்தர் சிலைகளையும் விஹாரங்களையும் ஸ்தூபங்களையும் பார்த்துவிட்டு நம் சோழ நாட்டிலுள்ள சின்னஞ்சிறு சிவன் கோவில்களை நினைத்தால் எனக்கு அவமானமாயிருக்கிறது!'' என்றார் பொன்னியின் செல்வர்.

இவ்விதம் சொல்லிவிட்டுக் குதிரையிலிருந்து இறங்கி இளவரசர் புத்தர் சிலையண்டை சென்றார். சிலையின் பத்ம பாதங்களையும் அந்தப் பாதங்களை அலங்கரித்த தாமரை மொட்டுக்களையும் சிறிது நேரம் கவனமாகப் பார்த்தார். பின்னர் புத்தர் சிலையின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுத் திரும்பி வந்து பழையபடி குதிரையின் மீது ஏறினார்.

குதிரைகள் சற்று மெதுவாகவே சென்றன. ''ஏதேது? இளவரசர் புத்த மதத்தைச் சேர்ந்து விடுவார்போலிருக்கிறதே!'' என்று வந்தியத்தேவன் திருமலையிடம் சொன்னது இளவரசர் காதில் விழுந்தது.

அவர்கள் இருவரையும் பொன்னியின் செல்வர் பார்த்து, ''புத்த பகவானிடம் என்னுடைய பக்தி காரணார்த்தமானது. அந்தப் புத்தர் சிலையின் பத்ம பாதங்கள் எனக்கு ஒரு முக்கியமான செய்தியை அறிவித்தன!'' என்றார்.

''ஆகா! எங்கள் காதில் ஒன்றும் விழவில்லையே?''

'' மௌன பாஷையில் அச்செய்தி எனக்குக் கிடைத்தது.''

''அது என்ன செய்தி? எங்களுக்குத் தெரியலாமா?''

''இன்றிரவு பன்னிரண்டு நாழிகைக்கு அநுராதபுரத்தில் சிம்மதாரைத் தடாகத்துக்கு அருகில் நான் வரவேண்டுமென்று பகவானுடைய பாதமலர்கள் எனக்கு அறிவித்தன!'' என்றார் பொன்னியின் செல்வர். (தொடரும்)


நியாயமான
விலையில்
தரமான உடை





ராமாயணம்

ராஜாஜி

15. பரசுராமர்

அயோத்தியில் தம்மிடம் ஒப்புவித்த ராஜகுமாரர்களை மிதிலையில் தசரதனிடம் க்ஷேமமாக ஒப்புவித்துவிட்ட விசுவாமித்திர மகாமுனிவர் மங்கள காரியங்கள் முடிந்தவுடன் இரண்டு அரசர்களிடமும் விடை பெற்றுக்கொண்டு இமய மலைக்குச் சென்றார். இராமாவதார சரித்திரத்தில் விசுவாமித்திரருடைய பங்கு இத்துடன் முற்றிற்று.

இராம சரித்திரம் என்கிற மகா கோபுரத்துக்கு விசுவாமித்திரர் அஸ்திவாரக்கல் என்றே சொல்லலாம். இதற்குப் பிறகு விசுவாமித்திரரைப் பற்றி ராமாயணத்தில் ஒன்றுமில்லை. வால்மீகி ராமாயணத்தில் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் : ஒரு காண்டத்தில் மிக முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளும் பாத்திரங்கள் அந்தக் காண்டத்தோடு வெகுவாக மறைந்து போகிறார்கள். பால காண்டத்து விசுவாமித்திரர் பிறகு காணப்படுவதே இல்லை. அயோத்தியா காண்டத்துக் கைகேயி பிறகு எங்கேயோ பேச்சின்றி மறைந்து போகிறாள். குகனும் அப்படியே, பரதனும் இவ்வாறே. சித்திரக் கூடத்திலிருந்து திரும்பிப் போனவனை மறுபடியும் ராமன் அயோத்தி திரும்பும் வரையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் காண்பதில்லை. ராமனுடைய பல கஷ்டங்களிலும் கவலைகளிலும் பரதனைக் கவி நம் முன் கொண்டு



வருவதில்லை. சாதாரண நாடகங்களில் வரும் பாத்திரங்களைப் போல் வால்மீகியின் இதிகாசத்திலுள்ள பாத்திரங்கள் கடைசி வரையில் நின்று அவ்வப்போது தகுந்த சமயங்களில் திரும்பி வந்து தங்களைக் காட்டிக் கொள்ளுகிறதில்லை. கதாபாத்திரங்களை விமரிசனம் செய்வதில் விசேஷ ரஸம் காணும் நம்முடைய நாவலர்கள் இதைக் கவனத்தில் வைக்க வேண்டும்.

விவாகம் முடிந்ததும் தசரத சக்கரவர்த்தி அயோத்தியைக்குத் திரும்பினான். அவனுடைய பெரும் பரிவாரமும் கூடச் சென்றது.

வழியில் ஓர் இடத்தில் திடீரென்று அபசகுனங்கள் தென்பட்டன. கவலைப்பட்ட தசரதன் காரணம் என்னவென்று வசிஷ்டரைக் கேட்டான்.

''கெட்ட நிமித்தங்கள் உண்மையே. ஆயினும் கெடுதலில்லை. பறவைகளின் குறிகள் அசுபமாக இருந்தாலும் தரையில் நடக்கும் பிராணிகளின் குறிகள் சுபமாகவே இருக்கின்றன. ஆகையினால் பயத்துக்குக் காரணமில்லை'' என்றார்.

இவ்வாறு ரிஷியும் அரசனும் பேசிக் கொண்டிருக்கையிலேயே பயங்கரமான காற்று வீசிற்று. மரங்கள் ஒடிந்து விழுந்தன. பூமியில் ஒரு பெரிய அதிர்ச்சி உண்டாயிற்று. புழுதி உயரக் கிளம்பிச் சூரியனை மறைத்தது. எட்டுத் திக்குகளும் இருண்டு விட்டன. எல்லாருமே பயந்து போனார்கள். பிறகு காரணம் கண்டார்கள். க்ஷத்திரியர் கூட்டத்துக்கே யம



னாக அவதரித்த பரசுராமர் வந்து நின்றார்.

தோளில் வில்லும் கோடரியும் கையில் மின்னலைப் போல் ஜொலிக்கும் ஓர் அம்புமாகத் திரிபுரம் எரித்த ருத்திரனைப் போலவே, பார்த்தவர்கள் நடுங்க, தலையில் ஜடையுடன் பரசுராமர் விளங்கினார். அவர் முகத்தினின்று காலாக்கினி போலத் தாங்க முடியாத ஒளி வீசிற்று. தலைமுறை தலைமுறையாக க்ஷத்திரியர்களை ஹதம் செய்த ஜமதக்கினி குமாரர் பரசுராமர் எங்கே சென்றாலும் பூகம்பமும் பெருங் காற்றும் அவருக்கு முன் செல்லும். க்ஷத்திரியர் குலம் நடுங்கும்.



தசரதனுடைய பரிவாரத்திலிருந்த பிராமணர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். ''ஜமதக்கினி முனிவருடைய குமாரரான பரசுராமர் தம்முடைய தந்தை ஒரு அரசனால் கொல்லப்பட்ட காரணத்தினால் க்ஷத்திரிய குலத்தையே அழித்து விடுவதாகப் பிரதிக்ஞை எடுத்து, பிரதிக்ஞைப்படி நூற்றுக் கணக்கான அரசர்களை ஹதம் செய்து சினம் தணிந்ததாக எண்ணினோமே, மறுபடியும் தம் கோர யுத்தத்தை ஆரம்பித்து விட்டாரா என்ன?'' என்று பயந்து மெதுவாகப் பேசிக் கொண்டார்கள். இவ்வாறு சந்தேகித்துக் கொண்டே அவருக்கு அர்க்கியம் சமர்ப்பித்து உபசரித்தார்கள்.

அவர்கள் செய்த உபசாரத்தை அங்கீகரித்துப் பரசுராமர் ராமசந்திரனைப் பார்த்துப் பேசலானார்:

''தசரதன் மகனே! உன் வீரச் செயல்களைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். ஜனகர் சபையில் பரமசிவனுடைய தனுஸை நீ வளைத்து விட்டதும் அது ஒடிந்ததும் எல்லாம் நான் கேட்டு இது எவ்வாறு நடந்தது என்று ஆச்சரியப்பட்டுத்தான் உன்னைப் பார்க்க வந்தேன். இதோ என்னிடம் இருக்கும் வில் நீ ஒடித்த வில்லுக்குச் சமமானது. என் தந்தை ஜமதக்கினி அடைந்த விஷ்ணு தனுசு இது. இதை வளைத்து நாண் ஏற்றுவாய். பாணமும் தருகிறேன். இதைச் செய்யாயேல் நாம் இருவரும் யுத்தம் செய்வோம்'' என்றார்.

தசரதன் இதை யெல்லாம் பார்த்துப் பெருந் திகிலடைந்தான். மகனை எப்படியாவது இந்தக் கொடிய பரசுராமரிடமிருந்து மீட்டு அவன் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று பரிதாப முறையில் பேசினான்.

''நீர் பிராமணர். க்ஷத்திரிய ஜாதியின் பேரில் உமக்கிருந்த கோபம் இதற்கு முந்தியே தணிந்து விட்டதல்லவா? பிறகு தவம் செய்யப் புகுந்தீர் அல்லவா? என் குமாரன் சிறுவன். அவனுடனா நீர் யுத்தம் செய்வது? அபயம் தருவீராக. இனி ஆயுதம் எடுப்பதில்லை என்று தேவராஜனிடம் நீர் வாக்குறுதி செய்து விட்டீர். காசியபருக்கும் பூமண்டல ஆதிபத்தியத்தையும் தந்து விட்டு, மகேந்திர பர்வதத்தில் தவம் செய்யப் போனீரல்லவா? பிரதிக்ஞை தவறலாமா? ராமனிடத்தில் நாங்கள் எல்லோரும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறோம். அவனை நீர் ஹதம் செய்து விட்டால் நாங்களும் கூடவே மடிந்துபோவோம்.'' இவ்வாறு தசரதன் திகிலடைந்து கெஞ்சியதைப் பரசுராமர் கவனிக்கவேயில்லை. அவர் தசரதனைப் பார்க்காமல் ராமசந்திரனோடேயே பேசிக் கொண்டு போனார்.

''விசுவ கர்மாவால் பூர்வம் இரண்டு சிறந்த வில்லுகள் செய்யப்பட்டன. இரண்டும் சம சிறப்பு வாய்ந்தவை. ஒன்று திரிபுரத்தை எரித்த திரியம்பகனுக்குத் தரப்பட்டது. இரண்டாவது வில் திருமாலுக்குத் தரப்பட்டது. அந்த விஷ்ணு தனுசு இது. நீ வளைத்து ஒடித்ததாகச் சொல்லப்படுவது சிவன் வில். இந்த வில்லை நீ வளைக்க முடியுமா, பார்! வளைத்தாயானால் உன் வீரியம் எனக்கு நிச்சயமாகும். அப்போது நாமிருவரும் யுத்தம் செய்வோம்'' என்றார்.

இவ்வாறு தமக்குச் சமானம் யாருமில்லை என்று எண்ணி வந்த பரசுராமர் மிக உரத்த குரலில் பேசியதைக் கேட்ட சக்கரவர்த்தித் திருமகன் மெதுவாகவே அடக்கமும் கம்பீரமும் கொண்ட குரலில் பதில் சொன்னான்:

''ஜமதக்கினி புத்திரரே! தந்தை கொல்லப்பட்ட கோபத்தால் நீர் பழி

வாங்கினீர். அதில் நான் குற்றம் காணவில்லை. ஆனால், மற்றவர்களைப் போல் என்னை நீர் அடக்க முடியாது. தயவுசெய்து வில்லைக் கொடும்'' என்று சொல்லித் தசரத ராமன் ஜமதக்கினி ராமரிடமிருந்து வில்லையும் அம்பையும் வாங்கினான். வில்லை வளைத்து அம்பையும் வைத்து நாணையும் இழுத்தான் !

''பிராமணரே ! இப்போது என்ன செய்யச் சொல்கிறீர் ? இந்த அம்பு வீணாகாதே ?'' என்றான் சக்கரவர்த்தித் திருமகன் புன்னகையுடன்.

இரண்டு ராமர்களும் கூடியதைப் பார்க்க, தேவ கந்தர்வ யக்ஷ கணங்கள் ஆகாயத்தில் வந்து நின்றார்கள்.

தசரத ராமன் வில்லை வளைத்ததும் பரசுராமருடைய தேஜஸானது வாடி விட்டது. அவருடைய அவதார சக்தி அந்தக் கணத்தில் மறைந்தது.

''உன் பிரபாவத்தைக் கண்டேன். நீ என்னைக் கர்வபங்கம் செய்ததில் எனக்கு வருத்தமில்லை. நீ யார் என்பதை அறிந்தேன். என் தவம் முழுவதும் உனதாகக் கடவது. ஆனால், காசியபரிடம் நான் செய்த பிரதிக்ஞைப்படி அவருக்குக் கொடுத்து விட்ட பூமியில் நான் இரவில் தங்கக் கூடாது. ஆனபடியால் நான் என் தவ வலிமையால் சூரியாஸ்தமனத்துக்குமுன் மகேந்திர மலைக்குப் போய்ச் சேர வேண்டும். அதற்கு மட்டும் அனுமதிப் பாயாக. மற்றப்படி உன் கையிலிருக்கும் அம்புக்குத் தபோபலம் முழுதும் இரையாகக் கடவது'' என்று சொல்லி விட்டுச் சக்கரவர்த்தித் திருமகனைப் பிரதக்ஷணம் செய்து வணங்கித் தாம் வந்த வழியே திரும்பினார். (தொடரும்)

நாடக விமர்சனம்

ஆதி சங்கரர்

வாழும் வகை காட்டி, ஆன்மீக வாழ்வுக்கு ஒரு பாலம் சமைத்து, உலகத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவது பாரதம் கண்ட ஹிந்து சமயம். பழைமையிலே புதுமையைச் சேர்த்துக் கொண்டு, பழைமைக்கும் புதுமைக்கும் பெருமை சேர்க்கும் ஹிந்து மதத்தின் அறங்காவலராக வந்தவர் ஆதிசங்கரர்.

உலகத்திலேயே வாழ்ந்து கொண்டு உலகத்துக்கு அப்பாற்பட்ட அரிய செயல்களையும் செய்ய முடியும் என்று கூறியதோடு மட்டுமின்றித் தம் கூற்றைச் செயலாக்கியும் காட்டிய அவரது வாழ்க்கையைச் சிறந்ததொரு நாடகமாகத் தயாரித்தவர் ஸ்ரீ ஜே. சுகுமார். கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் அளிக்கும் இந்த நாடகம் பரிமளிக்க முதற் காரணம் ஆதிசங்கரராக வரும் ஸ்ரீ டி. என். வெங்கட்ராமனா அல்லது அன்னை ஆர்யாம்பிகையாக வரும் ஸ்ரீமதி எஸ். ஆர். ராஜேசுவரியா என்பதை அத்வைதத்தைப் போலவே பகுத்துக் கூறுவது இயலாத காரியம்.

பால சங்கரனாக மாஸ்டர் ஸ்ரீதர் நடிக்கிறார்; தமது நடிப்பின் மூலம் நாடகமேடையில் நடிக்கிறோம் என்பதையும் கூறாமல் கூறி நடிக்கிறார். ஆம், கோயிலுக்குச் சென்று ஆண்டவனை வலம் வந்தாலும், பேச்சுக்கு மைக்கை நாடி வரும் பணியை அடிபிசகாமல் செய்கிறார்.

உக்கிர பைரவனாக வரும் திரு எம். என். பாலகிருஷ்ணன் தம் தோற்றத்தாலும் நடிப்பாலும் நிறைந்து விளங்குகிறார். பிரின்ஸ் திரு விசுவநாதனும், வி. சுப்பிரமணியமும், நகைச்சுவை இல்லாக் குறையை நிறைக்க முயல்கின்றனர், ஒட்டாத மீசையை ஒட்ட வைக்க முயல்வது போல.

கூடு விட்டுக் கூடு பாய்ந்து இல்லறத்தைத் தெரிந்து கொள்ளும் சங்கரர் தமது தனிப்பான நடிப்பால் உயருகிறார் என்றால் மகனைக் கண்ட தாய் தன் பாசத்தால் உருக்குகிறார் ; ஓரோரு இடத்தில் நடிப்புக்கு இத்தனை மிகை தேவையா என்பதையும் சிந்திக்க வைக்கிறார்.

'கட்டிய வீட்டுக்குப் பழுது சொல்வதா?' என்று கேட்கலாம். கட்டும் முன் பார்த்திருந்தால், குறையைத் தவிர்த்திருக்கலாம். கட்டியபின் பார்த்தால் குறை சொல்வது தானே இயல்பு?

எனவே, பிட்சைக்கு வரும் சங்கரன் 'கனகதாரா ஸ்தவம்' பாடிப் பொற்காக மழை பொழிவதைத் தவிர்த்து, சூசகமாகப் பிட்சையிட்டவர் பணக்காரர்களானதாகக் காட்டியிருக்கலாம்.

சங்கரர் காணும் இல்லறக் காட்சியைத் தவிர்த்திருக்கலாம்; கற்பின் நல்லாளிடம் சென்று வந்த நிகழ்ச்சியைக் கை எரிந்த காட்சியின் மூலம் விளக்கியிருக்கலாம்.

இப்படி எத்தனை குறைகளைக் கூறுவது, ஐந்துக்கு இரண்டு பழுதில்லாத இந்த நாடகத்தில் ?

குறிப்பான வசனங்கள், எடுப்பான காட்சிகள் ஸ்ரீ ஏ. எஸ். ஏ. நாராயணனின் தந்திரக் காட்சி ஜோடனைகள் எல்லாமாகச் சேர்ந்து 'ஆதி சங்கரர்' நாடகத்துக்கு மெருகு கூட்டியுள்ளன. நாடக அமைப்பிலே மேற் கூறுவது போன்ற கவனம் செலுத்தி, அமானுஷிகக் காட்சிகளைத் தவிர்த்து, சூசகம் (Suggestion) மேற்கொள்ளப்பட்டிருந்தால் நாடகம் மேலும் பரிமளித்திருக்கும்.



மத்தூர் மகிஷாசுரமர்த்தனி

அம்பிகையின் அருளும்

"மத்தூர் மகிஷாசுர மர்த்தனியைக் காணவர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார் திரு மீனாட்சி சுந்தரம்.

"ஆகட்டும், பார்க்கலாம்" என்றேன்.

நாட்கள் சென்றன. "என்றைக்கு சார், வருகிறீர்கள், மகிஷாசுர மர்த்தனியைக் காண?" மீண்டும் கேட்டார் மீனாட்சிசுந்தரம்.

"சுபஸ்ய சீக்கிரம்" என்று சொல்லி வைத்தேன். மேலும் பல வாரங்கள் சென்றன.

"வரப் போகிறீர்களா, இல்லையா?" என்று அதட்டினார் அவர், இன்னொரு நாள்.

"எதற்கும் வேளை வர வேண்டும், சுவாமி!" என்று கூறி அனுப்பினேன் அவரை.


கடைசியில், "நீங்கள் வருகிறீர்களா? அல்லது மத்தூர் மகிஷாசுரமர்த்தனியை உங்கள் வீட்டுக்கு வரச் சொல்லவா?" என்று மிரட்டினார் அவர்.

உடனே அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து காலண்டரை எடுத்து, தேதி, கிழமை எல்லாம் நிச்சயம் செய்து அவரைச் சமாதானப் படுத்தினேன். மனுஷன் சொன்னபடி செய்து காட்டி விடுவாரோ என்ற பயம் எனக்கு. தேவி உபாசகர்களுக்குச் சில விசித்திரமான சக்திகளெல்லாம் உண்டு என்று கேள்வி. மீனாட்சி சுந்தரம் ஒரு துரும்புக்குக்கூடத் தீங்கு நினைப்பவராகத் தோன்றவில்லை. அவர் தேவியின் கருணை கடாட்சத்தையும் பிரசாதத்தையுமே கூடக் குறிப்பிட்டிருக்கலாம். என்றாலும், எதற்கு வம்பு? மகிஷாசுரமர்த்தனி சொப்பனத்தில் வந்தால்கூடப் பயமாகத் தானே இருக்கும்? எனவே, குறித்த தேதியில் நண்பர்கள் சிலருடன் கிளம்பி விட்டேன் மத்தூருக்கு, — தெரியாத ஊருக்குவழி தெரிந்தவன் போல்.

காலை உணவு காரில் மணக்கக் கிளம்பிய எங்களுக்குச் சரியான பாதையில்தான் செல்கிறோமா என்ற கவலையில் சிற்றுண்டியின் நினைவே எழவில்லை. சாலை ஓரச் சோலைகள் பலவற்றைக் கடந்த பிறகு பாதை சரியானதுதான் என்பது விசாரித்து அறிந்தபின் உறுதியாயிற்று. உடனே ஞாபகம் வந்தவராக, 'ஷுடே ருசி!' என்றார் ஒரு நண்பர். அவருக்குப் பசி.

மற்றவர்களுக்கு மட்டும் இல்லையா? "நல்ல தோப்பு ஒன்று வரட்டும். இறங்கிச் சாப்பிடுவோம்!" 'பிக்னிக்' தோரணையில் சொன்னார் இன்னொரு நண்பர்.

அதுவரை கூடக் கூட வந்து கொண்டிருந்த சிறு — பெரு தோப்புகள் சட்டென்று மறியல் செய்து விட்டன. திருவள்ளூரைத் தாண்டித் திருத்தணிப் பாதையில் சென்றும் தோப்புக்களைக் காணோம். எனவே, நிபந்தனையைத் தளர்த்தித் தனி மரம் கிடைத்தால் போதுமெனத் தீர்மானித்தோம். அந்த ஆசை கூட நிராசையாயிற்று! பல பல சோதனைகளுக்குப்பின் திருத்தணி முருகன் ஒரு மரத்தைக் காட்டினான். வள்ளிக்காக மரமாகி நின்றவனாயிற்றே! ஒருவேளை எங்களுக்குமே அவன் மரமாக நின்றானோ? அம்மரத்தின் அடியில் சிற்றுண்டியை முடித்துக் கொண்ட நாங்கள் அவனைத் தரிசித்துப் போவதென்று முடிவு செய்தோம்.



திருத்தணி முருகன் கோவில் (படம்: எம். கே. ரங்கஸ்வாமி)

அருவியின் எழிலும்

ரா. ஸ்ரீநாதன்

"முருகனைத் தரிசிக்கப் போவதென்றால், படியேறிப் போக வேண்டுமே!" ஒருவர் கவலை தெரிவித்தார். உண்ட மயக்கம்!

"உங்களை யார் படியேறச் சொன்னார்கள்? வண்டியே முருகன் அருளில் மலையேறும்!" என்றார் மற்றொருவர்.

வாகனாதிகளும் மலைக்கு வரத் திருமுருகனும் திருமலையப்பனைப் போல் மலைப் பாதை சமைத்துக் கொண்டு விட்டான்; காலஞ்சென்ற நம் தமிழ் நாட்டு முதலமைச்சர் அண்ணாதுரை அதனைத் திறந்து வைக்கும் பாக்கியத்தைப் பெற்றார் என்பது நினைவுக்கு வந்தது.

"அப்பனே, முருகா! உன் கருணையே கருணை!"

கோயிலுக்குள் சென்றால் திருப்பணி வெகு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. கோயிலைப் புதுப்பித்து ஏராளமான பொருட் செலவில் கும்பாபிஷேகம் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். பக்தர்கள் போட்டி போட்டுக் கொண்டு தரும் நிதியில் திருப்பணியும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வருகிறது. பிராகாரத்தின் ஒரு புறத்தில் காங்கிரீட் தூண் நிறுத்தி நல்லதொரு மண்டபம் சமைக்க ஏற்பாடாகி வருகிறது. பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டே புருஷனும் பெண்சாதிகளும் திருப்பணியைக் கவனித்து வருகிறார்கள். மனப் புழுக்கத்தைப் போக்கிக் கொள்ள வரும் அன்பர்களின் உடலும் புழுங்கக் கூடாது என்று குளிர்ந்த காற்றுக்கு ஏற்பாடு செய்திருக்கும் முருகனின் திருவருளை என்னவென்பது?

கந்தனின் கல்யாண கோலத்தைக் கண்டு மகிழ்ந்தோம்; வணங்கி வழிபட்டோம். திருப்பணி நடைபெற்று வந்த போதிலும் பக்தர்களின் கூட்டம் மொய்த்தபோதிலும் திருத்தணிக் குன்றும் கோயிலும் சுத்தமாக வைக்கப்பட்டிருப்பது எங்கள் கவனத்தைக் கவர்ந்தது. இம்மாதம் 25ம் நாள் நிகழவிருக்கும் கும்பாபிஷேக வைபவத்தைக் காணக் கூடப் போகும் ஆயிரக்கணக்கான மக்களும்

இதை நினைவில் கொள்ள வேண்டும். அகத் தூய்மையுடன் புறத் தூய்மைக்கும் முக்கியத்துவம் தர வேண்டும்.

365 படிகள் கொண்ட திருத்தணிகை, வருஷத்துக்கு 365 நாள் என்பதை மட்டுமா நினைவு படுத்துகிறது? அவனை நினைக்காத ஒவ்வொரு நாளும் நாள் அல்ல என்பதையும் அல்லவா நினைவு படுத்துகிறது? இந்தப் பதியிலேதான் தம்மை மறந்து குரு குஹனின் தியானத்தில் ஈடுபட்டிருந்த முத்துஸ்வாமி தீட்சிதருக்குப் பாலகனுகத் தோன்றி வாயில் கற்கண்டைப் போட்டான் திருமுருகன்! கற்கண்டிலும் இனிய பாடல்களைப் பாடிக் கர்நாடக இசைக்கு மெருகேற்றி அவர் நாத பிரும்மத்தில் லயித்தார். ராமலிங்கசுவாமிகள் திருத்தணிகை நாதனைக் கண்ணாடியில் கண்டு கண்டு ஓதாது ஓதி ஞான குருவாம் கந்தனின் ஆசி பெற்றார்!

எனவேதான் அருட்பிரகாச வள்ளலார் தம் திருவருட்பாவில் பாடிப் பரவுகிறார்:

'' தணிகை மலையைச் சாரேனே,
சாமியழகைப் பாரேனே
பிணிகையறையைப் பேரேனே
பேராவன்பு கூரேனே
அணி செய்யருள் நீராரேனே
ஆருத் தாகம் தீரேனே
பணிசெய் தொழும்பிற் சேரேனே
பார்மீதி ரங்கு நீரேனே.''

அத்தகைய திருத்தணிகையின் குடமுழுக்கு விழாவைக் கண்டு களிக்கும் வாய்ப்பு பெறுபவர்கள் எத்தகைய பேறு பெற்றவர்கள் என்று கூறவும் வேண்டுமோ?

திருத்தணியிலிருந்து திருப்பதி செல்லும் பாதையிலே ஐந்து மைல் போனல் பொன்பாடி என்று ஒரு புகைவண்டி நிலையம். அதையொட்டி ஒரு 'ரயில்வே கேட்'. அதைத் தாண்டி மேற்கே ஒன்றரை மைல் போனல் மத்தூரை அடையலாம்.

ஆனல் வழி மறைத்திருக்கும் 'கேட்' திறக்கப் பாடுவதற்கு நாங்கள் அப்பரோ, சம்பந்தரோ இல்லையே! 'கேட்' அருகே தவம் கிடந்தோம், ஏறக்குறைய முக்கால் மணி. வண்டி 'கேட்'டைத் தாண்டியதும் நாங்கள் பொறுமை இழந்து பெருமூச்சு விட்டோம். அந்த வேகத்தில் கேட் திறந்து கொண்டது.

மத்தூர் கிராமத்தை அடைந்து அவ்வூர் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ எஸ். மீனுட்சி சுந்தரத்தின் வீட்டை அடைந்த பொழுது, எங்களைக் காட்டிலும் அவரது பொறுமை அதிகமாகச் சோதிக்கப் பட்டிருக்கிறது என்பதை அறிந்தோம். ஒன்பது மணிக்கு வருவதாகக் கூறிப் பதினென்றே முக்கால் மணிக்குப் போனல், அவருக்கு எப்படி இருக்கும்? ஆள் தளர்ந்து போயிருந்தார். எங்களைக் கண்டதும் விசை முடுக்கப்பட்டவர் போல இயங்கினர். ஒரு சில நிமிஷங்களில் ஊரையே கூட்டி விட்டார்.

படை பதைக்கும் உச்சி வேளையில், நாங்கள் படையாகத் திரண்டு மகிஷாசுர மர்த்தனியைத் தரிசிக்கச் சென்றோம். இமை ஒழிய அசுரனை வதம் செய்த தேவி கோபக் கனல் தெறிக்கக் கொலு வீற்றிருப்பாள் என்றே எண்ணினேம்.

ஆனல் அவள் எழுந்தருளியிருக்கும் இடத்துக்குச் சென்றதும் தண்ணென்ற காற்று வீசியது. அன்னையின் வடிவத்தைப் பார்த்தால், தீமையைக் கொன்று நல்லது செய்ய விழையும் பாவம் வடிந்தது. உதடுகளிலே இளநகை; விழிகளிலே உக்கிரம், எட்டுக் கைகளையுடைய அத்திருவுடையாளின் இரு கரங்கள் சங்கும் சக்கரமும் ஏந்தி அபயம் அளித்தன; அன்னையை விஷ்ணு அம்சம் பொருந்தியவள் என்றும் பறைசாற்றின. அவள் அணிந்திருந்த ஆடை அணிகள்தான் எத்தனை அழகு! அவள் திரிசூலத்தின் குறிக்கு இலக்கான மகிஷாசுரன் அப்படி முகம் திருப்பிப் பார்ப்பானேன்? அம்பிகையின் அருள் முகத்தைப் பார்த்தவண்ணமே உயிர் நீத்தால், எத்தனை தீயவனுயினும் உய்வு பெற முடியும் என்பதை உணர்த்தவே, அப்படிக் காட்சி தருகிறானே?

ஆள் உயரத்துக்கு அழகிய வேலைப்பாட்டோடு நின்றது, அம்பிகையின் திருவுருவம். மகிஷாசுர மர்த்தனியின் இந்தச் சிலை ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்குமுன், பம்பாய் மார்க்கத்துக்கு இரண்டாவது இருப்புப் பாதை போடும் பொழுது கிடைத்ததாம். பூமியைத் தோண்டும் பொழுது இன்னும் எத்தனை எத்தனையோ சிலைகள் இங்கு கிடைத்திருக்கின்றனவாம். ஒரு துளியும் பின்னப்படாமல் கிடைத்த சிலை இது ஒன்றுதானும். இது புதையுண்டு போயிருந்த இடத்தில் கடப்பாறையைப் போட்டதும் 'ணங்' என்ற சத்தம் கேட்டதென்றும் அடுத்தகணம் ஆள் மயங்கி விழுந்து விட்டான் என்றும் சொன்னர்கள். இன்னும் ஒரு தரம் அவன் கடப்பாறையை உயர்த்திப் போட்டிருப்பானேயானல் இந்த அற்புதச் சிலை பின்னமடைந்திருக்கலாம் அல்லவா?

மத்தூர் கிராமம் செங்குந்த வகுப்பினரைச் சேர்ந்த நெசவாளர்கள் நிறைந்த கிராமம். இங்கு பெரும்பாலும் தறிகளில் 'லுங்கி'கள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வூர் வாசிகள் கிராம சமுதாயப் பணியைக் கவனிக்க முறை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் ஒன்பது வீட்டார் வீட்டு வரிசைப்படி மாறி மாறிச் சமுதாயப் பணியை ஏற்பார்கள். இம்முறையால் ஏழை — பணக்காரர், சிறியவர்— பெரியவர் என்ற பாகுபாடின்றி ஜனநாயக சமத்துவம் இங்கே வளம் பெறுகிறது.

ஏழெட்டுத் தெருக்களே உள்ள இந்தச் சிற்றூரில் ஏறக்குறைய இருபது கோயில்கள் உள்ளன! அகஸ்தீசுவரர் ஆலயம் மிகப் பழைமையானது! மகிஷாசுரமர்த்தனிக்கு ஆலயம் எழுப்பி, கும்பாபிஷேகம் செய்யத் திட்டமிட்டுள்ளனர் இவ்வூர் மக்கள். குடிசையில் இருக்கும் தேவி ஒரு சிறிய கோபுரத்தில் குடிபுக வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். இப்பணிக்காகச் சிறு துளி பெரு வெள்ளம் என்ற முறைப்படி ஒரு வழி கண்டு பிடித்துள்ளார்கள். அதன்படி இவர்கள் நெசவு செய்யும் உடைகளில் பாவு ஒன்றுக்கு ஒரு காசு தருவார்கள். இவர்களுக்குக் கச்சா பொருள் கொடுத்து — அதாவது நூல் கொடுத்து, இவர்கள் நெய்த ஆடையை வாங்கி விற்பனை செய்யும் சங்கங்கள் அதற்கு ஈடான தொகையைத் தர வேண்

டும். இச்சங்கத்தின் பணியாளர்களும் இவ்வூர் வாசிகளே. எல்லோரும் கட்டுப்பாடாகச் செயல்படுவதால் பணத் தட்டுப்பாடு ஏற்படாது என்று நம்பலாம்! முருகனுக்கு வேல் தேவை என்றதும் வீடு வீடாக நிதி வசூலித்துக் காரியத்தைச் சாதித்தவர்கள் இவ்வூர்வாசிகள்! ஈசுவரன் ஆலயத்துக்கு ஒரு மணி அவசியம் என்றதும் அவரவர் தத்தம் வீட்டிலிருந்து ஓட்டை உடைசல் பாத்திரங்களைக் கொண்டு வந்து குவித்தார்கள். அவற்றை உருக்கி வார்த்ததில் உருவாகிய மணி கணீரென்ற நாதத்தைப் பூஜா காலத்தில் கிராமம் முழுவதும் பரப்பி வருகிறது. இவ்வாறெல்லாம் பக்திப் பணியில் ஈடுபட்ட எளிய கிராமவாசிகள் இன்று பைசா பைசாவாகச் சேரும் தொகையைக் கொண்டு ஆலயத் திருப்பணியைத் தொடர இருக்கிறார்கள். இவர்களது உழைப்பால் கிடைக்கும் நிதியைக் கொண்டு ஆலயம் எழுப்பிக் கொள்ளப் போகும் மகிஷாசுர மர்த்தனி அம்மனின் அருள் நிதி அமோகமாகக் கிட்டும் என்பதில் ஆட்சேபம் என்ன? இந்தப் பணியில் இவர்களுக்கு மட்டும் என்ன பங்கு? நமக்கும்தான் விஷ்ணு அம்சம் பொருந்திய அவ்வன்னையின் அருள் கிட்டட்டுமே என்று எண்ணுபவர்கள் தாராளமாகப் பொருள் உதவி செய்யலாம். திரு டி.வி.கே. பாலசுந்தரம், மகிஷாசுரமர்த்தனி திருப்பணிக் குழு, மத்தூர் போஸ்ட், திருத்தணி வட்டம் என்னும் முகவரிக்கு அனுப்பலாம்.

தலைமை ஆசிரியரின் வீட்டில் மதிய விருந்தை முடித்துக் கொண்டு, வெய்யில்—வெக்கை பாராமல் புறப்பட்ட நாங்கள், நகரி — புத்தூர் வழியாகச் சென்று நாகலாபுரம் பாதையிலே திரும்பினால், 'கைலாசநாத கோனே' என்று ஓர் இடம் இருப்பதாகவும், அங்கே மலையருவி விழுவதாகவும் கேள்விப்பட்டோம்.... அவ்வளவுதான்: 'காய்ந்த மாடு கம்பங் கொல்லையிலே' என்பது போல, அருவி — தண்ணீர் என்ற பெயரைக் கேட்டதும் அவ்விடத்தை நோக்கி விரைந்தோம். சென்னைவாசிகள் ஆயிற்றே! இந்த வறட்சி நிலையில் அங்கு தண்ணீர் இருக்குமா என்ற ஐயப்பாடு யாருக்கேனும் தோன்ற வேண்டுமே?

நகரிப் பாதையிலே சென்று கொண்டிருந்த பொழுது, ''மூக்கு! மூக்கு!'' என்று கூவினார் எங்களில் ஒருவர்.

'என்ன ஆயிற்று? — அடிகிடி பட்டு விட்டதா?'

திரும்பிப் பார்த்தோம் அவர் கட்டிக் காட்டிய இடத்தை. நீண்டு மலையொன்று படுத்திருந்தது. அவர் காட்டிய இடத்திலே மூக்குப் போல் ஒரு சிகரம்! அதற்கு நகரி மூக்கு என்று பெயராம்! இயற்கை அன்னை என்ன என்ன விசித்திரங்களையெல்லாம் படைத்து விடுகிறாள்?

வியந்து முடிக்கும் வேளையிலே, 'கைலாசநாத கோனே'க்கு வழி என்று போட்டிருந்த இடத்தில் எங்கள் கார் திரும்பியிருந்தது. மண்டையைப் பிளக்கும் வெய்யில்! அதோடு மலையின் ஏற்றத் தாழ்வு! மரம் — செடி தலை தூக்காத வறண்ட பிரதேசத்தின் வழியாக ஒன்றிரண்டு மைலுக்கப்பால் காரைக் கொண்டு போய் நிறுத்தினால், மூன்றுபுறமும் மலையின் செங்குத்தான பாறைகள் நிமிர்ந்து நிற்க, அடர்த்தியான நிழல் தரும் மரங்கள் குடை பிடிக்க, இயற்கையன்னை நிறுவிய குளிர் சாதன வசதி கொண்ட இடம் ஒன்று கருத்தைக் கவர்ந்தது!

வெய்யில் காலமானதால் குறைவாகப் பல பகுதிகளாகப் பகிர்ந்து விழும் அருவி நீரைப் பார்த்ததும், ''சீக்கிரம்! சீக்கிரம்! பிடித்து வைத்துக் கொள்ளுங்கள்! நின்று விடப் போகிறது!'' என்றார் ஒருவர். சென்னைக் குழாய் ஞாபகம் அவரை விடவில்லையோ? அல்லது அருவியாகக் கொட்டும் நீரைக் கண்டதில் அத்தனை ஆனந்தமோ!

வெய்யிலுக்கு இதமான அந்தத் தண்ணருவியில் எல்லோருமே குளிக்கச் சென்றோம். நேரம் போவதே தெரியவில்லை; நீரை விட்டும் வெளியே வர மனமில்லை. 'இவ்வளவு தண்ணீரையும் வீணாக்குவதா?' என்று ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு குளித்தோம்.

''புறப்பட நேரமாகவில்லை?''

'கேட்ட நண்பர் கரையேறி விட்டார், நாம் அதிகம் தாமதப்படுத்தக் கூடாது' என்று எண்ணி வெளியே வந்தால், அவர் அருவிக்குள் முழுகியிருந்தார். ''ஆனந்தமாயில்லை, இப்படிக் குளிப்பது?'' என்ற கேள்வி அருவியிலிருந்து வந்தது.

'இந்தத் தண்ணீரே நமக்கு இவ்வளவு ஆனந்தம் தருகிறதே! அவன் அருள் நீரில் மூழ்கினால் எவ்வளவு பேரானந்தமாயிருக்கும்?'

இப்படி எண்ணித்தான் மலையின் ஒருபுறத்தில் ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் ஆதி சங்கரரையும் பாதுகைகளையும் ஸ்ரீ கைலாசநாதரையும் பிரதிஷ்டை செய்வித்திருக்கிறார்.

தீபாராதனை முடிந்து வணங்கிக் கைலாசநாதர் கோனேயை விட்டுப் பிரியும்போது, பசுவைப் பிரியும் கன்றாக, சகுந்தலையைப் பிரியும் துஷ்யந்தனாகத் திரும்பித் திரும்பி அருவியைப் பார்த்துக் கொண்டே வந்தோம். நாளை முதல் மறுபடியும் காக்காக் குளியலை ஆரம்பிக்க வேண்டுமே என்ற வேதனை பிரிவுத் துயராக வாட்டியது.

காரில் ஏறிப் புறப்பட்ட எங்கள் கண்ணிலிருந்து 'கைலாச நாத கோனே' மறைந்தது; நாகலாபுரம் தோன்றியது. வேதவல்லித் தாயாரோடு வீற்றிருக்கும் வேதநாராயணப் பெருமாளைச் சேவிக்கும் பாக்கியம் பெற்றோம். அநாதி வேதத்தின் பெருமையை நினைவுபடுத்துவது போல, அப்பழம் பெரும் கோவில் காட்சி அளித்தது. அத் திருக்கோவிலுள் வைக்கப்பட்டிருந்த ஆழ்வாராதிகளின் வார்ப்புச் சிலைகளோ, ஸ்தபதிகளின் கலை நயத்துக்கு எடுத்துக்காட்டாய், வேதத்துக்கொப்பான பாசுரங்களை மீண்டும் உயிர் பெற்று வந்து ஓதிக் கொண்டிருந்தாற் போலத் தோன்றின.

ஊத்துக்கோட்டையில் இறங்கி ஒரு கப் காப்பி சாப்பிட்டதும் அவ்வுலகிலிருந்து இவ்வுலகுக்கு வந்துவிட்டோம்.

''காப்பி பிரமாதம்!''

''போகும் பொழுது ஒரு வழி! திரும்பும் பொழுது வேறு வழி!''

''எல்லாம் அவன் வகுத்த வழி!''

''இல்லை, பொதுப் பணித் துறை போட்ட வழி!''

இப்படியாகப் பேச்சு மாறிற்று!



ஞானஒளி

கே. சுந்தரம்

காட்சி 11

(கோடீசுவரன் அருணாநந்தத்தின் ''சரணாலயம்'' என்ற மாளிகை. அவரைப் பேட்டி காண இப்போது மலர் மாலையுடன் வெங்கட்ராம்ஜியும், எம்.எல்.ஏ. நல்லசிவமும் நிற்கிறார்கள். வேலைக்காரன் ஒருவன் வந்து, ''ஐயா வராங்க'' என்று பயபக்தியுடன் சொல்லி விட்டுப் போகிறான்.)

அருணாநந்தர் *(வந்துகொண்டே):* எண்ணற்ற மனிதர்கள் வாழும் இந்த உலகத்தில் ஏழைகளும் ஏமாந்தவர்களும் என்பது சதவிகிதம்.... வாங்க! வணக்கம்!

(நல்லசிவம் தம் கையில் இருக்கும் மலர் மாலையை அவருக்குப் போட முயல அருண் தடுக்கிறார்.)

அருண் : மாலையா? எனக்குப் போடாதீங்க. நான் அந்தச் சம்பிரதாயங்களை வெறுப்பவன்.

நல்லசிவம்: நாங்களும் எவ்வளவோ பேருக்கு மாலை போட்டிருக்கோம். வேண்டாம்னு சொன்ன பெரிய மனுஷன் நீங்க ஒருத்தர்தான்.

அருண்: ரோஜா ரோஜாதான். ஆனாலும் அதை வைக்கிற இடத்திலே வைச்சாத்தான் மதிப்பு. இத்தனை ரோஜாப் பூவையும் மாலையாக்கி இந்தக் கிழவன் கழுத்திலே போடறதை விடக் கன்னிப் பெண்கள் கிட்டே கொடுத்து வாழ்த்துக் கூறக் கூடாதா?

வெங்கிட்டு: ஊருக்கே நல்லது செய்யற உத்தமர். உங்களுக்கு மாலை போடறதுன்னு அது எங்க பாக்கியமாச்சே!

அருண்: என்னைப் பொறுத்தமட்டும் மாலையும் விஸ்கியும் ஒண்ணுதான்! அந்த ரெண்டுக்குமே போதை அளிக்கிற தன்மை அதிகம்! போட்டவுடனே தன்னை மறக்க வைக்கும்! நிலைமை மறந்து பேச வைக்கும்! நிதானம் தெரியாம நடக்க வைக்கும்! வாழ்க்கையையே உருக்குலைச்சுடும்! வேண்டாம். நீங்க வந்த விஷயம்?



"என்ன?... ஐயாயிரம் ரூபாயையும் என் கையிலேயே கொடுத்துடுங்க.. எனக்குச் சிலை வேண்டாம். நானே சிலை போல நின்னுடறேன்..."

வெங்கிட்டு: என்ன? ஐயாயிரம் ரூபாயை யும் நீங்களே தர்றீங்களா? என் கையிலேயே கொடுத்திடுங்க. எனக்குச் சிலை வேண்டாம்! நானே சிலை போல் நின்னுடறேன்!

அருண்: முதல்லே நீங்க அப்படிப் போய் இருங்க. வேறே யாராவது முக்கியமான வங்க வந்திருக்காங்களான்னு பார்த்துட்டுப் பிறகு பேசுவோம். வேணு! (வேலைக்காரனை நோக்கி) வேறே யாராவது வந்திருக் காங்களா?

வேணு: ஒரு அம்மா வந்திருக்காங்க...

அருண்: வரச் சொல்லு.

(மேரி தன் மகளுடன் வந்து நிற்கிறாள். ஏதோ மும் முரமாக எழுதிக் கொண்டிருக்கிறார் அருண்.)

மேரி: வணக்கம்.

அருண்: வணக்கம். நீங்க யாரு?

நல்லசிவம்: மேரிங்க!

(அந்தப் பெயரைக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பு கிறார் அருண்.)

நல்லசிவம்: நம்ம ஊர் மாதா கோயிலை யொட்டி இருக்கிற பள்ளிக்கூடத்திலே டீச்ச ராயிருக்காங்க. பாவம்... வாழ்க்கையிலே ரொம்ப நொந்தவங்க.

அருண்: அப்படியா! இது....

மேரி: இதுதான் என் மகள், ராணி!

நல்லசிவம்: இவர்தான் வெங்கட் ராம்ஜி! உத்தமர். ஊருக்காக உழைச்சு உழைச்சு ஓடாப் போன வர். இவருக்கு ரொம்ப நாளா ஒரு சிலை வைச்சுப் பாக்கணும்னு ஆசைப் பட்டுக்கிட்டிருக்கோம்! ஏன்னு, பொது வாழ்வு என்பதை நிரந்தரமான விஷ யமா இப்போதெல்லாம் எடுத்துக்க முடியலே. இவர் பொது வாழ்வி லிருந்து விலகு முன்னால் ஒரு சிலை எடுத்துட வேண்டாமா? அதோடு சிலையிலே பார்க்கறச்சே இவர் இன் னும் அழகா இருப்பார்னு தோணுது! செலவு ஐயாயிரம் ஆகும். நீங்க ஏதா வது நன்கொடை தந்தா...

அருண்: அப்படியா! அந்த ஐயா யிரம் ரூபாயையும் நானே தரேன். ஆனால் ஒரு நிபந்தனை. திரும்ப நீங்க ரெண்டு பேரும் இங்கே எந்தக் கார ணத்துக்கும் வரக்கூடாது.



"மேரி... இந்தா... இந்த செக்கிலே தொகையை உன் தேவைப்படி நீயே எழுதிக்க.. நீ உன் பிரியப்படி கடனுகலே எப்போ முடியுமோ திருப்பிக் கொடு..."



அருண்: ராணியா?... ராணி மாதிரிதான் இருக்கா! உம்... என் மனைவி பேர்கூட ராணிதான். மேரி! இந்தப் பெண் உன்கூட நிற்கிறபோது உன் மகள்னே சொல்ல முடியாது. யாரோ கோடீசுவரன் வீட்டுப் பெண் மாதிரிதான் இருக்கா!

மேரி: இருபது வருஷங்களுக்கு முந்தி பாதிரியார் கண்ட கனவை நனவாக்கிட்டீங்க!

அருண்: நான் என்னம்மா அப்படிச் செய்துட்டேன். எல்லாம் கர்த்தர் செயல். நம்மிடம் இருந்தால் இல்லாதவங்களுக்குக் கொடுக்கத்தானே வேணும்?

ராணி: நல்ல மனசு இருக்கிறதாலே தான் நல்லதுக்குச் செலவு செய்யறீங்க! ஏன்? இந்த ஊரிலே வேறு பணக்காரங்களே இல்லையா என்ன? சேர்த்ததை யெல்லாம் செலவழிக்கக் குதிரைப் பந்தயத்துக்கும், சீட்டாட்டத்துக்கும் போறாங்க!

வெங்கிட்டு: அதிலே ஒரு பெரிய தத்துவமே அடங்கி யிருக்கு. ஒரு பொருளை எங்கே தொலைக்கிறோமோ அங்கேயே அதைத் தேடுறாத்தான் கிடைக்கும்.

நல்லசிவம்: அதனாலேதான் குதிரைப் பந்தயத்திலே பணத்தை விட விட, மறுபடியும் மறுபடியும் குதிரைப் பந்தயத்துக்கே போறோம். மனுஷ சுபாவம்... ஆசை....!

அருண்: நீங்க குறிப்பிட்டது மனுஷனில்லே. மநீசன்! மா - நீசன்! பெரிய பாவி!

நல்லசிவம்: சார்...?

அருண்: ஆமாம்! சாதாரணமா புல் வளர்ந்த இடத்திலே மாட்டை மேய்ச்சலுக்கு விடுவாங்க. அந்த மாடு மேய்ஞ்சா புல் குறையாது. இன்னும் செழிப்பா வளரும். மாடு தின்னு மடியாத, மாட்டோட கால் பட்டு நசுங்காத அதே புல் மேலே மனிதன் நடந்தால் நுனி கருகிடும். புல் அழிஞ்சுடும்.

ராணி: அந்த ஒரு மனிதனைப் பார்த்து அதே இடத்திலே மற்றவங்களும் நடந்தால் அதுவே பாதையாகவும் மாறிடும்.

அருண்: உனக்கு எப்படியம்மா தெரியும்?

ராணி: அடிக்கடி பாதிரியார் சொல்லுவார்னு அம்மா அடிக்கடி குறிப்பிடுவாங்க.

அருண் (மேரியிடம்): ஏம்மா... உனக்குப் பாதிரியாரை நல்லாத் தெரியுமா?

மேரி: தெரியுமாவா? எங்களுக்குத் தெரிஞ்ச தெய்வமே அவர்தானே!

அருண்: உன் பேச்சிலே ஏதோ ஒரு வேதனை தொனிக்குதே மேரி!

மேரி: உண்மைதாங்க. என் இதயம் கசந்துபோயிருப்பது எனக்குத்தான் தெரியும். ஆண்டவனுக்கே பொறுக்காதது என் கதை.

அருண்: ஆண்டவன் ஆலயத்திலே இருக்கிறதில்லே மேரி! வேதனைப்படற நெஞ்சங்களிலேதான் இருக்கார். உனக்கென்ன உதவி வேணும்?

மேரி: எதிர்பாராத விதமா என் மகள் ராணிக்குத் திடீரென்று கல்யாணம் நிச்சயமாயிருக்கு!

அருண் (ராணியிடம்): காதல் கல்யாணமா?

ராணி: இல்லே சார்!

அருண்: வெரி குட்! பெத்தவங்க பாவத்தைப் பிள்ளைங்க பறிக்கிறதே இந்த மாதிரி அசட்டுக் காரியத்தாலேதான், இல்லேயா மேரி? (மேரி தலை கவிழ்வது கண்டு) ஆமாம், அதுக்குள்ளே ஏன் கல்யாணம்? நல்லா படிக்க வைக்கலாமே?

மேரி: எனக்கும் இப்பவே இவளுக்குக் கல்யாணம் செய்யறதிலே விருப்பமில்லே தான். ஆனால் பையனுடைய அப்பா ரொம்பப் பிடிவாதமா உடனே நடத்தத் துடிக்கிறார். அவரே தம் செலவிலேயே நடத்தி முடிச்சுடறேன் என்கிறார். ஆனால் நான்தான்....

அருண்: அவங்க நடத்தறதா? நோ... நோ!... என்கிட்டே வந்தாச்சு. இனிமேல் நான்தான் நடத்தணும்.

மேரி: ரொம்ப நன்றிங்க. இது விஷயமாத்தான் உங்களைப் பார்க்க வந்தேன். முன் பின் அறிமுகமில்லாமல் கேட்பதற்கு மன்னிச்சிடுங்க. எனக்கு இரண்டாயிரம் ரூபாய் கடனாகத் தர முடியுமா?

அருண்: கடனாகவா? என்ன மேரி! கல்யாணத்தையே நான் முன்னின்று நடத்துவதாகச் சொல்கிறேன்... கடன் கேட்டா எப்படி...?

மேரி: மன்னிச்சுடுங்க. நான் நன்கொடை வாங்கப் பிரியப்படலே.



உங்கள் கண்களுககு இதமான ஒளி தேவை!

உங்கள் இல்லத்தில், தேவைக்கேற்றபடி சீரான ஒளியைத் தருவதற்கு பலதரப்பட்ட பிலிப்ஸ் லாம்புகள் இருக்கின்றன. உதாரணமாக, பிலிப்ஸ் லினியர் லாம்புகள் மற்றும் ஆர்ஜண்டா லாம்புகள் உள்ளன. கண்கூசாத இதமான ஒளி தேவைப்படும் வேலைகளுக்கு—அதாவது, படிப்பு, வீட்டுவேலை அல்லது தையல் வேலைக்கு—பிலிப்ஸ் ஆர்ஜண்டா லாம்புகள் சிறந்தவை. வீடுகளில், கண்கூசாத இதமான ஒளி அவசியம் என்பதைக் கருதியே இந்த லாம்புகள் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒளியை ஒரே சீராகப் பரப்பும் பொருட்டு பிலிப்ஸ் ஆர்ஜண்டா லாம்புகளில் ஒரு விசேஷ வெள்ளைப் பூச்சு பூசப்பட்டிருக்கிறது. இதனால் கண்கள் கூசாமல் வெளிச்சம் ஒரே சீராகப் பரவும். ஆகவே, சிறியவர் முதல் பெரியவர் வரை, குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் ஏற்ற லாம்புகள் இவை!

பிலிப்ஸ் ஆர்ஜண்டா லாம்புகள் 40, 60 மற்றும் 100 வாட்டுகளில் கிடைக்கின்றன.

லினியர் லாம்புகள், அலங்கார லாம்புகள், டார்ச் மற்றும் டயல் லாம்புகள், TL ப்ளுரஸன்ட் லாம்புகள், மெர்குரி வேபர் லாம்புகள் போன்றவற்றை பிலிப்ஸ் இந்தியாவிலேயே தயாரிக்கிறது. பிலிப்ஸ் தயாரிப்புகளின் பட்டியல் நாளுக்கு நாள் நீண்டு கொண்டே போகிறது. புதிய புதிய மின்சார விளக்குகளை வழங்குவதில் அன்று போலவே இன்றும் முன் நிற்கிறது பிலிப்ஸ். நினைவிருக்கட்டும், உங்களுக்கு எத்தகைய லாம்பு தேவைப்பட்டாலும் பிலிப்ஸிடம் கிடைக்கும்!

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHILIPS



பிலிப்ஸ்
ஆர்ஜண்டா
இதமான
ஒளி தருவதில்
இணையற்றது

PHL-83[illegible]



"சந்துரு! உன் மாமா சொல்றேன், கேளு. பரீட்சையில் 'பெயில்' ஆனால் மூட்டைப்பூச்சி மருந்தைத்தான் சாப்பிடணுமா? பேசாமல் என் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கோ!"

அருண்: எதுக்கெல்லாமோ வாரி வாரி இறைக்கிறேனே. உனக்குக் கொடுத்தா குறைஞ்சடப் போகுது?

மேரி: கொடுக்கிற மனசை விட வாங்கற மனசுதாங்க அதிகமா கஷ்டப்படுது! கை நீட்டி வாங்கறோமே, கதியில்லாமே போச் சென்னு வாங்கும்போது உடம்பு கூனிக் குறுகுமே!

அருண்: மானத்துக்கு அஞ்சினவன் மக ளாகப் பிறந்திருக்கிறாய். ஆனால் உன் விஷ யத்திலே என் இதயந்தான் பணப் பெட்டி. அன்பிலேயும் பாசத்திலேயும் ஒரு தந்தை யின் நிலேயில் நின்று கேட்கிறேன். நான் தான் இந்தக் கல்யாணத்தை நடத்துவேன். சரிதானே? ஒரு நிமிஷம், இதோ வருகிறேன்.

(உள்ளே செல்கிறார்.)

நல்லசிவம்: என்ன தாராள மனசு! கல்யாணச் செலவு முழுவதையும் தாமே ஏற்றுக்கிடறதாச் சொல்லிட்டாரே!

வெங்கிட்டு: உன்னைப் போல் புதுப் பணக் காரனு யிருந்தால் வட்டிக்கு விடுவான்! அவர் பிறவிப் பணக்காரரய்யா! பிறவிப் பணக்காரர்!

(அருணனந்தர் காப்பியுடன் வருகிறார்.)

அருண்: இந்தா மேரி! நானே என் கையா லேயே தயார் செய்த காப்பி!

ராணி (காப்பியை ருசி பார்த்துவிட்டு): சார்! எங்களை உங்களுக்கு ரொம்பப் பிடிச் சிருக்கு இல்லையா?

அருண்: ஏம்மா அப்படிக் கேட்கிறே?

ராணி: இல்லே, காப்பியிலே இனிக்க இனிக்க இவ்வளவு சர்க்கரை போட்டிருக் கிங்களே! பணக்காரங்கன்னு எதுவுமே அதி கப்படிதானு?

அருண்: வாயாடிப் பெண்ணு இருக்காளே! ஆமாம், இவளைக் கட்டிக்கப் போற பையன் யாரு?

மேரி: மாப்பிள்ளையின் பெயர் அடைக் கலம் ஜார்ஜ். வேலூரிலே போலீஸ் இன்ஸ் பெக்டர் பயிற்சி பெற்று வருகிறார்.

அருண்: போலீஸ்காரங்க சம்பந்தமா? பயமாத்தான் இருக்கு!

மேரி: என்ன அப்படிச் சொல்லிட்டீங்க. பையனுடைய அப்பா என் அப்பாவோடே ஒண்ணு வளர்ந்தவர். ஏதோ ஒரு அசம்பா விதமான நிகழ்ச்சியாலே நாங்க மூலேக்கு ஒருத்தரா பிரிஞ்சுட்டோம். இப்போ அவரே வலுவிலே செய்த ஏற்பாடுதான் இந்தக் கல்யாணம்!

அருண்: அப்படியா?

நல்லசிவம்: அவர் இப்போக்கூட இந்த ஊர் போலீஸ் இன்ஸ்பெக்டர்தாங்க!

வெங்கிட்டு: பேரு லாரன்ஸ்.

அருண்: லாரன்ஸ்?

(நடுங்குகிறார்.)

மேரி: உங்களுக்கு அவரைத் தெரியுமா?

அருண்: பெயர் ரொம்பப் பழக்கமான அடிக்கடி கேள்விப்பட்ட பெயரா இருக்கு.

(செக்கை எழுதி மேரி கையில் தருகிறார்.)

அருண்: மேரி... இந்தா... இந்தச் செக் கிலே தொகையை உன் தேவைப்படி நீயே எழுதிக்க. நீ உன் பிரியப்படி கடனுவே வைச் சுக்க. எப்போ முடியுமோ திருப்பிக் கொடு!

மேரி: ரொம்ப நன்றிங்க!

(செக்கைப் பெற்றுக் கொண்டவள் அதைப் பார்த்துத் துணுக்குறுகிறாள்.)

மேரி: என்னங்க இது?

அருண்: என்னம்மா?

மேரி: அந்தோணின்னு கையெழுத்துப் போட்டிருக்கீங்க?

(அருண் அதிர்ச்சியடைந்து பரபரப்புடன் செக்கைத் திரும்பப் பெற்றுக் கிழித்துப் போடுகிறார்.)

அருண்: ஆஹா! ஏதோ ஞாபகத்திலே என்னையும் மீறி ஒரு தவறு நடந்திடுச்சு.

(அவர் வேறு ஒரு செக் தர அதுடன் மேரி கிளம்புகிறாள்.)

அருண்: ஏம்மா? வீட்டுக்குத்தானே போகப் போறே? என் காரிலே போயிடும்மா.

மேரி: வேணுங்க. நடந்தே போயிடறோம்.

(அவர்கள் போவதைப் பார்த்தபடி அசையாது நிற்கிறார் அருண்.)

வெங்கிட்டு: இப்ப எதுக்கு வருத்தப்பட றீங்க?

நல்லசிவம்: உங்க காரிலே ரெண்டு பேர் போகணும்! அவ்வளவுதானே?

வெங்கிட்டு: டிரைவர்! வண்டியை எடு!

நல்லசிவம்: நாங்க ரெண்டு பேரும் போறோம்!

(இருவரும் போகிறார்கள்.)

அருண் (தான் பெற்ற மகள் வீதியோடு வெய்யிலில் நடந்து போவதைப் பொறுத வராக — உரக்க): தேவனே! என் தெய் வத்தைத் தெருவிலே நிறுத்தி வைச்சுட்டியே தேவனே!

(அழுகிறார்.)

(தொடரும்

ஞானஒளி என்ற இந்த நாடகத்தில் வரும் சில முக்கிய கதாபாத்திரங்களை இவ்விதழ் மேலட்டையில் காண்கிறீர்கள். அருணனந்தர் தமது மகளுக்கும் பேத்திக்கும் காப்பி கொணர்ந்து தருகிறார். மற்றொரு காட்சியில் இன்ஸ்பெக்டர் லாரன்ஸும் அடைக்கலம் பாதிரியாரும் உரையாடுகிறார்கள்.

முப்பது



அவருக்கு 30 வருடங்களாக இன்பம் ஊட்டி வருகிறது பார்லே பிஸ்கெட்...

...ஆனால் இப்போதுதான் அவர்களுக்கு கிடைக்கின்றன பல ரகங்கள்— அத்துடன் அவற்றைப் பகிர்ந்து இன்புற ஒரு பெரிய குடும்பம். அவர் சுவைத்து மகிழ்வது **ஜெ::ப்ஸ், ஓர்லே, சீஸ்லிங்ஸ், ஸ்பின்-ஹெச்**— பாரதத்தின் முதன்மையான உப்பு பிஸ்கெட்டுகள்—குறிப்பாக **க்ளுகோ மற்றும் மொனேகோ** —பாரதத்திலே உச்ச விருப்பமுடைய இனிப்பு மற்றும் உப்பு பிஸ்கெட்டுகள். ஆனால் அவர் கருத்து உங்களுக்கு வழி காட்டத் தேவையில்லை—அவை யாவற்றையுமே நீங்கள் ருசித்துப் பாருங்கள். உங்கள் சுவைக்குகந்ததை நீங்களே கண்டறியுங்கள். அவை யாவுமே பாரதத்தின் மிக நவீனமான பிஸ்கெட் தொழிற்சாலையில் உன்னதமாகத் தயாரிக்கப்பட்டவை.


பார்லே

பிஸ்கெட்


வாங்குக இன்றே, பார்லே நன்றே !




க்ளூகோ




மொனேகோ



ஓர்லே



ஸ்பின்-ஹெச்




ஜெ::ப்ஸ்



சீஸ்லிங்ஸ்


அம்புலிக்கு அப்பால்..
கதை: புஷ்பா
படம்: விஜயா
'யுரேனஸ் சர்க்கிள்' தலைவனின் ஆணைக்குக் கட்டுப்பட்ட எக்ஸ் ஒரு வேலையில் முழு மூச்சுடன் இறங்கினான். அவன் எதிரிகள் திணற வேண்டாமா? அதன்படி ஒரு நாள் மாலை நேரம். கோபி வீடு திரும்பியபோது மேஜை மீது ஒரு பார்சல் இருந்தது.
அட, இதென்ன! யாரோ பிறந்த நாள் பரிசு அனுப்பியிருக்கிறார்களே!
HAPPY BIRTH DAY
இந்தக் கடிகாரம் தான் எவ்வளவு அழகாக இருக்கிறது! ராதிகா அனுப்பியிருப்பாளோ, ஒருகால்?
இரவு திடீரென்று கோபி விழித்துக் கொண்டான்.
அப்பா! என்ன குளிராக இருக்கிறது! மின் விசிறியை நிறுத்தினால் தான் தூங்க முடியும் போலிருக்கிறது!
மின் விசிறியை நிறுத்திய கோபியின் கவனத்தை மேஜை மீதிருந்த கடிகாரம் கவர்ந்தது.
யாரால் அனுப்பப்பட்டது என்று கூடத் தெரியாமல் ஒரு பரிசுப் பொருளை வைத்திருப்பது அபாயமல்லவா? இதில் ஏதேனும் சூழ்ச்சி இருந்தால்..?
கோபி தன்னிடமிருந்த ஒரு கருவியை எடுத்துக் கடிகாரத்தின் அருகில் கொண்டு சென்றான். கருவியில் சிவப்பு வெளிச்சம் பளிச்சிட்டது.
ஓஹோ, அப்படியா விஷயம்! 'டைம்-பாம்' வைத்திருக்கிறார்களா இதற்குள்ளே! யுரேனஸ் சர்க்கிள் ஆசாமிகளின் வேலையாகத் தான் இருக்கும்!
அரை மணிக்குப் பிறகு...
அப்பாடா! ஒரு வழியாகக் கடிகாரத்தைத் திறந்து வெடியின் இணைப்பைத் துண்டித்தாகி விட்டது! இப்போதைக்கு உயிர் தப்பினேன்.
இரண்டு நாட்கள் கழித்து அவன் சென்னையில் கடற்கரைச் சாலையில் சென்று கொண்டிருந்த போது திடீரென்று காரின் பின்புறம் அதுவரை பதுங்கி இருந்த ஓர் உருவம் நிமிர்ந்தது. யதேச்சையாகத் தன் முன்னிருந்த நிலைக் கண்ணாடியில் பார்வையைச் செலுத்தின கோபி முகமூடி அணிந்திருந்த அம்மனிதனைப் பார்த்து விட்டான்.


டேய் கோபி! உன் முடிவு நெருங்கி விட்டது! வண்டியை நிறுத்து! உன்னைச் சுட்டு விட்டுப் பின்னால் வரும் காரில் நான் ஏறித் தப்பி ஓட வேண்டும்!
கோபி வண்டியை நிறுத்த பிரேக்கை அழுத்துவது போலக் காலை இயக்கி அதன் பக்கத்திலேயே இருந்த இன்னொரு விசையை அழுத்தினான் அடுத்த வினாடி—
காரின் மேல் பகுதி திறந்து கொள்ளவும், பின் சீட், வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் மேலே கிளம்பியது. அதில் உட்கார்ந்திருந்த ஆசாமியை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கொண்டு கடலில் போய் விழுந்தது!
பின்னால் வந்த காரிலிருந்து புரேனன் சர்க்கிள் ஆட்கள் திகைத்து நிற்கக் கோபியின் கார் பறந்தது!
நல்ல வேளை! பேராசிரியருக்கு நேர்ந்த ஆபத்துக்குப் பிறகு முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது என்று இப்படிச் சில யுக்தி சாதனங்களைத் தயாரித்தேன். ஆபத்துச் சமயத்துக்கு உதவியாக இருக்கிறது.
தொடரும்...



ஆண்டுதோறும் அவதியூட்டும் அரிப்பு

இதைப் போக்க என்னதான் வழி?



வேர்க்குரு—அடேயப்பா! என்ன அரிப்பு! என்ன எரிச்சல்! சொறிந்து சொறிந்து தோலே உரிந்து போகிறது! இதைப்போக்க வழியே இல்லையா?...ஏன் இல்லை? முதலில், மருந்து கலந்த ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் சோப் தேய்த்துக் குளியுங்கள். இது சருமத் துவாரங்களில் உண்டாகும், எரிச்சலைப் போக்கி, அரிப்பு பரவாமல் தடுக்கிறது. பின்னர், ஈரப் பசையை உறிஞ்சி சருமத்திற்கு இதமளிக்கும்



ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரைப் பூசுங்கள். இதில், வேர்க்குருவை எதிர்க்கும் ஒரு விசேஷ நச்சுத்தடை மருந்து சேர்க்கப்பட்டுள்ளது. உடனடியாக நிவாரணம் உண்டாகும்.

வேர்க்குருவை விரட்டியடிக்க இதுவே சிறந்த வழி!



HTA-JJ-6096

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் தயாரிப்புகள்!

தீராத விளையாட்டு



கு. அழகிரிசாமி

அத்தியாயம் 15

சுந்தரி திருச்சிக்குப் புறப்பட்டுப் போன பிறகு அன்றிரவே அருணாசல முதலியார் தமையனிடத்திலும் ரங்கராஜனிடத்திலும் குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசினார். ஒரு பகுதி சொத்துக்களை மிகவும் லாபகரமாக விற்பதற்குப் பேசி முடித்ததை விவரமாக எடுத்துச் சொன்னார். மீதி சொத்துக்களையும் இதே போல் ஒரு நல்ல சந்தர்ப்பம் பார்த்து விரைவிலேயே விற்று விடுவதற்குத் தாம் தீர்மானித்திருப்பதையும் எடுத்துரைத்தார்.

பூர்விக சொத்துக்கள் முழுவதையும் விற்றுவிடுவது என்பது சாதாரணமாக மற்ற குடும்பங்களில் உணர்ச்சி பூர்வமான சில சிரமங்களையும், மனக் கஷ்டங்களையும் உண்டுபண்ணுவது சகஜம். இரட்டிப்பு லாபம் கிடைக்குமென்றாலும், மூதாதையர் தேடி வைத்தவற்றை, பிறந்த நாள் முதல் பற்றும் பாசமும் கொண்டு உறவாடிய அந்த க்ஷேத்திரங்களை மற்றொருவனுக்கு சாஸனம் பண்ணிக் கொடுக்க அவ்வளவு சுலபத்தில் மனம் ஒப்பிவிடாது. ஆனால் ரங்கராஜனின் குடும்பத்தில் யாருக்குமே அது அவ்வளவு மனக் கஷ்டம் தரும் காரியமாக உள்ளத்தில் தைக்கவில்லை. நடராஜ முதலியார் சின்னஞ்சிறு வயதிலேயே வெளியூருக்கு—சாத்தூருக்குப் படிக்கச் சென்று விட்டார். பின்பு மதுரையில் போய்ப் படித்துப் பட்டம் பெற்றார். சென்னை சைதாப்பேட்டையிலும் இரண்டு வருஷங்கள் தங்கி ஆசிரியப் பயிற்சி பெற்றார். அதன் பின் ஸ்ரீவில்லிப்புத்தூரில் சில ஆண்டுகள் பள்ளி ஆசிரியராக வேலை பார்த்துவிட்டு, பள்ளிக்கூடங்களை மேற்பார்வையிடும் டிப்டி இன்ஸ்பெக்டராகி விட்டார். உத்தியோக காலத்தில் ஊருக்கு இரண்டு ஆண்டுகள், அல்லது மூன்று ஆண்டுகள் வீதம் பல தாலூகா—நகரங்களில் வாழ்ந்திருக்கிறார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' அல்லது 'யாவரும் அந்நியர்' என்ற ஒரு மனப்பான்மை அவருக்குத் தவிர்க்க முடியாத விதத்தில் உண்டாகி விட்டது.

சொந்த ஊரில் அவர் மிகச் சிறிய வயதிலும், அப்புறம் கல்யாணமான சமயத்தில் சிறிது காலமும் வாழ்ந்ததைத் தவிர ஊரில் ஒரு பிடிப்பு உண்டாகக் கூடிய விதத்தில் அதிக காலம் இருந்ததில்லை. விவசாயத்தைப் பற்றி அவருக்கு எதுவுமே தெரியாது. அவருடைய தந்தையும், எஸ். எஸ். எல். சி. தேறாமல் வீட்டோடு வந்து சேர்ந்து விட்ட தம்பி அருணாசல முதலியாரும்தான் எல்லா நிர்வாகங்களையும் செய்து வந்தார்கள். இந்த நிலையில் நிலபுலங்களையோ வீட்டையோ விற்பது பற்றி அவருக்கு அவ்வளவாகத் தயக்கம் ஏற்படவில்லை. தம்பி அதிவேகமாகக் காரியத்தைச் செய்து முடித்து விட்டது ஒன்றே அவரைச் சிறிது யோசிக்க வைத்தது. ஆனாலும் மனம் விரைவில் பக்குவப்பட்டுத் தாம் சொல்வதற்கெல்லாம் சம்மதிக்கும்படி செய்து விட்டது.

ரங்கராஜன் மட்டும் ஒரு விஷயத்தில் பிடிவாதமாகச் சித்தப்பாவின் கருத்தினின்றும் மாறுபட்டுக் கொண்டிருந்தான், ஊரில் எதை விற்றாலும் வீட்டை விற்கக் கூடாது என்றான். ஏன் இப்படிச் சொல்கிறான் என்று அவருக்குப் புரியவில்லை.

''ராஜா! நானும் பார்த்துக்கிட்டிருக்கிறேன். நீ விடாப்பிடியாகச் சொன்னதையே சொல்லிக்கிட்டிருக்கிறியே? எதுக்காக வீட்டை விற்கக் கூடாது என்கிறே? வீட்டை வச்சிக்கிட்டு என்ன செய்யப் போறே? தெரியாமல்தான் கேட்கிறேன்.''

''சித்தப்பா! ஊரிலே நமக்கு அந்த ஓர் இடமாவது இருக்கணும்னு எனக்குத் தோணிக்கிட்டே இருக்கு. ஏன், எதுக்குன்னு எனக்குச் சொல்லத் தெரியல்லே'' என்றான் ரங்கராஜன்.

''ராஜா! அங்கே போய்க் குடியிருக்கிறதா யிருந்தால், வீடு கட்டாயம் இருக்க வேண்டியதுதான்... நிலத்தை யெல்லாம் வித்துட்டு மதுரையிலே ஒதுங்கிறதுன்னு ஆயிட்ட பிறகு வீட்டை மட்டும் அங்கே வச்சிக்கிட்டிருக்கிறது எதுக்கு? இப்போ அந்தப் பட்டிக்காட்டிலே அதுக்குப் பத்து ரூபாய் வாடகை கிடைச்சுக்கிட்டிருக்கு. மாசம் பத்துன்னா, வருசத்துக்கு நூத்திருபது ரூபா. அவ்வளவுதான். வீடுன்னு இருந்தால் அப்பப்போ அதிலே மராமத்துப் பண்ணிக்கிட்டே யிருக்கணும். இப்பவே அதிலே செய்ய வேண்டிய வேலை நிறைய இருக்கு. கை வச்சோம்னா ரூபாய் ஐயாயிரத்தைக் கேட்கும். இன்னும் நாலு வருஷங்கள் போனால் பத்தாயிரம்! அப்படிச் செலவு பண்ணி ஊராரைக் குடி வைச்சிக்கிட்டிருக்கிறதிலே என்ன லாபம்னு கேட்கிறேன்.''

''சித்தப்பா! நீங்க ஆயிரத்தைச் சொன்னாலும் என் மனசு கேட்க மாட்டேங்குது. வேறே ஒண்ணும் எனக்குச் சொல்லத் தோணல்லே.''

''ராஜா! நீ சும்மா இரு. உனக்கு ஒண்ணும் தெரியாது. நான் முடிவு பண்ணினால் பண்ணினதுதான். எதுக்குச் சும்மா போட்டுப் பேசறே?''

என்று அழுத்தமாகச் சொன்னார் அருணாசல முதலியார்.



ரங்கராஜன் மௌனமாக யோசித்தான். அந்தப் பூர்வீக வீட்டில் சித்தப்பாவுக்கும் சம பங்கு உண்டு என்பது ஞாபகத்துக்கு வந்தது. அந்த உரிமையில்தான் அவர் அப்படி அழுத்தம் திருத்தமாகப் பேசுகிறார் என்றும் நினைத்தான்.

அருணாசல முதலியார் பேசினார்: ''இவ்வளவு வயசாயும் இன்னும் உனக்குக் காரியமாகப் பேசத் தெரியுதா? நடந்துக்கத் தெரியுதா? பெரிய படிப்பும் வேறே படிச்சிட்டே.''

ரங்கராஜன் ஏறிட்டுப் பார்த்து, ''சித்தப்பா! எனக்கு இஷ்டமில்லை. நீங்க வித்துத்தான் ஆகணும்னா வித்துக்கோங்க. அதிலே ஒரு காசுகூட எனக்குத் தரக் கூடாது. நான் வாங்கிக்க மாட்டேன். அப்புறம் உங்கள் இஷ்டம்'' என்றான்.

செவ்வரி படர்ந்த அவன் கண்களில் மேலும் சற்றுச் சிவப்பு ஏறியது போல் அவருக்குத் தோன்றியது. அவனுடைய கோபத்தைப் பார்த்து அவர் சிரித்தார்.

''ராஜா! வீட்டை வித்து வர்ற பணத்தை உனக்குத் தரல்லேன்னா, வேறு யாருக்குத் தர்றது?''

''நீங்களே வச்சிக்கோங்க.''

''நான் வச்சிக்கிறதா?.... ரொம்ப நல்லா இருக்கு.''

''ஏன் உங்களுக்கு அந்த வீட்டிலே பாத்தியதை இல்லையா?''


முதலியாருக்கு அவனுடைய பேச்சு முன்னைப் போல் குத்தியது. அவன் வேற்றுமை பாராட்டி விலகிப் போய்ப் பேசுகிறானே என்று ஒரு பதைபதைப்பும்கூட உண்டாயிற்று.

''ராஜா! நீ இப்படிப் பேசாதே. இப்ப சொல்றேன். எழுதி வேணும்னாலும் தர்றேன். அந்த வீட்டை வித்தாலும் சரி, விக்காட்டாலும் சரி, அதனோடு முழுப் பாத்தியதையும் உனக்குத்தான். உன் பாத்தியதை என் பாத்தியதைன்னு பேசாதே....''

முதலியாரின் குரல் தழுதழுத்தது.

''ராஜா! நான் அப்படிப் பத்து வீட்டைச் சம்பாதிச்சிப்பிடுவேன். ஆனா, இன்னொரு ராஜாவை என்னாலே சம்பாதிக்க முடியாது. உன் மேலே எனக்கு இருக்கிற பிரியம் அணுவளவு கூடக் குறையக் கூடாது என்கிறதுக்காகத்தான் பகவான் எனக்கு ஆம்பிளைப் பிள்ளையைக் குடுக்கல்லே. நானும் எனக்கு ஒரு மகன் இல்லையென்னு கவலைப்பட்டதே இல்லை. ராஜா! எனக்கு நீதான் பிள்ளை: நீதான் சம்பாத்தியம். உசுரும் நீதான்....''

அவருடைய கண்கள் குளமாகி விட்டன. ரங்கராஜனும் அவருடைய கண்களைப் பார்த்து, உள்ளத்தையும் பார்த்தான். தன் கண்களையும் அவன் துடைத்துக் கொள்ளும்படி ஆகி விட்டது.



அருணாசல முதலியார் கடைசியில் சொன்னார்: ''ராஜா! அந்த வீட்டைப் பத்தி நான் இனி மேல் பேசவில்லை. அதை எப்போ என்ன செய்யணும்னு நீ நினைக்கிறயோ, அப்படிச் செய்துக்கோ. என்னைக் கேட்கவே வேண்டாம். அது உனக்கே உனக்குன்னு சர்வ சுதந்திர பாத்தியதையா வச்சிக்கோ....''

ரங்கராஜனால் ஒன்றும் பேச முடியவில்லை.

அப்போது நடராஜ முதலியார், ''நேரமாச்சு. மிச்சத்தைக் காலையிலே பேசலாமே?'' என்றார்.

அருணசல முதலியார் உடனே சொன்னார்: ''ராஜா! சீக்கிரமா மதுரையிலே ஒரு வீட்டை வாங்கிப் பிடணும். எவ்வளவு காலத்துக்கு இப்படி வாடகை வீட்டிலே இருக்கிறது? இதையும் வேறே ஆள் வாங்கப் போகுது....''

அப்போது ரங்கராஜனுக்குத் திடீரென்று ஒரு தமாஷ் கிளம்பியது. 'வேறே ஆள் வாங்கவில்லை; நம்ப ஆள்தான் வாங்கப் போறார்' என்று சொல்லத் தோன்றியது. ஆனால் சித்தப்பாவின் கண்களில் இன்னும் ஈரம் உலறவில்லை என்பதை அறிந்து, அவர் சொல்வதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''அதனாலே ஒரு வீட்டை அம்பது அறுபதுக்குள்ளே விலை பேசி வாங்கிப் பிடணும். சொந்த வீடு வாங்கினப்புறம், வாங்கின கையோடே உனக்குக் கல்யாணம். அதுக்குள்ளே நீ ஒண்ணு செய்யணும். மெட்ராஸுக்குப் போய்ப் பணத்தைக் கட்டிச் சன்னத்தை வாங்கிக்கிட்டு வந்துடணும். நீ வக்கீலாயிட்டேன்னு வாசலிலே போர்டு போட்டு நான் பார்க்கணும்.''

''சித்தப்பா! நானும் அந்த யோசனையிலேதான் இருக்கிறேன். நாலஞ்சு நாளிலே மெட்ராஸுக்குப் போறதாத்தான் பிளான். சரி, நேரமாயிட்டது, படுத்துத் தூங்கலாம்.''

இவ்வாறு சொல்லி விட்டு ரங்கராஜன் முதலில் எழுந்தான்.

அப்போது அருணசல முதலியார், ''ராஜா! எனக்கு ஒரு யோசனை தோணுது. இந்த வீட்டையே வாங்கினால் என்ன?'' என்று கேட்டார்.

''எந்த வீடு?''

''இப்போ நாம்ப இருக்கிற இந்த வீட்டைத்தான் சொல்றேன்.''

''அது எப்படி? இன்னொருத்தர் வாங்கப் போறதா இருக்கிறப்போ நமக்கு எப்படிக் கிடைக்கும்? இதுக்குள்ளே அவங்க ஒரு வேலை பேசி முடிச்சிருந்தால் என்ன பண்ணறது?''

''விசாரிப்போம். விசாரிச்சுப் பார்த்துச் செய்வோம். இது பெரிய வீடாவும் இருக்கு. ஊருக்கு நடுவிலேயும் இருக்கு......''

''ஆனா இந்த வீட்டிலே வக்கீல் மாட்டித் தொழில் பண்ண முடியுமா? இந்தச் சந்து பொந்துக்குள்ளே எவன் தேடி வருவான்?''

''அட, அதுக்கு ஓர் இடம் பிடிச்சிக்கிறது.... சரி, பார்ப்போம். இது பழைய வீடாயிருந்தாலும் சௌகரியமான வீடு. கொஞ்சம் செலவு பண்ணிட்டா, லட்ச ரூபாய்க்குக்கூட இலேசாத் தள்ளிப்பிடலாம்!''

ரங்கராஜன் சிரித்து விட்டான்.

''சித்தப்பா! வீடுன்னு இன்னொருத்தனுக்குத் 'தள்ளிப்பிடறதிலேயே குறியா இருக்கிறீங்களே!'' என்றான் அவன்.

''ஒரு பேச்சுக்குச் சொல்றேன்'' என்று அவனுடைய கேலியைப் பற்றி அக்கறையில்லாமல் சொன்னார் அருணசல முதலியார்.

அன்றிரவு படுத்திருந்து விட்டு மறுநாள் காலையிலேயே சாத்தூருக்குப் புறப்பட்டார் அருணசல முதலியார். அவருடைய மனைவியோடு தங்கமும் கிளம்பினாள்.

''உனக்கு என்ன அவசரம்? நீ பேசாமல் இரு'' என்றான் ரங்கராஜன்.

அவளும் போய் விட்டால், வீடு இன்னும் வெறிச்சோடிப் போய் விடும் என்று ஜானகியம்மாளும் கூறி, அவளை இருக்கச் சொல்லி வற்புறுத்தினாள்.

யார் சொல்லியும் தங்கம் கேட்கவில்லை. வேண்டுமென்றால், சாத்தூருக்குப் போய் அடுத்த மாதத்திலேயே வரத் தயார் என்று அவள் தெரிவித்தாள்.

''அடுத்த மாசம் அங்கே இருந்து இங்கே வர்றதுக்குப் பதிலா, இங்கே இருந்து அங்கே வர்றது! ரயில் செலவும் மிச்சம்!'' என்று அருணசல முதலியாரும் சொல்லிப் பார்த்தார்.

தங்கம் பிடிவாதமாகக் கிளம்பிவிட்டாள். காலை ஒன்பது மணிக்கு மூவரும் விடைபெற்றுப் போய் விட்டார்கள்.

அத்தியாயம் 16

வாழ்க்கை என்பது எவ்வளவு ஐசுவர்யத்துடனும், போக போக்கியங்களுடனும் அமைந்திருந்தாலும் சரி, அதை ஒரு சுமையாக மாற்றி, அதைச் சுமப்பதற்கென்றே ஆயுளைக் கழிக்க வேண்டும் என்பது போன்ற ஒரு நியதியை இந்தச் சமூகத்தில் பலர் — அதிலும் வசதி படைத்தவர்கள் வகுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ரங்கராஜனை ஆச்சரியப்படத் தொடங்

கிறான். அருணாசல முதலியாரின் யோசனைகளும், திட்டங்களும், செயல்களும், உபதேசங்களும் ரங்கராஜனை இவ்விதம் நினைக்கத் தூண்டின.

சன்னாசிப்புதூர் கிராமத்தில் இருந்த சொத்துக்களை வைத்துக் கொண்டே அவரும், தன் தந்தையும் எவ்வளவோ சீரும் சிறப்புமாக வாழ்ந்திருக்க முடியும்; இன்றும் வாழ முடியும். அப்படியிருந்தும் அருணாசல முதலியார் கிராமத்திலிருந்த சொத்துக்களை ஒவ்வொன்றாக வெகு சீக்கிரத்தில் விற்றுச் சாத்தூரில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டார். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைத்து வருகிறது. வியாபாரமும் வருஷத்துக்கு வருஷம் விரிவடைந்து கொண்டிருக்கிறது. 'சாத்தூரில் பல வீடுகளையும் விலைக்கு வாங்கி விட்டார். உண்மையில் அவர் சொத்துக்களை விற்றுச் சாத்தூரில் நான்கு மடங்கு சொத்துக்களைத் தேடி விட்டார். அவருக்கு ஆண் வாரிசு இல்லை என்ற ஒரே குறையைத் தவிர வேறு எவ்விதக் குறையும் இல்லை. எதிர்காலத்தைப்பற்றி — சொல்லப்போனால் இன்னும் ஓர் இரண்டு நூற்றாண்டுக்காலம் வரையிலும் கூடக் கவலைப்படத் தேவையில்லாதவாறு அவருக்குப் பிதுரார்ஜிதத்தினாலும் சுய முயற்சியாலும் வாழ்க்கை அமைந்து விட்டது. அப்படி யிருந்தும் அவர் மேன்மேலும் சம்பாதிக்க வேண்டும் என்று பறப்பதும், சதா ஓடிக் கொண்டிருப்பதும், திடீர் திடீர் என்று கவலைக்கும் பயத்துக்கும் உள்ளாவதும் ரங்கராஜனுக்கு நெடுகிலும் ஒரு புரியாத தமாஷாக இருந்து வந்தது. சித்தப்பாவைப் பல முறை கேலி பண்ணியிருக்கிறான். அதற்கு அவர் பின் வருமாறு சொல்வார்:

''நீ சும்மா இரு ராஜா! உனக்கு என்ன தெரியும்? நீ விளையாட்டுப் பிள்ளை. ஆயிரம் ஆயிரமாகப் பணத்தைக் கொண்டு போய், மிளகாய் வத்தலிலே போட்டுட்டு, இராப் பகலாத் தூக்கமில்லாமல் நான் படற பாடு உனக்கென்ன தெரியும்?''

''ஏன், இப்ப என்ன வந்துட்டது?''

''என்ன வந்துட்டதா? மார்க்கெட் நிலவரம் தெரியுமா உனக்கு? ஒரு ரூபா விலை இறங்கிச்சு, அப்புறம் இந்த அருணாசல முதலி கதி என்னாகும் என்கிறது அந்த முருகனுக்குத்தான் தெரியும்!''

ரங்கராஜன் அவருடைய பயத்தைப் பார்த்துப் பார்த்து ரஸித்து, ''ஒவ்வொரு வருஷமும் இப்படித் தான் 'அதிலே' பணத்தைப் போட்டுட்டேன்; 'இதிலே' பணத்தைப் போட்டுட்டேன்னு சொல்லிச் சொல்லிப் பயந்துக்கிட்டிருக்கீங்க. இப்படியெல்லாம் பணத்தைக் கொண்டு போய் அதிலேயும் இதிலேயும் போடுவானேன்? அப்புறம் தூக்கமில்லாமல் கிடந்து அவஸ்தைப் படுவானேன்?'' என்று கேட்டான்.

''வியாபாரம்னு அப்படித்தாம்ப்பா. முழிப்பா இருக்கணும்.''

''உங்களை இப்படி வியாபாரம் செய்யச் சொன்னது யார்? அதைச் சொல்லுங்க.''

ரங்கராஜன் இப்படிக் கேட்ட சமயங்களில் 'உனக்கு இப்போ தெரியாது. பின்னாலே தெரியும். சம்பாதிக்கல்லேன்னா சாப்பாட்டுக்கு என்ன பண்றதுன்னு யோசிச்சியா?'' என்று சொல்வார் அவர்.

சாப்பாட்டுக் கவலை கொள்ள வேண்டிய அளவுக்கு அருணாசல முதலியார் பயப்படுவதைப் பார்த்து இது வேண்டுமென்றே இழுத்துப் போட்டுக்கொள்ளும் கவலை என்று அவன் இப்பொழுது நினைக்கத் தொடங்கினான்.


கிராமத்தில் பார்த்த மாடசாமி, நிர்மலா போன்ற எத்தனையோ ஏழைகள்—நாளைக்கு என்ன செய்வது என்று நியாயமாகவே கவலைப்பட்டாக வேண்டியவர்கள் — அமைதியாக யாதொரு கலவரமுமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மதுரையில் அப்படிப்பட்டவர்கள் லட்சக் கணக்கில் வாழ்கிறார்கள். ஆனால் சித்தப்பாவுக்கோ—லட்சக் கணக்கில் வைத்துக் கொண்டிருக்கும் அருணாசல முதலியாருக்கோ சாப்பாட்டுக்குக் கஷ்டம் வந்துவிடுமோ என்ற கவலை!

அவர் தமது வாழ்க்கையைப் பாரமாக மாற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதைப் போல், தன் வாழ்க்கையையும் மாற்றிவிட்டாரே என்பதை நினைக்கும் போது அவனுக்குக் கொஞ்சம் ஆத்திரமாகக்கூட இருந்தது.

தன்னுடைய தந்தையின் சொத்துக்களை விற்பதற்கு யோசனை சொல்லி ஓரளவுக்கு விற்கவும் ஏற்பாடு செய்துவிட்டார். வெகு சீக்கிரத்தில் தான் சுயமாகச் சம்பாதிக்க வேண்டும் என்பதையும் விடாப்பிடியாக வற்புறுத்துகிறார்.

அவருடைய யோசனைகளை மறுக்கவும் முடியவில்லை. சம்பாதிக்கத் தேவையில்லை என்றால் பி.ஏ. பி.எல். வரையில் படித்தது எதற்கு? மதுரையில் குடியிருப்பதுதான் எதற்கு?

பட்டதாரியான பிறகு நகரத்தில் இருந்து சம்பாதிக்காமல், சொந்தக் கிராமத்துக்குத் திரும்பினால் அப்படித்



விக்ரோலியிலுள்ள எழில்மிகு காத்ரெஜ் தொழில் நகரம் — பெரிதும் யந்திர மயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளும் ஊழியர்களுக்கான அழகிய வீடுகளும் இணையற்ற கல்வித்தரம் வாய்ந்த பள்ளிகளும் கொண்டது

1897-ஆம் ஆண்டு, ஒரு பார்ஸி குடும்பத்தின் மூத்த மகன் சட்டத் துறையை விட்டுப் பூட்டுத் தயாரிக்கும் தொழிலை மேற் கொண்டார். அவர்தான் ஆர்தேஷிர் பர்ஜோர்ஜி காத்ரெஜ். பாரதத்திற்கு அரசியல், பொருளாதார சுதந்திரம் கிடைக்கவேண்டும் என்பதே அவர் கனவு. பிறர் கையை எதிர்பாராமல் தற்சார்புடன் வாழ்வதே பாரத சுதந்திர வாயிலுக்குத் திறவு கோல் என அவர் கண்டார்.

தற்சார்பில் தளராத விசுவாசத்துடன் ஆர்தேஷிர் காத்ரெஜ் சுதேசி இயக்கத்தை ஆர்வமுடன் ஆதரித்தார். சமுதாய சமத்துவத்தில் ஈடுபாடு கொண்டு தீண்டாமையை ஒழிக்கப் பாடு பட்டார். அவர் தனது நண்பர்களான திலகர், தாகூர், காந்தி, நேரு இவர்களுடன் பாரத லட்சியங்களைப் பற்றிய கொள்கைகளைப் பகிர்ந்து கொண்டார். தனது லட்சியங்கள் நிறைவேறத் தனது நேரத்தையும் செல்வத்தையும் வாரி வழங்கினார்.

ஆனால் நவீன பாரதம் பற்றிய அவரது கனவுகள் நிறைவேறுவதற்கு நெடு நாட்களுக்கு முன்பே அவர் இவ்வுலக வாழ்வை நீத்தார். காத்ரெஜ் தொழில் ஸ்தாபனத்தின் தலைமைப் பொறுப்பையும், முன்னேற்றத்தையும் நிலைநாட்ட அவரது சகோதரர் பிரோஜ்ஷா காத்ரெஜ் அவர்கள் பொறுப்பேற்றார்.

விக்ரோலியிலுள்ள காத்ரெஜ் தொழிற்சாலையுடன் கூடிய எழில் நகரம் இன்று பாரதத்தின் முற்போக்கான தொழில் வளத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். நவீன தொழில் நோக்கின் புதிய ஆர்வத்திற்கும் காத்ரெஜ் போதிய சான்றாகும்.

Godrej



"இந்தியா தனது தற்சார்பின் மூலமே தன்மதிப்பைப் பெற முடியும்"

ஆர்தேஷிர் பர்ஜோர்ஜி காத்ரெஜ்
1868-1936




சென்னை, ராதா சில்க் எம்போரியம் பங்குதாரர் ஸ்ரீ கேசவன் அவர்களுக்கும், செல்வி சூர்யாவுக்கும் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



மாயூரம் திருப்பாவை - திருவெம்பாவை மத்தியகுழு காரியதரிசி திரு ராமமூர்த்தியின் குமாரி சௌ. உஷாவிற்கும் மாயூரம் அட்வகேட் திரு ராஜகோபால அய்யரின் குமாரன் சிரஞ்சீவி பசுபதி B. A., (State Bank)க்கும் 8-5-69 அன்று மாயூரத்தில் அதிவிமரிசையாகத் திருமணம் நடைபெற்றது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் அனுக்கிரஹத்துடன் விவாஹம் ஐந்து தினங்கள் வேத விதிப்படி நடைபெற்றது.



சென்னை, ராதா சில்க் எம்போரியம் பங்குதாரர் ஸ்ரீ ஏ. திருவேங்கடம் (பாவா) அவர்கள் குமாரத்தி சௌ. நிர்மலாவுக்கும், பண்ருட்டி ஸ்ரீ கே. வெங்கடசாமி செட்டியார் அவர்கள் குமாரர் ஸ்ரீ அமர்ஜோதிக்கும் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!



சென்னையில் தொழிலதிபரான திரு கே. ஜி. கோவிந்தராஜுலு அவர்கள் குமாரத்தி சௌ. பிரபாவுக்கும் வேலூர் அட்வகேட் திரு டி. முனுசாமி நாயுடு அவர்கள் குமாரர் சிரஞ்சீவி டாக்டர் டி. பாப்பையா நாயுடு அவர்களுக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!



''ஏன் சார், உங்க வீட்டுக் காரி என்ன டிபன் கொடுத்தனுப்பரு?''

''பழையதைப் பிசைந்து கொடுத்தனுப்புவா.''

''ஏதேதோ! நீங்க என்ன பெரிய பொட்டலமாக் கொண்டு போறேள்?''

''என் வீட்டுக்காரிக்கு எங்க காண்டீனிலேருந்து மசால் தோசை, போண்டா எல்லாம் வாங்கிண்டு போறேன்.''

திரும்பி வருகிறவர்களைக் கிராமவாசிகளே மதிக்க மாட்டார்கள் என்றும், அவன் கிராமவாசியாகவும் இல்லாமல் நகரவாசியாகவும் இல்லாமல் திரிசங்கு சுவர்க்கத்தில் தான் நடமாட வேண்டியிருக்கும் என்றும் அருணாசல முதலியார் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையாகத்தான் இருக்கும் என்று அவன் ஏற்றுக் கொண்டான்.

சுந்தரியை வழியனுப்பி விட்டுத் தங்கத்துடன் சாத்தூருக்குத் திரும்பிய அருணாசல முதலியார் ஒரு வாரத்துக்குப் பிறகு அவனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அவரிடத்திலிருந்து கடிதம் வருவது என்பது அபூர்வம். அவரே அடிக்கடி நேரில் வந்து கொண்டிருக்கும் போது கடிதம் எழுத வேண்டிய அவசியமே ஏற்பட முடியாது. ரங்கராஜனுக்கு அவர் எழுதிய முதல் கடிதமே இதுதான். தமக்கு வேலைகள் அதிகம் இருப்பதால் இன்னும் பத்து நாட்களுக்கு மதுரைக்கு வர இயலாது என்றும், தாம் நேரில் சொன்னபடி சென்னைக்குப் போய் வக்கீல் சன்னத்தைப் பெற்றுக் கொண்டு வந்தாகி விட்டதா, என்ன விவரம் என்றும் கேட்டு அவர் எழுதியிருந்தார். கடிதத்தின் முடிவில் அவர் எழுதியிருந்த வரிகள்:

''இதுவரைக்கும் இருந்தது சரி. இனிமேல் சம்பாத்தியத்திலே குறியா இருக்கணும். ஊரிலே இருக்கிற சொத்தை விற்க ஆரம்பித்துவிட்டோம். இனிமேல் சம்பாதித்துச் சாப்பிடாமல், கையிருப்பிலிருந்து எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தால், சொத்தை விற்றுச் சாப்பிட்டதாக ஆகிவிடும். உனக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை.''

'விற்றுச் சாப்பிடுவது' என்ற இந்த இரு வார்த்தைகள் அவனை ஒரு நிமிஷம் பெரும் பாடு படுத்தி விட்டன. சித்தப்பா எப்படியெல்லாம் தன்னை நெருக்குகிறார், அவசரப்படுத்துகிறார், பயமுறுத்துகிறார் என்று வெறுப்போடு சொல்லிக் கொண்டாலும் அவர் சொல்வதை மறுத்துப் பேசுவதற்கும் இடமில்லாமல் இருந்தது. 'வாழ்க்கையைச் சுமையாக்குவதைத் தவிர இந்த உலகத்தில் வேறு வழியே கிடையாதோ?'

அவனுக்கு அப்போது மனத்தில் குதூகலத்தையோ உற்சாகத்தையோ உண்டு பண்ண வீட்டில் யாருமே இல்லை. அப்பா, அம்மா, அவன் — மூவர் தான். சுந்தரி, ரூபி, தங்கம் எல்லோரும் போய் விட்டார்கள். வீடு வெறிச்சோடிக் கிடந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் சித்தப்பாவின் திட்டங்களையும், யோசனைகளையும் பயமுறுத்தல்களையும் பற்றி அவன் சிந்தனை செய்து கொண்டிருந்தான்.

சுந்தரி திருச்சிக்குப் போனதன் பின் விஜயாவும் கமலாவும் தினந்தோறும் தன் வீட்டுக்கு வந்து தன் தாயாருடன் பகற் பொழுதைக் கழிப்பார்கள் என்று ரங்கராஜனுக்கு எப்படியோ ஒரு நம்பிக்கை தோன்றியிருந்தது. முதல் நாள் சுந்தரியும், மறு நாள் தங்கமும் புறப்பட்டுப் போன பின், அவன் கண்கள் விஜயாவைத்தான் எதிர்நோக்கின. ஆனால் அவள் வரவில்லை.

மறு நாள் அவளைத் தேடித் தானே போகலாமா என்று நினைத்தான். ஆனால் தயக்கமாக இருந்தது. அவளுடைய பெற்றோர்கள் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் தனக்கு அந்நியர்களாக அறிமுகமில்லாதவர்களாக இருந்தது தான் அவனுடைய தயக்கத்துக்குக் காரணம். தவிரவும் விஜயாவின் தந்தையைப் பற்றி அவன் உள்ளத்தில் பிரம்மாண்டமான ஒரு கற்பனைச் சித்திரம் விழுந்திருந்தது. அவ்வளவு பெரிய பணக்காரர் வீட்டுக்கு அவ்வளவு சுலபமாகப் போவது எப்படி?

ரங்கராஜன் விஜயாவைத் தேடிப் போவதற்குப் பதிலாக வேறு ஓர் ஆசாமியைத் தேடிச் சென்றான். அவனோடு ஒன்றாகப் படித்துச் சட்டப் பரீட்சையில் தேறியவன். மதுரையில் போர்டு போட்டு வக்கீல் தொழிலை ஆரம்பித்துவிட்டவன். ஆறேழு மாதங்களுக்கு முன் அவன் ரங்கராஜன் வீட்டுக்கு ஒரு நாள் வந்திருந்தான். அதன் பிறகு இருவரும் சந்திக்கவில்லை.

''முத்துக்குமார், பி.ஏ. பி.எல்.'' என்ற போர்டைப் பார்த்ததும் ரங்கராஜனுக்கு உள்ளூறச் சிரிப்புத்தான் வந்தது. வக்கீல் தொழிலைப் பற்றியும்,

தன் அனுபவங்களைப் பற்றியும், அப்புறம் அதில் கிடைக்கத் தொடங்கியிருக்கும் வருமானங்களைப் பற்றியும் முத்துக்குமார் தன் வீட்டுக்கு வந்திருந்தபோது கதை கதையாகச் சொன்னது ரங்கராஜனுக்கு அப்போது ஞாபகம் வந்துவிட்டது.

முத்துக்குமார் வீட்டில் இருந்தான். ரங்கராஜனை அவன் மிகுந்த அன்போடும் ஆரவாரத்தோடும் வரவேற்று உட்கார வைத்து, ''ஏது, வழி தப்பினாப்பிலே இந்தப் பக்கம் இப்படி...?'' என்று சம்பிரதாயமாகக் கேட்டான்.

''வழி தப்பி வரவில்லை. உங்களைத் தேடி, உங்க வீட்டைத் தேடித்தான் வந்திருக்கிறேன்.... எப்படி இருக்கிறீங்க? தொழிலிலே இப்போ எவ்வளவோ முன்னேறியிருப்பீங்க...''

''தொழிலிலே அபார முன்னேற்றம், மிஸ்டர் ரங்கராஜன்! அதிலே சந்தேகமே இல்லை. ஆனால் வருமானத்திலேதான்....''

''ஏன்...?''

''முந்தின தடவை உங்ககிட்ட என்ன சொன்னேன்? மாசம் சராசரி அறுபது ரூபாய் சம்பாதிக்கிறதாச் சொன்னேன் இல்லையா? இப்போ அறுபதைத் தாண்டியிருக்கும். போன மாசம் அறுபத்தெட்டு வரையிலும் சம்பாதிக்க முடிஞ்சது! அது ஒரு ரிக்கார்டு — நான் வக்கீல் தொழில் ஆரம்பிச்சு இந்த இரண்டு வருஷ காலத்திலே!''

இருவரும் சிரித்தார்கள்.

''நீங்க சொல்றதை நம்ப முடியல்லையே! இந்த வருமானத்தை வச்சிக்கிட்டு மதுரையிலே உங்களாலே எப்படிக் காலம் கழிக்க முடியறது? இவ்வளவு பெரிய வீட்டைப் பிடிச்சு வச்சிருக்கீங்க. வாடகையிலே கால்வாசி கூடச் சம்பாதிக்காமல் மதுரையிலே ரெண்டு வருஷமா எப்படி இருக்க முடியும்?''

''ஊரிலே முன்னோர் சம்பாதிச்சு வச்சதைக் கொண்டு வந்து காலம் தள்ளுகிறேன். இல்லாட்ட முடியுமா? இதைவிட ஊரிலேயே இருந்திருக்கலாம் போல ஒவ்வொரு சமயத்திலே தோணுது. என்ன எழவுக்கு இந்தக் கட்டுகளோட மாரடிக்கணும்? கட்சிக்காரனிலே இருந்து அத்தனை பேரும் எவன் எப்போ நிஜத்தைச் சொல்றான், எப்போ உண்மையை மறைக்கிறான் என்கிறது தெரியாமலே இந்தத் தொழிலை நடத்த வேண்டியிருக்கிறது! இத்தனை அண்டப் புரட்டுக்களையும் பித்தலாட்டங்களையும், மோசடிகளையும் சமாளிச்சுத் தொழில் நடத்தியும் இன்னும் மாச வருமானம் எழுபது ரூபாயை எட்டிப் பிடிக்கலை...''


''மிஸ்டர் முத்துக்குமார்! நீங்க இதுக்கு மேலே சொல்லுங்க. நான் 'டிஸ்கரேஜ்' ஆயிட மாட்டேன். நான் சோர்ந்துட்டாலும் என் சித்தப்பா விடமாட்டார். இந்த வருஷத்திலேயே என் வீட்டு வாசலிலே போர்டு தொங்கணும்னு அவர் ஒற்றைக் காலிலே நிற்கிறார்!'' என்றான் ரங்கராஜன்.

முத்துக்குமார் இதைக் கேட்டதும் ஆச்சரியத்துக்குள்ளானான். ரங்கராஜனைப் பற்றியும் அவனுக்கு உள்ள வசதிகளைப் பற்றியும் முத்துக்குமாருக்கு நன்றாகத் தெரியும். நல்ல மூலதனம் போட்டு ஒரு தொழிலைத் தொடங்கி நடத்தவும் அவனுக்குச் சக்தி உண்டு என்பதால், வக்கீல் தொழிலில் இறங்கி அதிர்ஷ்டத்தைப் பரீட்சை பண்ணிக் கொண்டிருப்பானேன் என்று சொல்லிப் பார்த்தான். பல வருஷங்களுக்கு வருமானம் வராவிட்டாலும் பரவாயில்லை. சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்ற பின் வக்கீல் போர்டு மாட்டாவிட்டால் அது மகா பாவம் என்பது போல் கருதித் தன் சித்தப்பா வற்புறுத்துவதை ரங்கராஜன் விரிவாக எடுத்துரைத்தான். முடிவில் முத்துக்குமார் அவனைத் தன் தொழிலுக்கு வரவேற்றான்.

''வாருங்கள்! உங்க அதிர்ஷ்டம் பிரமாதமாக இருந்து, மாசம் அஞ்சு, பத்துன்னு — ஐயாயிரம், பத்தாயிரம்னு ஏன் வருமானம் வரக் கூடாது? பேஷா வாருங்கள்!... நான் முதலிலே சொன்னது சரியாய்ப் போய்விட்டது. வழி தப்பினாப்பிலே வந்திருக்கிறீங்களேன்னு சொன்னேன். அப்படி யில்லேன்னு நீங்க சொன்னீங்க. ஆனால் உண்மையிலே, வக்கீல் தொழிலுக்கு நீங்க வர்றது வழி தப்பினாப்பிலே வர்ற மாதிரிதான் எனக்குத் தோணுது.''

'வழியைத் தப்பவிட்டு ரொம்பக் காலமாச்சு. இப்போ போய்ச் சேர வேண்டிய இடத்துக்கு வந்திருக்கிறேன். அவ்வளவுதான். அந்த வழியிலே போனா இந்த இடத்துக்குத்தானே வரணும்' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட ரங்கராஜன் முத்துக்குமாரை நோக்கி, ''நீங்க சொல்றதும் உண்மைதான்'' என்றான்.

அடுத்துச் செய்ய வேண்டிய காரியங்கள், தொழில் முறையில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் முதலியவை பற்றிப் பேசிக் கொண்டிருந்துவிட்டு ரங்கராஜன் வீடு திரும்பினான். சென்னைக்கு விரைவில் செல்வதாகவும் சொல்லிவிட்டு வந்தான். (தொடரும்)



ஸ்கந்த சஷ்டி

ஸ்ரீவத்ஸன்

சிறப்புச் சிறுகதை

ஸ்வேதாரண்ய குருக்கள் ஸ்தம்பித்துப்போனார்.

யாரோ ஆக்ரோஷத்துடன் கக்கும் எரிமலையின் மேல் தம்மைத் தூக்கிப் போட்டதைப்போல் அவர் உணர்ந்தார்.

பழுக்கக் காய்ச்சிய ஆயிரம் வேல் கம்புகளைப் பலம் கொண்ட மட்டும் அவர் மார்பில் பலர் பாய்ச்சுவது போலிருந்தது.

''முருகா, இது என்ன சோதனை ?''

அவர் கண்கள் அருவியாகி விட்டன.

வேல் முருகன் செட்டியாரை நிமிர்ந்து ஒரு தடவை பார்த்தார். பார்வையில் கெஞ்சுதல் தெரிந்தது.

''என்ன பார்க்கிறீங்க, குருக்களய்யா? நான் சொன்னால் சொன்னதுதான்.''

''நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? நான் கனவு காணவில்லையே!''

''நான்தான் கனவு கண்டு கொண்டிருந்தேன், இவ்வளவு வருடங்களாக. இப்போது தான் விழித்துக் கொண்டேன். இனிமேல் கனவு காண மாட்டேன்.''

வேல் முருகன் செட்டியாரின் டிரான்ஸிஸ்டர் அலறியது.

''சொப்பன வாழ்வில் மகிழ்ந்து சுப்பிரமணிய ஸ்வாமி உன்னை மறந்தேன்.''



குருக்களுக்கு மெய் சிலிர்த்தது.

பக்தியை வளர்க்கப் பக்திமானுன சாகித்திய கர்த்தா இயற்றி, பக்திமானுன பிரபல நடிகர் ஒருவர் சொந்தக் குரலில் பாடிய அமர கீதம் அந்தப் பாட்டு.

செட்டியாரின் கை வேகமாய் டிரான்ஸிஸ்டரில் ஸ்டேஷனை நகர்த்தியது.

இந்த ஒரு செய்கையே போதும் வேல் முருகன் செட்டியாரின் தற்போதைய மனநிலையை எடை போட.

குருக்கள் என்ன செய்ய முடியும்?

''அப்போ நாழியாகுது. புறப்படுங்க குருக்களையா!''

''எனக்கு நாழியாகவில்லை. இனிமேல் சாயங்காலந்தான் கோயிலுக்குப் போகனும்.''

''முருகன் கோயிலில் வருடா வருடம் நடைபெறும் ஸ்கந்த சஷ்டி விழாவில், 'முருகன் அருள்' பற்றிக் கேட்பவர் மெய் மறக்கும்படி சொற்பொழிவு ஆற்றுவீர்களே! 'நீங்களா தலைமை வகிக்கப் போகிறீர்கள் ! இதைக் கேட்பதைவிட என் காதுகள் செவிடாகி விடலாமே !''


''ஏன் குருக்களையா உங்களுக்கு இந்த ஒரவஞ்சனை ? முருகன் அருள் பேசுவதைப் போல் முருகன் இல்லை என்றும் பேசப் போகிறேன்.''

குருக்கள் தம் இரு காதுகளையும் பொத்திக் கொண்டார்.

நாட்டில் பரவி வரும் நாஸ்திகப் பிரசாரம் பலரை நாஸ்திகராக்கி வருவதைப் பற்றிக்கூட அவர் கவலைப்படவில்லை. ஆனால் ஓர் ஆஸ்திக ரத்தினம் இப்படி ஆகிவிட்டதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

''வரும் சனிக்கிழமை ஸ்கந்த சஷ்டி. பரம்பரை பரம்பரையாய் உங்க தகப்பனுர், பாட்டனுர் இவங்க தான் ஸ்கந்த சஷ்டி உத்சவத்தை நடத்தி வைக்கிறது. போன வருடம்கூட நீங்க ரொம்ப விமரிசையாய் நடத்தினீங்க.''

''ஆமாம். இப்ப இப்பத்தான் தெரியுது. பகுத்தறிவு இல்லாமல் இவ்வளவு வருடமாய் நடத்தியது. இனி மேல் என் உயிர் உள்ள வரையில் நான் நடத்தமாட்டேன்.''



''உங்களுக்கு நாழியாகி விட்டதாகச் சொல்லவில்லை. எனக்கு ஒரு மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கப் போகனும். எதிர்ச்சுவரில் ஒட்டப்பட்ட போஸ்டரைப் படித்துப் பாருங்க !''

குருக்கள் பார்த்தார், படித்தார்.

மாகாண நாஸ்திகர்கள் மூன்றுவது
மகாநாடு

இன்று மாலை மூன்று மணி அளவில்
இடம்: டவுன் ஹால்

தலைமை வகிப்பவர்
வேல்முருகன் செட்டியார்
மாஜி ஆஸ்திகர்

''நீங்களா தலைமை வகிக்கப் போகிறீர்கள் ?''

''ஆமாம், தலைமை வகித்தால் என்ன?''

''உங்க மனசு சரியில்லை. நான் அப்புறம் வருகிறேன்.''

''எப்போ வந்தாலும் சரிதான். என் மனசு சரியாய்த்தான் இருக்கு.''

''எது எப்படியாலுைம் இந்த வருடம் மட்டுமாவது ஸ்கந்த சஷ்டி உத்ஸவத்தை நடத்தி விடுங்கோ. அடுத்த வருடம் பார்த்துக்கலாம். பகவான் செயல்.''

''நான்தான் செய்யனுமா? ஏன் வேறு யாராவது செய்யட்டுமே. ஏன் அந்தப் புது ஆஸ்திகன் திருமேனிப் பயல்தான் செய்யட்டுமே. வருஷக்கணக்கா விபூதியைச் சாம்பல்னு சொன்ன பயல் இப்போ துன்னூறு என்று சொல்லி நெத்தி முழுதும் பூசியபடி சிவ சிவன்னு சொல்றுன். அவனுக்குத்தானே உங்க முருகன் அருள் கொடுத்திருக்கிருரு. இந்த வேல் முருகனுக்கா கொடுக்கிறுர்?

போங்க அந்தப் பயலை வைச்சுக்கிட்டு சஷ்டி உத்ஸவம் கொண்டாடுங்க. பூரண கும்பம் வைச்சு வரவேற்று மேள தாளம் வச்சு மரியாதை செய்யுங்கோ!''

குருக்களுக்குப் பேச நா எழவில்லை.

''போன வருடம் சஷ்டி விழாவிலே நீங்க உபன்யாசம் செய்தபோது ஒரு சம்பவம் சொன்னீங்க. 'ஒருவன் சொன்னானாம்—ஒரு மகான் செத்துப் போன அன்றைக்குத்தான் நான் பிறந்தேன் என்று. இன்னொருவன் அதற்குப் பதில் சொன்னானாம். இரண்டும் துக்கப்பட வேண்டிய விஷயம் என்று' அது மாதிரிதான் இருக்கு. நீங்க நாஸ்திகராய் மாறியதும், திருமேனி ஆஸ்திகராக மாறியதும்.''

அதற்குள் ஊரில் உள்ள பகுத்தறிவு மன்றத் தொண்டர்கள் பத்துப் பேர் வந்துவிட்டார்கள்.

குருக்களை ஒருவன் பார்த்துவிட்டுப் பக்கத்தில் காரித் துப்பினான்.

குருக்கள் பார்த்தார்.

'முருகா! இந்தப் பத்துப் பேர் மத்தியில் வேல் முருகன் இருந்தால் போதும் அவர் பரம நாஸ்திகராகிவிட. இவரை அவர்களிடமிருந்து காப்பாற்று.''

வேல்முருகனுக்குக் குருக்களிடம் ஒருவித மரியாதை. அது அவமரியாதையாய் ஆகிவிட இன்னும் கொஞ்ச காலமாவது பிடிக்கும்.

''அப்போ புறப்பட்டுப் போங்க, குருக்களய்யா. இந்த வருஷம் முருகனுக்குப் பிராப்தம் இல்லை.''

''பிராப்தம் இல்லையா? என்ன சொல்கிறீர்கள்? பிராப்தம் எல்லாம் மனிதனுக்குத்தான். கடவுளுக்கு இல்லை.''

''அப்போ நீங்க ஏன் கவலைப்படறீங்க? முருகனுக்குச் சக்தி இருந்தால் சஷ்டியை நடத்திக்கிறார். தெய்வத்துக்கு மனுச உதவி தேவையில்லீங்க. அப்படி மனித உதவி தேவைப்பட்டால் அப்புறம் அது தெய்வமில்லீங்க.''

பரம நாஸ்திகன்கூட, ரத்தத்தில் நாஸ்திகம் ஊறியவன்கூட இப்படிப் பேச மாட்டானே. அட கடவுளே! வேல்முருகன் செட்டியார் பேசும் பேச்சா இது?

மனம் புழுங்கினார் குருக்கள்.

இப்போது சமயம் சரியில்லை என்று புறப்பட்டு விட்டார்.

அவர் வாசலைத் தாண்டும்போது, ''ஸ்கந்த சஷ்டி கொண்டாடாட்டி ஊரிலே மழை பெய்யாதாக்கும்'' என்று வேல்முருகன் பேசவும், கூட இருந்தவர்கள் 'கொல்' என்று சிரிக்கவும் குருக்கள் தம் காதுகளைப் பொத்திக் கொண்டார்.

நேரிடக் கோயிலுக்கு வந்தார்.

வள்ளி தெய்வானையுடன் முருகன் நின்று கொண்டிருந்தான். நெய் விளக்கு நூண்டா விளக்காய் எரிந்து கொண்டிருந்தது.

கண்களை மூடிக் கொண்டார் குருக்கள். மனமுருக வேண்டினார்.

''முருகா! பரம்பரை பரம்பரையாய் உனக்கு ஸ்கந்த சஷ்டி உத்ஸவம் செய்வதற்காகவே பிறவி எடுத்ததாய்ச் சொல்லிக் கொண்டு வந்த கோவில் செட்டியார் குடும்பத்தில் வந்த வேல்முருகனை ஏன் இப்படியாகிவிட்டாய்? அவருக்கு நல்ல புத்தியைக் கொடுப்பது உன் கடமை. ஆயிரம் நாஸ்திகர்கள் பதினாயிரம் நாஸ்திகர்களாகப் பெருகட்டும். ஆனால் ஓர் ஆஸ்திகனை மட்டும் நாஸ்திகனாக்கி விடாதே!''

ஸ்கந்த சஷ்டிக்கு மூன்று நாட்களே இருந்தன. மறுபடி ஒரு தடவை குருக்கள் வேல் முருகனிடம் வந்தார்.

''வாங்க, குருக்களையா, ஏது இவ்வளவு தூரம்?''

''ஸ்கந்த சஷ்டிக்கு இன்னும் மூன்று நாட்கள்தான் இருக்கு.''

''இருக்கட்டுமே. நான்தான் சொல்லிவிட்டேனே தீர்மானமாய். வேறு யாராவது செய்யட்டுமே இந்த வருடம்.''

''என் காதுகளை நம்பவே முடியவில்லையே. பத்து வருடங்கள் முந்தி ஸ்கந்த சஷ்டி விழாவைத் தாமேதான் நடத்த வேண்டும். மற்ற யாரும் நடத்தக் கூடாது என்று சென்னை உயர்நீதி மன்றம் வரை போய்த் தம் உரிமையை ஸ்தாபித்துக் கொண்டவராச்சே, உங்கள் தகப்பனார் கார்த்திகேயன் செட்டியார். அப்படிப்பட்டவரின் பிள்ளையா இப்படி வேறு யாராவது செய்யட்டும் என்று சொல்கிறீர்கள்?''

''ஆமாம், செய்து என்னய்யா பிரயோசனம்? சொத்து அழிஞ்சுது. அவ்வளவுதான்.''

''சிவ சிவ. பகவானுக்குச் செய்து சொத்து அழியவாவது? அழியாத சொத்தைச் செலவு செய்கிறோம். இப்படிப்பட்ட பேச்சு உங்க நிழல் பட்டவன் வாயிலிருந்துகூட வரக் கூடாதே.''

''பின்னே என்ன குருக்களையா. எத்தனை ஸ்கந்த சஷ்டி உத்ஸவம் செய்த குடும்பம் எங்க குடும்பம். என்னை எதிர்த்து நின்னு நகரசபைத் தேர்தலில் போட்டி போட்டான் அந்தத் திருமேனிப் பயல். பயல் படு நாஸ்திகன் — ஸ்வாமி வீதி உலா வந்தால் கதவைத் தாழ்ப்பாள் போட்டு விட்டு வீட்டுக் கூடத்தில் தலைகுப்புறப் படுப்பான். அவன் இந்த வார்டிலே பத்து மாதங்கள் முந்தி என்னை எதிர்த்துப் போட்டியிட்டான்.

''இந்த வார்டிலே எல்லோருமே கோயிலுக்குப் போகிறவங்கதான். அந்தப் பயல் நாஸ்திகன். அவனுக்கு ஒரு வோட்டும் விழாதுன்னு எல்லோரும் சொன்னாங்க.

'''உங்களுக்குத் தெய்வ பலம் இருக்கு; அவன் டிபாஸிட் போயிடும்'னு பேர்பேராய்ச் சொன்னாங்க. ஆனால் டிபாஸிட் போனது எனக்குத்தான்.

''எனக்குத் தெய்வ பலம் இருந்தது. அவனுக்குப் பண பலம் இருந்தது.

''சாமிக்குச் சக்தி இருக்கு என்பதில் எனக்கே சந்தேகம் வந்திடுச்சு. இந்த ஒண்ணே போதும், சாமி இடத்திலே எனக்கு அவநம்பிக்கை ஏற்பட.

''நான் சொல்றதிலே என்ன தப்பு?''

குருக்களையா பேசாமலிருந்தார்.

''என்ன, கேட்கிறேன் பேசாமல் இருக்கிறீங்களே, குருக்களையா?''

''அக்கிரமக்காரனுக்கு ஏதாவது சௌகரியம் கிடைச்சால் அதைப் பற்றி நாம் ஏன

ப்ரூக் பாண்ட்

ப்ரூ இன்ஸ்டன்ட்


நொடிப் பொழுதில் தயார்! கப்புகள் கணக்கிலே திருப்தி !

ப்ரூ தயாரிப்பது சுலபம்! வெந்நீரை ஊற்றி, விரும்பும் சுவை பெற பாலும் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளவும். அசல் காபி—சிக்கரி மணமும் சுவையும் கொண்டு உங்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்க நொடிப் பொழுதில் ப்ரூ தயாராகிவிடுகிறது !

நினைவிருக்கட்டும், ப்ரூ தயாரிப்பதிலே, சிறிதுகூட சிரமமோ அல்லது வடிகட்டும் தொந்தரவோ கிடையாது.

இதற்கு மேலாக, நீங்கள் விரும்பும் சுவைக்கேற்றபடி ப்ரூவை சிறிது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சேர்த்து தயாரித்துக் கொள்ளலாம்.

வாங்குங்கள் ப்ரூ—காபியும் சிக்கரியும் கலந்த சுவையை நன்கறிந்த ப்ரூக் பாண்டின் ருசி பார்த்துத் தரம் காணும் திறமையாளர்களால் கவனத்துடன் கலக்கப்பட்டது.



கவனிக்கணும்? நகரசபைத் தேர்தலுக்கும், சுவாமி காரியத்துக்கும் என்ன சம்பந்த முங்க ?''

''என்னைக் கேட்டால் ரொம்பத் தர்ம காரியங்கள் ஸ்வாமி காரியங்கள் எல்லாம் இந்த மாதிரி பஞ்சாயத்துத் தேர்தல், நகரசபைத் தேர்தல், சட்டசபைத் தேர்தல் இம் மாதிரி தேர்தல்களால் தான் ரொம்பவும் குறைஞ்சு போச்சு. பண வசதி படைச்ச தனவந்தர்கள் எல்லாம் கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்துக்கிட்டு வந்தாங்க. பல மடம் வச்சாங்க. சத்திரம் கட்டி வைச்சுச் சோறு போட்டாங்க.

''இந்த நகரசபைத் தேர்தல், சட்டசபைத் தேர்தல் எல்லாம் ஆதி காலத்திலேயும் இம்மாதிரி பணத்தைத் தண்ணீர் மாதிரிச் செலவழிச்சு நடத்தியிருந்தால் இப்போ நாம் பார்க்கிற கோவில்கள், சத்திரங்கள் கட்டி யிருப்பாங்களா என்பதே சந்தேகம்.

''ஜனங்களுக்கு நன்மை செய்யணுங்கிறது நல்லதுதான். அதுக்காகப் போட்டா போட்டி வளர்த் தகராறு. இப்படி எல்லாம் ஏற்பட்டால்தான் நல்லதா ? அந்தந்தக் கிராமத்து ஜனங்க வோட்டுப் போடாமலேயே யாரை யாவது ஒருத்தரை எடுத்தால் போதாதா ?

''இப்போ பாருங்க, ஒரு கௌன்ஸிலர் பதவிக்குப் போட்டி போட்டுத் தோற்ற தால் உங்களுக்கு மனம் இடிந்து ஸ்கந்த சஷ்டி செய்ய மறுக்கிறீர்கள்.

''இதனால்தான் சொன்னேன். இப்படிப் பட்ட தேர்தல்களால்தான் தர்ம காரியங்கள் நின்று போய் விட்டன.''

''பெரிய அரசியல்வாதி கெட்டான் போங்கள், குருக்களையா. ரொம்ப ஜோராய்ப் பேசுறீங்களே !''

''எனக்கு எதுக்குங்க அரசியல்? உங்க மாதிரி இருப்பவங்க தர்ம காரியங்களையும் ஸ்வாமி காரியங்களையும் விட்டு விடக் கூடாது. ஸ்கந்த சஷ்டியை இவ்வருடம் அவசியம் நடத்தி வைக்கணும்.''

''குருக்களையா, கடவுள்கிட்டே எனக்கு நம்பிக்கை குறைஞ்சு போச்சு. இனிமேல் எந்த ஸ்வாமி காரியமும் என் குடும்பத்தாராலும் என்னாலும் நடக்காது. உங்க மகளுக்குக் கலியாணம்னு சொல்லுங்க. எவ்வளவு பணம் தர முடியுமோ, தரேன் இனாமாக.''

குறுகிய காலத்தில் இப்படி ஒரு நாஸ்திக விதை வேல்முருகன் மனத்தில் விதைக்கப் பட்டு அது விரைவில் மரமாகி விஷக் கனிகளைக் கொடுக்கும் என்று யார்தான் எதிர் பார்த்திருக்க முடியும் ?

குருக்கள் கிளம்பி விட்டார்.

'இனிமேல் மனித யத்தனத்தில் வேல் முருகன் செட்டியாரை யாராலும் ஆஸ்திக ராக்க முடியாது. ஸ்ரீவள்ளி தேவசேனா ஸமேத சுப்பிரமண்ய ஸ்வாமி தான் திருத்த வேண்டும்.'



ஸ்ரீ கே—

" நான் ஸிகரெட் பார்க்கப் போறபோதுதான் இந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு நீ என் எதிரில் வரணுமா, அக்கா ?"

பொழுது விடிந்தால் ஸ்கந்த சஷ்டி. இரவு கோயிலில் கொட்டு மேளம் முழங்கிக் கொண்டிருந்தது. பக்த கோடிகள் ஏராளமாக வெளியூரில் இருந்து வந்து விட்டார்கள். அந்தப் பக்கத்திலேயே அந்த முருகன் கோயில் மிகப் பிரசித்தம்.

பக்தர்கள் தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் சுப. லெ. க. சத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எதிரே இருந்த சத்திரத்தில் முருக பக்தர்கள் கூடி முருக நாமம் ஜபித்துக் கொண்டிருந்தார்கள்.

கோவிலுக்குச் சற்று தூரம் தள்ளி ஓடிய ஆற்றின் கரையை அடுத்த மண்டபத்தில் முருகனுக்கு மறுதினம் காவடி எடுக்கப் பலர் ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

இரவு மணி பத்து.

வேல்முருகன் தம்முடைய பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார் :

''ஏண்டா, வேலு ! எங்கேடா சொல்லாமல் கிளம்பிட்டே?'' என்று அவர் தாயார் கேட்டாள்.

''நாளைக்குக் கந்த சஷ்டி இல்லையா ? அதனால் ஊருக்குப் புறப்படுகிறேன்.''

''என்னடா, இயற்கைக்கு விரோதமாய் இருக்கு. வெளியூரில் இருப்பவங்க ஸ்கந்த சஷ்டின்னு இந்த ஊருக்கு வருவாங்க. நீ என்னடா வென்றால் ஊரை விட்டுப் போறியே. இது உனக்கே நல்லா இருக்கா ? ஸ்கந்த சஷ்டி உத்ஸவத்தை நேமமும் நிஷ்டையுமாய் உங்க அப்பா தாத்தா எல்லாரும் செய்திருக்காங்க. நீயும் இரண்டு வருஷங்கள் செய்தே. இந்த வருடம் செய்யல்லே. தெய்வ குற்றம் ஏற்பட்டு விடும்படி செய்கிறாய். ஏன்தான் உன் புத்தி இப்படி யாகி விட்டதோ ?''

''இப்பத்தான் அம்மா என் புத்தி நல்ல நிலைக்கு வந்திருக்கிறது. பரம்பரை பரம்பரையாய் ஸ்வாமியைத் திட்டிய திருமேனிப் பயலுக்கு அவர் அருள் கொடுக்கிறார். தெய்வ பலம்தான் எதையும் வெற்றியடையச் செய்யும் என்று நம்பி மோசம் போனேன். பண பலம்தான் வெற்றி பெறச் செய்யும் என்பதைக் கண் கூடாகக் கண்ட பிறகு முருகனைப் பற்றிய பிடிப்பு எனக்கு விட்டு விட்டது.''

''கேவலம் ஒரு கவுன்ஸிலர் தேர்தலில் தோற்றதற்காகக் கடவுளே இல்லை என்று வந்து விட்டாயே. கடவுள் சித்தம் நீ தோற்க வேண்டும் என்பது. நீ ஜெயித்தால் கோவில் காரியங்கள், தர்ம காரியங்கள் இவைகளில் நாட்டம் குறையும் என்பதால்தான் முருகன் இப்படிச் செய்திருக்கிறார்.''

''முருகனுக்கு வக்காலத்து வாங்காதே அம்மா! அவருக்குச் சக்தி இருந்தால் மனித உதவியில்லாமலேயே அவருடைய சஷ்டி நடைபெறும்.''

''நீ சஷ்டி உத்ஸவம் நடத்த வேண்டாம், ஊரில் இருந்தாலாவது ஸ்வாமி தரிசனம் செய்யலாம் அல்லவா?''

''ஊரில் இருந்தால் ரத்தத்தில் ஊறிய பழக்கத்தால் கோவிலுக்குச் சென்று ஸ்கந்த சஷ்டியைப் பார்க்கச் சொல்லும். அதனால் நான் போகிறேன். நாளை இரவு வருவேன்.''

''எங்கே போகிறாய்?''

''உன் பேத்தி வள்ளி வீட்டுக்குப் போகிறேன். நாளைக்கு அங்கு தங்கிச் சாப்பிட்டு விட்டு இரவு பத்து மணி வண்டிக்குப் புறப்பட்டு வருவேன். அதற்குள் இங்கு எல்லாம் முடிந்து விடும் அல்லவா?''

அவர் புறப்பட்டுப் போய் விட்டார். அவர் மனைவி விம்மினாள். தாயார் பிழியப் பிழிய அழுதாள்.

மறுநாள் பொழுது விடியவும் வேல் முருகன் தன் பெண் வள்ளியின் ஊர் இருக்கும் ஸ்டேஷனில் இறங்கினார்.

ஸ்டேஷனில் இருந்து வீடு ஒரு மைல் தூரம் இருந்தது.

அவர் பெண் வள்ளி. அவருக்கு ஒரே பெண். அவளிடத்தில் அவருக்கு உயிர். அவள் பேரில் ஒரு ஈ உட்கார்ந்தால்கூட அவர் மனம் துடிக்கும். சிறு வயதில் அவள் இளம் பிள்ளை வாதம் வந்து துடியாய்த் துடித்தபோது சொத்தில் பாதியை விற்றுப் பட்டணத்துக்கே எடுத்துப் போய்ச் சிகிச்சை செய்தார். நாற்பத்து ஐந்து நாட்கள் முருகன் கோயிலே ஈர வேஷ்டியுடன் அடிப் பிரதட்சணம் செய்தார்; உபவாசம் இருந்தார்.

அவர் வரையில் அவருடைய மகள் வள்ளிதான் அவருடைய மூச்சுக் காற்று. அவளுக்கு ஏதாவது ஒன்று என்றால் அவர் உயிர் உடனே போய் விடும்.

அவர் தம் மகள் வீட்டுக்குப் போனபோது காலை மணி ஆறு. வழக்கமாக அவர் மகள் வீட்டுக்குப் போகும்போது எல்லோரும் தூங்கிக் கொண்டிருப்பார்கள். அவர் போய்த் தான் எழுப்புவார்.

ஆனால் இன்று அவர் வீட்டுக்குள் நுழைந்த போது அவர் கண்ட காட்சி!....

வீட்டின் கூடத்தில் வைக்கப்பட்டிருந்த பெரிய முருகன் படத்தின் எதிரே கோலம் போடப்பட்டுப் படத்துக்கு மாலை சூட்டப் பட்டிருந்தது.

ஒரு பக்கம் வெள்ளிக் குத்து விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஊதுவத்தி சாம்பிராணி மணம் கம் என்று வந்துகொண்டிருந்தது.

எதிரே அவர் பெண் வள்ளி, அவள் கணவன் டாக்டர் குமர குரு, பேரன் பால முருகு எல்லோரும் உட்கார்ந்து கொண்டு முருக பூஜை செய்து கொண்டிருந்தார்கள்.

அங்கிருந்த தூய்மை நிலவிய அமைதியும் தெய்வமணமும் அவரைக் கிறுகிறுக்க வைத்தன. அந்த முருகன் படம் பெண்ணுக்கு அவர் புக்ககம் புறப்படும் பொழுது கொடுத்தது. மாப்பிள்ளை பெயர் முருகன் பெயராக இருக்க வேண்டும் என்று தேடிக் குமர குருவைத் தேர்ந்தெடுத்தார்.

தன் ரத்தத்தின் பைத்தியக்காரக் கடவுள் பக்தி மகள் ரத்தத்திலும் இழையோடாமல் இருக்குமா?

உடனேயே மனத்தில் நிர்மாணித்துக் கொண்டார். தன் பெண்ணிடம் உள்ள கடவுள் பிரமையைப் போக்கிவிட வேண்டும் என்று.

அவர் மகள் கேட்டாள்.

''வாங்கப்பா, ஏது ரொம்பவும் ஆச்சரியமான எதிர்பாராத விஜயமாய் இருக்கிறதே! இன்று ஸ்கந்த சஷ்டியில்லையா? ஊரில் நம்ம மண்டகப்படியாச்சே? எப்படி ஊரை விட்டு வர முடிந்தது உங்களால்?''

வேல் முருகன் பதில் சொல்ல முயலும் போதே அவர் பெண் குறுக்கிட்டாள்.

''கேட்டீர்களா அப்பா இந்த அதிசயத்தை? நேற்றுக் காலை பஸ்ஸில் சென்னைக்கு வைத்தியர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ள உங்கள் மாப்பிள்ளை புறப்பட்டுப் போனார். போகும்பொழுது எதற்கும் ஓர் அவசரக் காரியத்துக்கு இருக்கட்டும் என்று முதல் உதவி 'கிட்'டையும் எடுத்துப் போவது வழக்கம்.

நேற்று பஸ்ஸிலே எட்டு மணிக்கு ஏறி விட்டார்.

பத்து மணி இருக்கும்.

பஸ் ஒரு சிற்றூர் அருகில் போகும்போது ஓர் ஆள் பஸ்ஸை நிறுத்தும்படி சைகை காட்டினான். கண்டக்டர் இடமில்லை என்று சொன்னார்.

''ரொம்ப ஆபத்து ஐயா. என் இரண்டு மனைவிகளுக்கும் திடீரென்று உடம்பு. இந்த பஸ்ஸில் டவுனுக்கு அழைத்துப் போகணும்'' என்றான்.

கண்டக்டர், ''இடமில்லை. அடுத்த பஸ் பன்னிரண்டு மணிக்குத்தான் வரும். அதில் வா'' என்றார்.

''இன்னும் மூணு மணி நேரம் கழித்தா? அதுவரை அவங்க உயிரோட இருந்தால் தானே? புண்ணியவாங்க இந்த வண்டியிலே யாராவது டாக்டரய்யா இருந்தா ஒத்தாசை செய்யுங்க'' என்று கெஞ்சியவன் பஸ்ஸைச் சுற்றிச் சுற்றி வந்தான். உங்க மாப்பிள்ளையைப் பார்த்து, ''அடடே! இதோ இருக்கீங்களே, நீங்களாவது வந்து பார்த்து வைத்தியம் செய்யுங்க. ஐயாவை அடிக்கடி ஆஸ்பத்திரியிலே பார்த்திருக்கேன்'' என்றான்.

இரண்டு உயிர்கள் துடிக்கும்போது அவர்களைக் கவனியாது பட்டணம் போவதைத் தொழில் முறைக்கு விரோதம் என்று கருதி உங்கள் மாப்பிள்ளை பஸ்ஸை விட்டு இறங்கினார்.

பஸ் புறப்பட்டு விட்டது.

''எங்கே அப்பா உன் மனைவிகள்?'' என்று கேட்டார் மாப்பிள்ளை.

''இதோ இங்கேதானுங்க'' என்று எதிரே இருந்த முருகன் கோவிலைக் காட்டினான்.

அங்கே கோபுர வாசலில் இருந்த மண்டபத்தின் அடியில் இரு ஸ்திரீகள் படுத்திருந்தார்கள். இவர் போய்ப் பரிசோதித்துப்

நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட...

ஒருகடினமான வழியிலுள்ள ஜிவனம்தான்! ஆயினும், இன்றைய கடும் உழைப்பு சந்தோஷமான, இலகுவான வரும்காலத்திற்கு வழிகாண்பிக்கிறது என்பதை அறிய ஆறுதலாகிறது.

அதற்கு நீங்கள் முன்ஜாக்கிரதையுடன் திட்டங்களிடவேண்டும். உங்களுடையதும், உங்கள் குடும்பத்தினுடையதும் வரும் காலத்திற்காக நீங்கள் பதிவாக சேமிக்கவேண்டும்.

நீங்கள் சிரமத்துடன் உழைத்து அடைந்த பணத்தை, வட்டிபெற்று, நிலையாக வளர்ந்து, கவலையற்ற எதிர்காலத்தை உறுதிப்படுத்த யூகோபாங்கில் சேமியுங்கள்.

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்

தலைமை காரியாலயம்
கல்கத்தா-1



நீங்கள் பணம் சேமிக்கலாம்,
யுகோ பாங்க் உங்களுக்கு
உதவி செய்ய முடியும்.

பார்த்தார். நல்ல வேளை! ரொம்பவும் ஆபத்து இல்லை. ஆளுக்கு ஓர் ஊசி போட்டார்.

பன்னிரண்டு மணி பஸ் வந்ததும் அந்த ஆளையும் அவன் மனைவிகளையும் ஏற்றிவிட்டார். இனிமேல் இந்த பஸ்ஸில் பட்டணம் போனாலும் கூடச் சரியான காலத்தில் வைத்தியர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ள முடியாது என்று ஊர் திரும்பி விட்டார்.

என்ன அதிசயம் அப்பா! கேட்டால்கூட மயிர்க் கூச்சல் எடுக்கிறது.

இவர் புறப்பட்டுச் சென்ற எட்டு மணி பஸ் சென்னை செல்லும் வழியில் சுமார் பத்து மணிக்கு முதல் நாள் இரவு பெய்த மழையால் பாதை வழுக்கி ஒரு பாலத்தின் மேல் இருந்து கீழே விழுந்து பஸ் பிரயாணிகள் அநேகமாக எல்லோரும் ஸ்தலத்திலேயே இறந்து விட்டார்கள். டிரைவரும் கண்டக்டரும்தான் தப்பினார்கள். நினைத்தாலே பயமாயிருக்கிறது அப்பா.

அந்தப் பஸ்ஸில் போன என் கணவரை நடு வழியில் அந்த ஆள் வந்து இறக்கி விடாமல் இருந்திருந்தால்...அவர் கதி... என் கதி.... என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லையப்பா.

பரம்பரை பரம்பரையாய் முருகனுக்கு ஸ்கந்த சஷ்டி உத்சவம் கொண்டாடிய குடும்பத்துக்கு முருகன் ஆபத்தை உண்டாக்கு வாரா? அவருடைய குழந்தைகளை அவர் பழி வாங்குவாரா?

நடுவழியில் பஸ்ஸை நிறுத்தி இரு மனைவிகளுக்கும் உடம்பு என்று என் கணவரை அழைத்துப் போன ஆள் பெயர் என்ன தெரியுமா அப்பா?

அவன் பெயர் முருகன் — அவன் மனைவிகளின் பெயர்கள் — வள்ளி, தெய்வானையாம்- அவர்கள் படுத்திருந்த இடமோ முருகன் கோயில்.

உங்களுக்குப் புரியவில்லையா அப்பா? **உங்கள் மாப்பிள்ளையின் உயிரைக் காப்பாற்றத்தான் முருகன் பாதி வழியில் பஸ்ஸை நிறுத்தி அவரை இறக்கி விட்டார்.''**

மெய் சிலிர்த்து நின்றார் வேல் முருகன்.

அவர் மாப்பிள்ளைக்கு ஏதாவது நேரிட்டிருந்தால்... ஐயோ... அவரால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

முருகன் அருள் மட்டும் இல்லாதிருந்தால்....? நெருப்பின் மீது படிந்திருந்த சாம்பல் ஊதியவுடன் போய்விடுவது போல் இந்தச் சம்பவம் அவரது ஆஸ்திகத்தின் மேல் படிந்திருந்த நாஸ்திகம் என்ற சாம்பலை அகற்றிவிட்டது.

இப்போது அவர் பழைய ஆஸ்திக வேல் முருகன்.

அவர் உடல் பரபரக்கத் தொடங்கியது.

''மாப்பிள்ளை! உடனே ஒரு டாக்ஸி கொண்டு வாருங்கள்.''

''ஏன் இவ்வளவு அவசரம்? வந்து பத்து நிமிடம்கூட ஆகவில்லை. காப்பிகூடச் சாப்பிடவில்லை.''

''காப்பியா? என் முருகனின் திவ்விய உருவத்தைத் தரிசித்த பிறகுதான் பச்சைத் தண்ணீர் அருந்துவேன். இன்னும் இரண்டு மணி நேரத்தில் நான் ஊரில் இருந்தாக வேண்டும். ஸ்கந்த சஷ்டியை நான்தான் நடத்துவேன்.''

மாப்பிள்ளை டாக்ஸிக்கு அலைந்தும் கிடைக்கவில்லை. சாதாரண ரயிலில் ஏறினார்.

ஊர் திரும்பும்போது இரவு மணி எட்டு. ஸ்டேஷனில் இறங்கியதும் வீட்டுக்குக்கூடப் போகாமல் நேரே முருகன் கோயிலுக்குப் போனார்.

அங்கே ஸ்கந்த சஷ்டி உத்சவம் வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது. அவர் சுற்றும்முற்றும் பார்த்தார்;

வருடா வருடத்தை விட இந்த வருடம் வெகு விமரிசையாக நடப்பது போல் தோன்றியது. முருகனுக்கு நாம் செய்யக் கொடுத்து வைக்கவில்லையே என்று மனம் புழுங்கினார்.

இந்த வருடம் ஸ்கந்த சஷ்டி உற்சவம் செய்து வைத்த புண்ணியவானின் காலில் விழக் துடித்தார்.

தீபாராதனைத் தட்டை எடுத்து வந்த குருக்கள் திடுக்கிட்டார். ஆச்சரியம் உண்டாகியது.

''யாரது. செட்டியார்வாளா?''

''ஆமாம். முருகனுக்கு இன்று மண்டகப்படி செய்தவங்க யார்? அவங்க காலில் விழணும்.''

''அப்படியா? இங்கே வாங்க'' என்று அழைத்துப் போனார் குருக்கள்.

பெண்கள் வரிசையில் ஓர் ஓரமாய் ஒதுங்கி நின்றிருந்த ஒரு ஸ்திரீயைக் காட்டி ''இவங்கதான் இந்த வருஷம் மண்டகப்படி செய்தவங்க!'' என்றார்.

தலைநிமிர்ந்தார் வேல் முருகன்.

''அம்மா! நீயா?''

''ஆமாண்டா வேலு. பரம்பரை பரம்பரையாய் நம்ம குடும்பம் செய்து வந்த ஸ்கந்த சஷ்டி உத்சவத்தை என் உயிர் இருக்கும்போது என் கண்ணெதிரில் இன்னொருவர் செய்ய விடுவேனா? நீ மாட்டேன் என்றதும் நானே குருக்களிடம் ரகசியமாய்ச் சொல்லி ஏற்பாடு செய்தேன். நீ எப்படியும் திரும்பி விடுவாய் என்று தெரியும் எனக்கு.''

''அம்மா! நீ தெய்வம். நம்ம குடும்பத்துக்கு வர இருந்த தெய்வ குற்றத்தையும், சாபத்தையும் நீ தடுத்து நிறுத்தி விட்டாய். பணத்துக்கு என்ன செய்தாய் அம்மா?''

''என் நகைகள் மூன்றையும் உன் மனைவியின் நகைகள் இரண்டையும் விற்றுவிட்டோம். பகவானுக்குச் செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா, வேலு?''

''அம்மா...அம்மா...'' அதற்கு மேல் அவரால் ஏதும் சொல்ல முடியவில்லை. தேம்பித் தேம்பி அழும் அவரை வள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி பார்த்து அருள் பாலித்துக் கொண்டிருந்தார்.

நீண்ட நேரம் கழித்து அவர் வீடு திரும்பும் போது எதிரே இருந்த மண்டபத்தில் இருந்து,

''சொப்பன வாழ்வில் மகிழ்ந்து
சுப்பிரமணிய ஸ்வாமி உனைமறந்தேன்''

என்ற இசைத்தட்டு ஒலித்தது.

''இந்தப் பாட்டு எனக்காகத்தான் பாடப்பட்டிருக்க வேண்டும்'' என்று வேல் முருகன் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார். வேல் முருகனை இனி யாரும் அசைக்க முடியாது.



தாயில்லாக் குழந்தை

கே. எஸ். ஜம்புநாதன்

காந்திஜி 1927ம் ஆண்டு மத்தியில் இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்தார். சில இடங்களில் மக்கள் காந்திஜியின் கோஷ்டியைத் தெரிந்து கொள்ளாமல், காந்திஜியின் கோஷ்டியைச் சேர்ந்த அனைவருமே அவருடைய குடும்பமும் சுற்றமும் என்று கற்பனை செய்து கொண்டார்கள். மத்திய இலங்கையில் ஓர் ஐரோப்பிய மாது காந்திஜியிடம் கஸ்தூரி பாவைச் சுட்டிக் காட்டி, "இந்த மாது உங்களுடைய தாயா?" என்று கேட்டுவிட்டாள். காந்திஜி சிரித்துக் கொண்டே "ஆம்" என்று கூறினார். மறு நாள் பத்திரிகையில் இந்தச் செய்தி வெளியாகிவிட்டது. செய்தி வெளியான தினத்தன்று காலை காந்திஜி மாத்தளையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட போது, மேடை மீது பா இல்லாமலிருக்கவே, ஒருசிலர், "உங்களுடைய அன்னை ஏன் வரவில்லை?" என்று கேட்டார்கள். காந்திஜி உடனே பதில் கூறவில்லை. கூட்டத்தில் பேசும்போது அவர் பின்வருமாறு சொன்னார்: "நேற்றிரவு பாவை என்னுடைய தாயாரா என்று ஒருவர் கேட்டார். இன்றும் அதே கேள்விதான் கிடைத்தது. இந்தத் தவற்றை நான் ரசிக்கிறேன். பரஸ்பர சம்மதத்தின் பேரில் பல வருஷங்களுக்கு முன்னமேயே பா மனைவி ஸ்தானத்தை விட்டுவிட்டாள். சென்ற முப்பது வருஷங்களாகக் கஸ்தூரிபா எனக்கு அன்னையைப் போல் அன்பும் பணிவிடையும் செய்து வருகிறாள். தாய், தோழி, சமையற்காரி, தாதி, துணி துவைத்துப் போடும் ஊழியக்காரி என்று பலப்பல விதமாக எனக்குச் சேவை செய்து வருகிறாள். எனக்குக் கிடைக்கும் வரவேற்பு வைபவங்களில் கலந்து கொள்ள அதிகாலையிலேயே அவளும் கிளம்பி விட்டால், எனக்கு உணவு தயாரிக்கவோ, என்னுடைய உடைகளைச் சுத்தம் செய்யவோ வேறு ஆள் தேட நேரிடும். பிரயாண காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் புது ஆள் தேடுவது முடியாத காரியம். என்னுடைய உணவு தயாரிப்பதும் தனிக் கலையாகும். ஆகவே, எங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். அதாவது, உழைப்பு அவளுக்கு, கௌரவம் எனக்கு என்று. நான் பனியா. என்னுடைய வியாபாரத்தில் நஷ்டமே கிடையாது. நீங்கள் கஸ்தூரி பாவைப் பற்றி அன்புடன் விசாரித்தீர்கள் என்பதை மட்டும் என் சகாக்கள் அவளிடம் தெரிவித்து விடுவார்கள் என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்."

ஜனங்கள் கைகொட்டி ஆரவாரித்தார்கள்.

சபர்மதி ஆசிரமத்தில் சமையல் நிர்வாகப் பொறுப்பைக் கஸ்தூரிபா ஏற்றுக் கொண்டிருந்த சமயம் திருவிதாங்கூரைச் சேர்ந்த ஓர் இளைஞரும் அவருக்கு உதவியாகப் பணியாற்றினார். எதையும் துப்புரவாகவும் சீராகவும் செய்யும் இயல்புடைய பா, பிறரிடம் வேலை வாங்குவதிலும் கண்டிப்பானவர். அவருக்குத் திருப்தி தரும் முறையில் அந்த இளைஞன் உழைத்தான். அன்றாடம் விருந்தினர்கள் இருந்தாலும் இருவரும் அயராது உழைப்பார்கள். ஒரு நாள் மதிய உணவு நேரத்துக்குப் பிறகு சமையலறையைச் சுத்தம் செய்துவிட்டு பா ஓய்வெடுத்துக்கொள்ளச் சென்றபோது பண்டித மோதிலால் நேருவும் வேறு சிலரும் ஆசிரமத்துக்கு வந்தார்கள். அவர்களுக்கு உணவளிக்க விரும்பி, காந்திஜி சமையலறைக்கு வந்தபோது, பா உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, திருவிதாங்கூர் இளைஞனை அழைத்து உணவு தயாரிக்கச் சொன்னார். "குலாம் பதறனை உதவிக்கு அழைத்துக்கொள். பாவுக்கு ஓய்வு அவசியம். அவளுடைய உறக்கத்தைக் கலைக்காமல் வேலை செய்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

இருவரும் பாத்திரங்களை ஓசைப்படுத்தாமல் அங்கு சமையலில் ஈடுபட்டார்கள். தற்செயலாக ஒரு தட்டு கீழே விழுந்துவிடவே, அந்தச் சத்தத்தைக் கேட்டு விழித்துக்கொண்ட பா, சமையலறைக்கு வந்தார். விருந்தினர்களுக்கு உணவு தயாரிக்கும்படி காந்திஜி கூறியதாக அவர்கள் சொன்னதும், "என்னை எழுப்பக் கூடாதா?" என்று பா கேட்டார்.

"நீங்கள் களைப்பாக இருப்பதால் உங்களுக்குத் தொந்தரவு தரக் கூடாது என்று காந்திஜி கூறியதால் நாங்களே சமையல் செய்ய முனைந்தோம்" என்று குலாம் பதறன் விடையளித்தார்.

"நீங்களும் என்னுடன் ஓடியாடி வேலை செய்கிறீர்களே, உங்களுக்குக் களைப்பு இருக்காதா?" என்று கேட்டுவிட்டு, தாமும் வேலை செய்ய பா முனைந்தார்.

அன்று மாலை பிரார்த்தனைக்குப் பிறகு பா காந்திஜியிடம் சென்று, "விருந்தினர்களுக்கு உணவு தயாரிக்க என்னைக் கூப்பிடக் கூடாதா? நான் சோம்பேறி என்று நினைத்தீர்களா?" என்று கேட்டார்.

"உண்மையைக் கூற வேண்டும் என்றால் சொல்கிறேன். நீ ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும்போது உன்னை எழுப்புவதற்குப் பயம்" என்று காந்திஜி விடையளித்தார்.

"என்ன சொல்கிறீர்கள்? என்னிடமா உங்களுக்குப் பயம்?" என்று பா கேட்ட போது காந்திஜி சிரித்து மழுப்பிவிட்டார்.



புதிதாகக் கல்வி கற்போர் படிக்கச் சிறந்த கையெழுத்துப் பிரதிகளுக்கு யுனெஸ்கோ நடத்தும் ஏழாவது போட்டி

ஏழாவது யுனெஸ்கோ போட்டிக்குப் புதிதாகக் கல்வி கற்போர் பயிலச் சிறந்த கையெழுத்துப் பிரதிகள் வரவேற்கப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு தலைசிறந்த கையெழுத்துப் பிரதியின் ஆசிரியருக்கும் 1,400 ரூபாய் விதம் பதினாறு பரிசுகள் வழங்கப்பட விருக்கின்றன. ஹிந்தியில் மூன்று பரிசுகளும், அஸ்ஸாமிஸ், வங்காளி, குஜராத்தி, கன்னடம், காஷ்மீர், மலையாளம், மராத்தி, ஓரியா, பஞ்சாபி, சிந்தி, தமிழ், தெலுங்கு, உருது ஆகிய மொழிகளுக்கு ஒவ்வொரு பரிசும் கொடுக்கப்படும்.

அச்சடிக்கப்பட்ட புத்தகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. கையெழுத்துப் பிரதிகள் அனுப்ப வேண்டிய கடைசித் தேதி — விண்ணப்பப்பார நிதி ஐந்துடன் அனுப்ப வேண்டியது — 30 - 6 - 1969.


விதிகளுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும்
கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்:


செக்ஷன் அதிகாரி (SE II)
கல்வி மந்திராலயம், இளைஞர் சர்வீஸஸ்
இந்திய அரசாங்கம் 'சி' பிரிவு, IV கட்டடம்
ரூம் எண். 403, சாஸ்திரிபவன்
டாக்டர் ராஜேந்திர பிரசாத் ரோடு
புது தில்லி-1

davp - 69/90

மரப் பட்டைகளையும் வைக்கோலையும் காகிதமாக்குவது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் வேறெங்கும் நடைபெறாத விசித்திரமாக மேற்கு ஜெர்மனியில் எஃகாலேயே காகிதம் தயாரித்திருக்கிறார்கள்! டஸ்ஸல்டார்ப் என்ற நகரில் உள்ள ஒரு நிறுவனம் இந்த எஃகுக் காகிதத்தைத் தயாரித்திருக்கிறது. சாமான்களைப் பொட்டலம் கட்ட இந்த எஃகுக் காகிதம் பயன்படுத்தப்படும். கிழியாமலும் வெளிப்புற வெப்பதட்ப நிலைகளால் சேதமடையாமலும் காற்றைப் புக விடாமலும் சாமான்களைப் பாதுகாக்க எஃகுக் காகிதத்தைவிடப் பொருத்தமானது எதுவும் இருக்காது அல்லவா?

- யூ. பி. எஸ்.





ஆகாயக் கோட்டை கட்டுவதால் ஒன்றும் நஷ்டம் இல்லை. அந்தக் கோட்டைகள் ஆகாசத்திலேயே இருக்க வேண்டியவைதாம். அப்படிப்பட்ட கோட்டைகளைக் கட்டி விட்டதால் உங்களுடைய நேரம் வீணாகிவிட்டதாக நினைக்காதீர்கள். அந்த ஆகாசக் கோட்டைக்குக் கீழே அஸ்திவாரம் அமைக்க வேண்டிய வேலையில் இப்போது இறங்குங்கள்.

தகவல்: ரமணன்

ஆதாரம்: ''காரனெட்''




டெலிவிஷன் வந்து விட்டால் ஒரு சௌக்கியம் — தூக்க மாத்திரைகள் வாங்க வேண்டியதில்லை!

- பாபு.

'' மலேஷியாவில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க இரண்டு ஆண்டுகளே பிடிக்கின்றன. தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய அனுமதி வாங்குவதற்கே இந்தியாவில் இரண்டு ஆண்டு ஆகிறது.''

- ஒரு ஜப்பானிய வர்த்தகப் பிரதிநிதி.

(ஃப்ரீடம் ஃபர்ஸ்ட்) - முத்து



தெரிந்த உயிர்; தெரியாத பெயர்!

அரி, ஆட்டியன், இமை, உழுவை, ஊமை, எகினம், ஏணம், ஐபாணணம், ஒகரம், ஓங்கல்.

பெயர்கள் என்னவோ இதுவரையில் கேள்விப்பட்டிராத மாதிரி இருந்தாலும், இந்தப் பத்து ஜீவராசிகளையும் நீங்கள் ஒரே இடத்தில் பார்த்திருக்கிறீர்கள். அந்த இடம்: மிருகக் காட்சி சாலைதான். பார்த்தவை: குரங்கு, முதலை, கரடி, புலி, கீரி, நீர் நாய், மான், சிங்கம், மயில், யானை.



பார்த்தவர்: (அவராறியில்) வெற்றி

கனவும் நனவாகுமோ?



ரோஹிணி

வேணு அவசரமாகச் சதானந்தத்தின் வீட்டுக்குள் நுழைந்தான். ராகுகாலம் முடிந்தவுடனேயே பூஜையைப் பண்ணி வைக்க வருமாறு நேற்றே சொல்லி யிருந்தார். இந்தக் கிராமத்திலேயே அவர்தான் பெரிய பணக்காரர். இன்று சாவித்ரி பூஜையா? கட்டாயம் ஒரு ரூபாயாவது தட்சிணை கொடுப்பார். நாளை விஜய தசமியன்று புனர் பூஜைக்கு அரை ரூபாயாவது கொடுப்பார். மொத்தம் ஒன்றரை ரூபாய். அதில் வீட்டுச் செலவுக்குப் போகக் கால் ரூபாயாவது மிஞ்சும். தங்கை பாகீரதி முன்பே கேட்டாள்; ஆடுதுறைக் கடைத் தெருவுக்குப் போய் அவளுக்குக் குஞ்சிப் பொட்டுகள் வாங்கி வரவேண்டும்.

''வாடா, வேணு, உனக்காகத்தான் காத்திருந்தேன். பூஜைக்கு எல்லாச் சாமக்கிரியைகளும் தயார். நைவேத்தியம் உள்பட!''

''நானும் தயார்தான் மாமி... மாமா இருக்கிறாரல்லவா?''

''இல்லேயடா! திருவாலங்காட்டுக்குப் போயிருக்கிறார் காரியஸ்தரோடு. அடுத்த வாரம் கும்பகோணத்தில் மிராசுதாரர்கள் மகாநாடாம்; அதற்கான ஏற்பாடுகள் பண்ண வேண்டுமாம்...''

''அப்போது நான்தான் பூஜை பண்ண வேண்டுமா மாமி?'' என்று சொல்லிக் கொண்டே பூஜைக்குத் தயாரானான்.

விநாயக பூஜை, கலச பூஜை, அங்க பூஜை அனைத்தையும் மளமளவென்று செய்து முடித்தான். அடுத்ததாக அர்ச்சனை. நாமாவளியில் ஒவ்வொரு பெயருக்கும் கைநிறைய பாரிஜாதப் பூக்களை அள்ளி அள்ளி எடுத்துச் சிலையின் மேல் தூவினான்.

''உமா, உமா... சீக்கிரம் நைவேத்தியங்களை எடுத்து வாயேன். பூஜை முடியப் போகிறது, பார்!''

செவியண்டை வளையல்கள் குலுங்கின. வேணு நிமிர்ந்தான்.

''வேணு, இவள்தான் என் மருமாள் உமா. பம்பாயில் என் தம்பி இருக்கிறான் அல்லவா? அவன் பெண்தான். ஸம்ஸ்கிருத இலக்கியத்தில் எம். ஏ. தேறிவிட்டு இப்போது ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று தயாரித்துக் கொண்டிருக்கிறாள். அதற்குத் தினமும் கல்லூரிக்குப் போய் ஆஜர் கொடுக்க வேண்டிய அவசியமில்லையாம். அதனால்தான் இங்கே வந்து இரண்டு மாதங்கள் இருக்கச் சொன்னேன். அவள் அம்மாவும் பெரிய மனசு பண்ணி அனுப்பி யிருக்கிறாள்—''

வேணு சட்டென்று உமாவை நோக்கினான்.

''உமா, வேணுவைப் பற்றித்தான் மாமா உனக்கு எழுதி யிருந்தாரே? அவனைச் சாமான்ய வைதிகன் என்று எண்ணிவிடாதே. திருவையாற்றுப் பள்ளியில் எட்டு வருஷங்கள் வியாகரணம் படித்துத் தேறி யிருக்கிறான். இவ்வளவு சிறு வயதில் இவ்வளவு பாண்டித்தியம் வாய்ந்தவர் இந்த ஜில்லாவிலேயே கிடையாது என்று மாமா சொல்வார்.''

நீராஜனத்தைக் காட்டிவிட்டு எழுந்தான் வேணு. ''அப்போ நான் வரட்டுமா மாமி?''

''சரியப்பா. சாயங்காலம் கட்டாயம் உன் தங்கை பாகீரதியையும், உன் மாமா பெண் மீனாட்சியையும் மஞ்சள் குங்குமம் வாங்கிக் கொள்ள வரச் சொல்லு.''

''ஆகட்டும் மாமி, வரச் சொல்கிறேன்.''

தெருவில் வெய்யில் உடலைக் கசக்கிப் பிழிந்தது. ஆனால் வேணுவின் உள்ளத்தில் சந்திரிகையின் அமுதக் கதிர்கள் போல் தண்மை மேவியிருந்தது.

உமா!... ஆகா, உலகம் முழுவதிலும் சுற்றினாலும் இதை விட அழகான பெயரைக் கண்டுபிடிக்க முடியுமோ? பெயரைப் போலத்தானே அவளும்? தலையில் ஜாதிப் பூவைச் சூட்டியிருக்கும் வனிதம் ஒன்றே போதுமே!

வீட்டுக்குள் நுழைந்தான். கூடத்தில் காலை நீட்டிக் கொண்டு பாகீரதியும் மீனாட்சியும் உட்கார்ந்திருந்தனர், கல் யந்திரத்தில் மாற்றி மாற்றி உளுந்து உடைத்துக்கொண்டு.

பாகீரதிக்குப் பதினெட்டு வயதாகிறது; மீனாட்சிக்கு இருபது ஆகிறது. மீனாட்சிக்கு அவன்தான் மணாளனாக வேண்டும் என்று இருவரது பெற்றோர்களுமே தீர்மானித்து விட்டுப் போய் விட்டார்கள்... பாகீரதிகூட அடிக்கடி சொல்லிச் சொல்லிப் பரிகசிப்பாள். மீனாட்சியை அவ்வப்போது 'மன்னி இதைப் பாரேன், மன்னி அதைப் பாரேன்!' என்று சீண்டுவாள். மீனாட்சி வெறுமையுடன் பேந்தப்பேந்த விழிப்பாள். வேணு புன்னகை புரிவான்.

'இனி அந்தப் புன்னகைகளையெல்லாம் நிறுத்தி விட வேண்டும். பாகீரதியையும் கண்டித்து வைக்க வேண்டும். அந்த அசட்டுப் பரிகாசமெல்லாம் போதும்.'

அன்று கோவிலில் உமாவையும் மாமியையும் சந்தித்தான் வேணு. அவன் கருத்தோடு கம்பீரமாக மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்யும் அழகைக் கண் இமைக்காமல் ரசித்து மகிழ்ந்தாள் உமா. அதையும் அவன் பார்த்தான். பிறகு மாமியிடம் பிரசாதத்துடன் வந்தபோது, ''வேணு, இவள் இன்னும் இரண்டு மாதங்களில் தன் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சர்வகலாசாலைக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாம். அதற்கு நீ தினசரி இவளுக்கு மீமாம்ஸை, வியாகரணம், தர்க்கம் இவற்றில் கொஞ்சம் கொஞ்சம் பயிற்சி தர வேண்டுமாம். மாமா உன் பேரைத்தான் பலமாகச் சிபாரிசு செய்து எழுதினார். உனக்குச் சம்மதம்தானே?'' என்று கேட்டாள்.

நிலவமுதம் தலையில் சிந்திய மாதிரி குளிர்ந்து புளகித்தான் வேணு.

''அதற்கென்ன மாமி? நாளை விஜயதசமி. பொருத்தமான தினம். அன்றே ஆரம்பித்து விடலாம்... என்ன?''

பலஹீனத்தோடு கட்டிலில் புரண்டு படுத்தான் வேணு. ஜுரக் கசப்பு அடி நாக்கில் வெறுப்பைக் காட்டியது.

ஜுரம் வந்து நான்கு நாட்களாயிற்று. இன்னும் அதன் கடுமை தணியவில்லை. உமாவுக்குப் பாடம் சொல்லித் தரவும் போகவில்லை. கடந்த ஒன்றரை மாதங்களில் இப்படிச் சேர்ந்தாற்போல் பாடம் விட்டுப் போனது இதுவே முதல் தடவை.

போன வாரம் முழுதும் திருவிடைமருதூரில் ஒரு ஹோமத்துக்குப் போய் வந்தான். ஹோமத்தை நடத்தினவர் தம் வீட்டிலேயே அந்த ஒரு வாரத்துக்கும் தங்கியிருக்குமாறு கோரினார். ஆனால் வேணு மறுத்து விட்டான். அத்தனை நாட்களும் உமாவைப் பார்க்காமல் இருப்பதா? யாரால் முடியும்?

அந்த வாரம் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து நாலேகால் மணிப் பாசஞ்சரில் ரயிலேறித் திருவிடைமருதூரை அடைந்து பிற்பகல் பன்னிரண்டு மணி வரையில் ஹோமப் புகையோடு நேரத்தைக் கழித்து விட்டு உடனேயே வெயில் விறைகப் போகாமல் திரும்பவும் ரயிலேறிக் கிராமத்துக்குத் திரும்பி வந்தான். உடனே மாலை நான்கு மணிக்கு உமாவுக்குக் கற்பிக்கப் போய்விடுவான். இவற்றில் இரண்டொரு நாட்களில் கடும் மழையில் வேறு மாட்டிக் கொண்டு விட்டான். பிறகு ஜுரம் வரக் கேட்பானேன்?

கயிற்றுக் கட்டில் முதுகில் உறுத்தப் படுத்த வாக்கிலேயே சுற்றிவரப் பார்த்தான்.

வாசற்படியண்டை மரியாதையான செருமல் கேட்டது. ''நான் உள்ளே வரலாமா வேணு?''

உமாதான்!

கட்டிலில் துள்ளி உட்கார்ந்தான் வேணு. முகம் பரபரத்துத் திணறியது. இப்போது தானே முதல் தடவையாக அவள் அவன் வீட்டுக்கு வருகிறாள்?

''வா உமா... நான் எவ்வளவு பாக்கியசாலி!'' அவன் குரல் தடுமாறியது. கண்கள் நன்றியில் துளும்பின. மீனாட்சியோ சுவரண்டை ஒதுங்கி விட்டாள்.

உமா சுவாதீனமாகக் கட்டிலில் அவனருகில் வந்து உட்கார்ந்தாள். புதுப் பவித்ரில்



நனைந்த ரோஜா மலர் போன்ற தோற்றம். அலங்காரம் அவ்வளவு பகட்டாக இல்லை.

''...எனக்குத் தகவல் தெரியாமலே போய் விட்டது, வேணு. இரண்டு மூன்று நாட்களாக நீங்கள் பாடம் சொல்ல வரவில்லை என்றதும் நீங்கள் உங்கள் தொழில் முறைமையில்தான் வெளியூர் போயிருப்பீர்களோ என்று இருந்து விட்டேன். இன்று காலையில் தான் கறிவேப்பிலைக்காரிக்கு அரிசி போடு கையில் அவள் மூலம் தெரிய வந்தது. உடனே குளித்து விட்டு ஓடோடி வந்தேன்.''

உமா [illegible]. அவள் குரலில் நிஜமான விசாரம்; பரிவு இருந்தன.

''நான்கு நாட்களாயிற்று உமா. ஆனால் இன்னும் ஜுரம் விடவில்லை.''

''அப்படியா? நான் போய் அத்திம்பேரிடம் சொல்லி டாக்டரை வரவழைக்கிறேன்.''

உமா எழுந்து விட்டாள். மீனாட்சி பூஜை அலமாரியிலிருந்து குங்குமச் சிமிழை எடுத்து வந்து நீட்டினாள்.

உமா ஒற்றை விரலால் எடுத்து நெற்றியிலும் வகிட்டிலும் இட்டுக் கொண்டாள்.

அன்றுதான் தலைக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டான் வேணு. இரண்டு வாரங்களாக அறையோடு சிறைப்பட்டிருந்தது இன்றோடு முடிவடைந்தது. இன்று காலையில் சாப்பிட்ட ஜீரக ரஸஞ் சாதந்தான் எவ்வளவு ருசியாக இருந்தது?

முற்றத்துக் கம்பிக் கொடியில் மீனாட்சி ஈரத் துணிகளை ஒவ்வொன்றாக உலர்த்திக் கொண்டிருந்தாள்.

வேணுவுக்குச் சட்டென்று ஏதோ நினைவு வந்தது. ''மீனாட்சி!'' என்று கூப்பிட்டான்.

''என்ன வேண்டும் அத்தான்?'' என்று கேட்டுக்கொண்டே படி ஏறித் தாழ்வாரத்துக்கு வந்தாள் மீனாட்சி.

வேணுவுக்கு எப்படி ஆரம்பிப்பது என்றே தெரியவில்லை. ''வந்து...அப்புறம் உமா எப்போதாவது வந்தாளோ?'' என்று கேட்டான்.

''போன வாரம் ஒரு நாள் காலை டாக்டரோடு வந்தாள். அப்போது நீங்கள் கடும் காய்ச்சலில் நினைவின்றிப் பிதற்றிக் கொண்டிருந்தீர்கள்—''

''அப்படி என்ன பிதற்றினேன், மீனாட்சி?''

மீனாட்சியின் முகம் கறுத்தது. கீழுதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள்.

''சொல்லேன் மீனாட்சி. ஏன் தயங்குகிறாய்? ஏதாவது அசப்யமாகப் பேசினேனா?''

''அசப்யம் என்பதை நான் எப்படித் நிர்மானிப்பது அத்தான்? என்ன என்னவோ பேசினீர்கள்.... 'உமா... உமா தேவி.... உமா ராணி... ஸீதையே ராமனைப் பெயரிட்டு அழைத்திருப்பதால் நீயும் வேணு என்று அழைப்பதிலே தப்பில்லை' என்றெல்லாம்....''

வேணு அதிர்ந்தான். உமாவின் முன்னிலையிலும் டாக்டரின் முன்னிலையிலுமா இப்படியெல்லாம் பேசினான்? அதைக் கேட்டு விட்டு உமா என்ன செய்தாளோ? அவனைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டாளோ? சிந்திக்கையிலேயே சிறிது நடுங்கினான்.

அப்போது மீனாட்சியும் பக்கத்திலதானே இருந்திருப்பாள்? அவளுக்கு எப்படி இருந்திருக்கும்?

''அப்படியா மீனாட்சி? அதைக் கேட்டு விட்டு உமா என்ன சொன்னாள்?''

''டாக்டர்தான் முதலில் சிரித்துக் கொண்டே அவளிடம் ஏதோ இங்கிலீஷில் கேட்டார். அவளும் இங்கிலீஷிலேயே ஏதோ பதில் சொன்னாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை, அத்தான்.''

''அதற்குப் பிறகு வரவேயில்லையா அவள்?'' என்று கேட்டான் வேணு.

''மூன்றா நாள் இரவு வந்தாளாம். அப்போது நான் கஞ்சி கட வைத்துக் கொண்டிருந்தேன். எனவே, பாகீரதியிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போனாளாம். உங்களுக்குத் தலைக்குத் தண்ணீர் விடப்போகும் நாளைக் கேட்டுத் தெரிந்து கொண்டாளாம். இப்போதைக்குப் பாடம் சொல்லித் தர வரவேண்டாமென்றும், ஒரு வாரம் போகட்டும் என்றும் உங்களிடம் சொல்லச் சொன்னாளாம்.''

வேணு வெற்றியாகப் பார்த்தான்.

''பார்த்தாயா மீனாட்சி? அவள் என்மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருப்பது புலப்படவில்லை? அன்று ஜுர வேகத்தில் டாக்டர் முன்னிலையில் அவளையும் என்னையும் பிணைத்து ஏதேதோ நான் பேசினதாகச் சொன்னாயே, அவள் மட்டும் அதைத் தப்பிதமாக எடுத்துக்கொண்டு வெறுத்திருந்தால் மீண்டும் இந்தப் பக்கம் வந்திருப்பாளா?''

''குரு — சிஷ்யை பாவம் திரிபடைந்த கணவன் — மனைவி உறவில் போய் முடிவடைவது இகழத் தக்கது இல்லையா அத்தான்?''

''அதெல்லாம் அந்தக் காலம் மீனாட்சி. உதயணனை அவனிடம் வீணை கற்றுக் கொண்ட வாஸவதத்தை மணந்தாளே! அதற்கு என்ன சொல்கிறாய்?''

மீனாட்சி வாயடைத்துப் போய் நின்றாள். அதற்கு மேல் அவள் என்ன சொல்லுவாள்?

விசும்பியவாறு உட்புறம் சென்றுவிட்டாள். அதுதான் அவளால் முடிந்தது.

வேணு கண்களை மூடிக் கொண்டான்.

கிராமத்தில் புகழ் பெற்ற சிவன் கோயில் கவனிப்பாரற்றுக் கிடந்தது. இவனது தந்தையின் காலத்திலிருந்தே வேணு அதற்கு ஒருவேளை நீபாராதனை செய்து விட்டு வருவான். அன்று அவனுக்கு உடல் நிலை தேறியிருந்தாலும் உமாவின் அன்பைப் பெற வேண்டும் என்ற ஆசையாலும் அவன் கோயிலுக்குப் பூஜை செய்ய வந்தான்.

கனக்கும் இதயத்தோடு கதவேயில்லாத நடராஜர் சந்நிதிக்குள் நுழைந்தான். மூன்று வாரங்களாக அவன் வந்து கவனிக்காததால் விக்கிரகம் களிம்பேறத் தொடங்கியிருக்கும் என்று நினைத்தவன், அதிசயப்பட்டுப் போனான். விக்கிரகம் பளபளவென்று தங்கமென மின்னிற்று.

வேணு வியந்தான். யார் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு தேய்த்துச் சுத்தம் செய்திருப்பார்கள்? ஒருவேளை நடராஜரே அவன் கவனமுற்றிருப்பது தெரிந்து


உலகத்து நிலையங்கள் அனைத்தையும்
தெளிவாக இசைப்பதில் என்றுமறியாத சிறப்பு...
மாடல் டிஎ/டியு 0284
ரூ. 303/-
மர்பி இன்டர்நேஷனல்
அதன் இன்பமயமான ஒலியை உங்கள் அருகமைந்த மர்பி
வியாபாரியிடம் கேட்டு பரவசமடையுங்கள்
மர்பி – இல்லத்தை மகிழ்விக்கிறது!



தாங்க முடியாத
நோவா?

அதிகச் சக்தி வாய்ந்த
நிவாரண மாத்திரையான பல நிற

SS ஸால்ஜான்

உபயோகியுங்கள்

தலை நோவு • ஜலதோஷம் • உடல் நோவு
பல்வலி • தசைவலி • ஃபுளு

நினைவிருக்கட்டும் ஸால்ஜான் மட்டுமே
பல நிறம் கொண்ட நோவு நிவாரணி
ஒரு எஸ். எஸ். தயாரிப்பு

தன்னைத் தானே மெருகுபடத் துலக்கிக் கொண்டிருப்பாரோ?

வேணு தரையில் விழுந்து நமஸ்கரித்தான். 'நடராஜா, உன் கருணை விலாஸத்தால் ஜுரத்திலிருந்து பிழைத்தெழுந்து விட்டேன். இனி மீண்டும் வருகிற பிரதோஷம் முதல் உன் வழிபாட்டைத் தொடங்குகிறேன். பதிலுக்கு என்னையும் உமாவையும் இணைகளாகச் சேர்த்து வை அப்பா...! உமாவைத் தெரியுமல்லவா உனக்கு? அன்றொரு நாள் நான் கூட அழைத்து வந்தபோது என் கோரிக்கையின் பேரில் உன் முன் 'சிவசிவ சிவ' என்று ஒரு பந்துவராளிக் கீர்த்தனம் கூடப் பாடினாளே; நினைவில்லை?' வேணு தனிமை தந்த தைரியத்தில் வாய்விட்டே பேசினான்.

கோவிலை விட்டு வெளியே வந்தவன் உமாவின் வீட்டை நோக்கி நடந்தான்.

''வாடா வேணு. புனர் ஜன்மம் எடுத்தாயா? முகமெல்லாம் வெளுத்துவிட்டதே'' முற்றத்தில் காய வைத்திருந்த மிளகாய் வற்றலை, வெய்யில் போய்விட்டதால் மரக்காலில் திரட்டி அள்ளிக் கொண்டிருந்த மாமி வரவேற்றாள்.

''உமா எங்கே மாமி?'' ஒரே குறியாகச் சென்ற வேணு இந்த ஒரு கேள்வியைத்தான் கேட்டான்.

''மாடியில் இருக்கிறாள். போய்ப் பாரேன். எவனோ பம்பாயில் அவளோடு படித்தவனாம்—வந்து ஐந்து நாட்களாயிற்று — அவனோடு பேசிக் கொண்டிருக்கிறாள். அவனும் அவன் மீசையும்... சகிக்கலை! வீட்டிலிருக்கும் போதுகூடவா 'பாண்ட்'டைக் கழற்றி விட்டு வேஷ்டி கட்டிக் கொள்ளக்கூடாது?''

வேணுவின் நெற்றி சுருங்கியது.

மாடியறையில் ஊஞ்சலில் உமாவோடு அவன் அமர்ந்திருந்தான். வேணுவைக் கண்ணுற்றதும் உமா சிட்டுக் குருவி போல் துள்ளி எழுந்தாள்.

''வாருங்கள் வேணு. உடம்பு முற்றிலும் குணமாகி விட்டதா? ஏன் இவ்வளவு சீக்கிரம் நடமாடத் தொடங்கி விட்டீர்கள்? நான் தான் கொஞ்ச காலத்துக்குப் பாடம் சொல்லித் தர வர வேண்டாம் என்று உங்கள் தங்கையிடம் சொல்லி விட்டு வந்தேனே?''

''பரவாயில்லை உமா. பாடம் சொல்லித் தர இப்போது எனக்குத் தெம்பில்லாமல் இல்லை. எப்போது வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம்.''

''அவசியமேயில்லை வேணு. நான் என் ஆராய்ச்சிக் கட்டுரையை அநேகமாக எழுதி 'டைப்'கூட அடிக்க ஆரம்பித்து விட்டேன். ஒரு கையெழுத்துப் பிரதியை பம்பாயிலுள்ள என் பேராசிரியருக்கும் அனுப்பியிருக்கிறேன், பூர்வாங்க ஒப்புதலுக்காக...''

''அப்படியா? அப்படி யென்றால் இனி நான் இங்கே வரத் தேவையில்லையா, உமா?'' வேதனையோடு வினவினான் வேணு.

''ஐயையோ, அப்படி யார் சொன்னது? என் ஆராய்ச்சிக் கட்டுரை வேலை முடிந்த பிறகும் தொடர்ந்து கொஞ்ச காலம் உங்களிடம் உபநிஷதங்களும் பாஷ்யமும் கற்றுக் கொள்ளப் போகிறேன். ஆனால் இப்போது சில நாட்களுக்கு ஏதும் வேண்டாம். ஏனென்றால்...'' என்று ஜிமிக்கிகள் குலுங்க அந்த இளைஞன் பக்கம் திரும்பினாள்.

வேணு இப்போதுதான் அந்த இளைஞனை முழுமையாக நோக்கினான். சண்டைக்கோழி போன்ற வாளிப்பான உடல்; பாசிப் பச்சை நிறத்தில் பளபளக்கும் பாண்ட்; மேலே நீள வாக்கில் வரி வரியாகக் கோடுகள் போட்ட அமெரிக்க மோஸ்தர் சட்டை; சீப்புக்கே அவசியமில்லாத மாணுமிக் கிராப்பு; கழுத்தைச் சுற்றி ஸில்க் கைக்குட்டை.

''வேணு! இவர்தான் என் நண்பர் சுரேஷ். கல்லூரியில் முதல் இரண்டு வருஷங்கள் என்னோடு ஒன்றாகப் படித்தவர். பிறகு அவர் சரித்திரப் பாடம், நான் ஸம்ஸ்கிருத இலக்கியம் என்று திசை பிரிந்து விட்டோம். இப்போது ஏதோ வட இந்தியப் பத்திரிகைக்கு விஷயதானம் செய்கிறாராம். அதற்காகத் தான் இந்தப் பக்கம் வந்திருக்கிறார்; சோழர் காலத்துக் கோவில்கள் சிலவற்றை நேரில் கண்டு புகைப்படங்கள் எடுக்கவும், கட்டுரைகள் எழுதவும் வந்திருக்கிறார்.''

வேணு அவனைப் புதுமையோடு நோக்கினான். பதிலுக்கு சுரேஷ் வேணுவை அருவருப்போடு நோக்கினான்.

''அது சரி; இவர் என்ன தொழில் செய்கிறார்? அதை நீ சொல்லவில்லையே, உமா?''

உமா மென்று விழுங்கினாள். புரோகிதத் தொழிலைக் கௌரவமாகவும் பெருமையாகவும் சொல்லிக் கொள்ள முடியாதபடி அல்லவா தற்காலச் சமூகம் சீரழிந்து விட்டது?

''சுரேஷ்! இவருக்கு ஜீவனோபாயம் என்று சொல்லப் போனால் உபாத்தியாயம்தான். ஆனால் மற்றப் புரோகிதர்களைப் போல் வெறும் கிரந்த லிபியையும் தேவநாகரி லிபியையும் மட்டும் தெரிந்து வைத்துக் கொண்டு அர்த்தமே தெரியாமல் மந்திரங்களைச் சொல்லி வைப்பவரல்ல. நம் வேணு வேத சாஸ்திரங்களிலும் விற்பன்னர். ஆம் இவர் கல்வி மட்டும் கற்றுப்பயின்ற ஒரு பேரா

உவகை தரும் உவமை

அலை வீசும் நீல நிறமான கடலிடத்திலே இருந்து, செந்நிறமுள்ள சூரியன் தோன்றும் காட்சியானது, ஆடி அசையும் நீல மயில் மீதில் அமர்ந்து தோன்றும் முருகக் கடவுளின் காட்சியைப் போல் உள்ளது!

- நக்கீரர் - திருமுருகாற்றுப் படை





''கல்கத்தா நகரில் தினமும் ஏதாவது தகராறு நடந்து கொண்டேயிருப்பதால் நகரின் பெயரைக் 'கல்கத்தா' என்று மாற்றி விட்டால் என்ன ?''

-- மாலி

சிரியராகவே வந்திருப்பார். ஆனால் துரதிருஷ்ட வசமாக அது நடைபெறவில்லை'.'

சுரேஷ் சீண்டின பாம்பு போல் சீறினான்.

''புரோகிதமும் ஒரு தொழிலா என்ன? பல நூற்றாண்டுகளாக நம் நாடு அடிமைப் பட்டுக் கிடந்ததே இந்தப் புரோகிதத்துக்கும் சந்நியாசத்துக்கும் கண்மூடித்தனமான மதிப்புக் கொடுத்ததால்தான். இவர்களால் நாட்டின் தொழில் அபிவிருத்திக்கு ஒரு பயனாவது உண்டா? சைனா அரசாங்கம் செய்வது போல் இந்தப் புரோகிதர்களையும் சாதுக்களையும் பண்ணைகளுக்கும் ஆலைகளுக்கும் அழைத்துச் சென்று தினசரி உடல் உழைப்புக்கு ஆளாக்க வேண்டும். கும்பகர்ணன் போல் மிடி கொண்டு துயிலும் நம் நாட்டை எழுப்ப அதுதான் சௌக்கியமான வழியாகும்.''

வேணு அவமானத்தால் குறுகிப் போனான். அவன் தொழில் பிறரால் இகழப்படுவதைக் கேட்பது இது முதல் தடவையல்ல. ஆயினும் அவன் உயிரையே வைத்திருக்கும் ஒரு பெண்ணின் முன்பு பரிபவப்பட நேர்ந்த துயரம் அவனைக் கசக்கிப் பிழிந்தது. ரோஷ பங்கத்தில் அழுகையே பொத்துக் கொண்டு வந்துவிடும்போல் இருந்தது.

இரு கண் இடுங்க உமாவைப் பார்த்தான். ''சரி, நான் இரண்டு மூன்று நாட்கள் கழித்து வருகிறேன் உமா. நான் நாளை திருவாலங்காட்டுக்குப் போகிறேன். திங்கட்கிழமையன்று காலைதான் திரும்பி வருவேன். அப்பொழுது பார்க்கலாம்.''

உமா அவனோடு வாசல் வரையில் வந்தாள்.

''வேணு! சுரேஷ் பம்பாய் மண்ணிலேயே பிறந்து வளர்ந்து, அந்த உப்பிலும் நீரிலுமே ஊறிப் போனவர்... அவரை முந்தாநாள் உங்கள் நடராஜர் கோவிலுக்கு அழைத்துப் போனேன். விக்கிரகத்தைக் கண்டதும் அவர் நெடுநேரம் அயர்ந்து போய்விட்டார். பல கோணங்களில் அதைப் பார்த்துப் பார்த்து ரசித்தார். நான்தான் அவரை வலுக்கட்டாயப்படுத்தித் திருப்பி வீட்டுக்கு அழைத்து வந்தேன்.'' குழைவில் அவள் குரல் சற்றே தழுதழுத்தது.

''அப்படியா? அதுதான் இன்று பார்த்தேன். நடராஜர் விக்கிரகம் பளபளவென்று மின்னியது....''

''ஆமாம் வேணு! அவர் தம் கையோடேயே சில அமிலக் கரைசல்கள் கொண்டு வந்திருக்கிறார். அவற்றைக் கொண்டுதான் விக்கிரகத்தின் களிம்பையெல்லாம் போக்கி மெருகு போட்டார்.''

வேணு பதிலே சொல்லவில்லை. விடை பெற்றுக்கொண்டு நகர்ந்தான்.

திங்கட்கிழமை அதிகாலை. வேணு கால் நடையாகத் திருவாலங்காட்டிலிருந்து கிராமம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தான்.

வேணு பள்ளிக்கூடம் விட்ட சிறுவன் போல் வேகமாக மூங்கில் பாலத்தில் நடக்கத் தொடங்கினான். அவன் உள்ளம் குதூகலத்தில் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அவன் உயிருக்குயிராக நேசிக்கும் சிதிலம் அடைந்த நடராஜர் கோவிலைப் புதுப்பிக்கும் பொறுப்பை அவன் பொருட்டு ஒரு ஜமீன்தாரிணியே ஏற்றுக் கொண்டு விட்டாள். அதுவே அவன் மகிழ்ச்சித் துள்ளலுக்குக் காரணம். அதை உமாவிடம் சொல்லிப் பெருமைப்பட வேண்டும் என்ற ஆசையும் அந்தத் துள்ளலுக்கு இசையாக அமைந்தது. உமாவின் வீட்டுக்கே முதலில் போவோம் என்று எண்ணியவன் கண்களில், பெண்கள் படித்துறையில் யாரோ சோப்பு தேய்த்துக் குளிப்பது தெரியவே, அது உமாவாகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவுக்கு வந்தான். எனவே, தன் வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டுக்குள் நுழைந்து சாக்குப் பையைக் கூடத்தில் இறக்கி வைத்தான். மீனாட்சி குளித்துவிட்டு அரிசியைக் களைந்து உலைநீரில் போட்டுக் கொண்டிருந்தாள். பாகீரதி ஒரு மணி நேரத்துக்கு முன்பே கோவிலுக்குப் புறப்பட்டுப் போய் விட்டாளாம்.

வேணு கிணற்றடிக்குச் சென்று ஐந்து குடம் தண்ணீர் இழுத்து மேலே விட்டுக் கொண்டான். துடைத்துக் கொண்டு அவசரம் அவசரமாக உள்ளே வந்தான்.

பத்தாவது நிமிடம் நெற்றியிலும் புஜத்திலும் மார்பிலும் திருநீறு வெண்மேனி வீச வேகமாகக் கோவிலைப் பார்க்க நடந்தான். இப்போதே வேர்க்க ஆரம்பித்து விட்டது.


வேணு பக்தியோடு நடராஜர் சந்நிதிக்கு விரைந்தான். கண்ட காட்சியில் கிறீச்சிட்டான். காலடியில் பூமி பிளந்தாற்போல் இருந்தது.

விக்கிரகத்தைக் காணோம் !

வேணுவுக்கு அதிர்ச்சியில் புலன்கள் நழுவி விட்டன. விக்கிரகத்தை யார் எடுத்திருப்பார்கள்? எங்கே போட்டிருப்பார்கள் ?

உன்மத்தம் பிடித்தவன் போல் கண்டேசுவரர் சந்நிதிக்கு ஓடினான், அங்கே கிடக்குமோ என்று. ஊஹூம்! பிராகாரத்தில் சுற்றிச் சுற்றி ஓடினான், காலில் கணக்கற்ற நெருஞ்சிகள் தைத்தன.

'நடராஜா, என்னைச் சோதிக்காதே. நான் தாங்க மாட்டேன்.... தாங்க மாட்


"உங்கள் குழந்தைக்குப் பிரத்தியேகமான பவுடர் தேவைப்படுகிறது — கால்கேட்டே அந்த நேர்த்தியான பவுடர்!"
கால்கேட் பேபிபவுடர் மிகவும் மென்மையானது. அதிகமாக வேர்வையை உறிஞ்சக்கூடியது. பட்டுப்போல் மிருதுவானது. அது குழந்தையின் இளம் சருமம் எரிச்சலடையாமல், நமைச்சலடையாமல் பாதுகாத்து குழந்தையை குளுமையுடன், சுகமாகவும், ஆனந்தத்துடனும் வைத்திருக்கும். உங்கள் குழந்தைக்கு இன்றே கால்கேட் பேபி பவுடரை வாங்குங்கள்!
COLGATE
Borated
BABY
POWDER
கால்கேட் பேபி பவுடர் வாங்குங்கள்
—அதிக பவுடர்...
அதிக சிக்கனம்!
CBP.G.7 TAM


கலியாண கால விற்பனை!
ஈடு இணையற்ற பட்டு சேலைகளுக்கு
NALLI SILKS
SILK SAREES
நல்லி சில்க்ஸ்
பட்டு சேலைகள்
பட்டு சேலைகளுக்கு மட்டுமே பிரத்யேக ஷோ-ரூம்
நல்லி சில்க்ஸ்
பட்டு சேலைகள்
82, ராயப்பேட்டை ஹை ரோட்,
லஸ் • மயிலாப்பூர் (போன்: 74862) சென்னை-4

ஏழாவது அகில இந்திய ஆதாரக் கல்வி இலக்கியப் போட்டி 1969

இந்திய எழுத்தாளர்களால் கீழே குறிக்கப்பட்டுள்ள விஷயங்கள் பற்றி எழுதப் பட்ட கையெழுத்துப் பிரதிகளோ, புத்தகங்களோ (வசன நடையோ, நாடகங்களோ) 1969ம் ஆண்டு அகில இந்திய ஆதாரக் கல்வி இலக்கியப் போட்டிக்கு வரவேற்கப் படுகின்றன.

1. பஞ்சாயத்து ராஜ்ய முறை மூலம் காந்திஜி மனக்கண்ணால் கண்ட அரசியல் ஜனநாயகம்; 2. பஞ்சாயத்து கூட்டுறவு முறைகள் மூலம் காந்திஜி விரும்பியப் பொருளாதார ஜனநாயகம்; 3. பஞ்சாயத்து முறை, கிராம அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் காந்திஜி உருவாக்க எண்ணிய சமூக ஜனநாயகம்; 4. பஞ்சாயத்து [illegible] அடிப்படையில் அடிமட்டத்திலிருந்து உருவாகும் திட்டங்கள்; 5. பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்களில் காணும் சச்சரவுகளும் ஐக்கிய உணர்ச்சிகளும்; 6. பஞ்சாயத்து முறைகளும், உள்ளூர் சேமிப்பு திரட்டுதலும்; 7. துரிதமாக நீதி வழங்க நியாய பஞ்சாயத்து முறைகள்; 8. தலைவர்களை உருவாக்குவதில் பஞ்சாயத்து செயல் முறை; 9. [illegible] சக்தி, சமூகம்; 10. சமூக அபிவிருத்திக்கு வலுவூட்டவும், கூட்டுறவு முறைகளை பலப்படுத்தவும், மாணவர்களின் பங்கு ஏற்பது; 11. வாலிபர்களும், பஞ்சாயத்து ராஜ்ய ஸ்தாபனங்களும்; 12. பஞ்சாயத்து ராஜ்ய முறையின் கீழ் கிராமத்தார்கள் நலமும், குழந்தைகள் நலமும் வளர்ச்சி; 13. நிலச் சீர்திருத்தமும் அதில் பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்களின் பங்கும்; 14. கூட்டுறவு இயக்கத்தில் தேசிய சம்மேளனங்களின் பங்கு; 15. கூட்டுறவு முறையில் கோழிப் பண்ணையும், கோழிப் பண்ணைத் தீவனங்களும்; 16. நீர்ப்பாசனங்களுக்கும், மின்சார சப்ளைகளுக்கும் கூட்டுறவு முறைகள்; 17. விவசாய உற்பத்திக்காக கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் நிதி வசதி; 18. விவசாய உற்பத்திப் பெருக்குக்காக நேரிடையாகச் செலவு செய்யப் படும் இனங்களைக் கூட்டுறவு முறையில் விநியோகித்தல்; 19. கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு உத்தியோகஸ்தர்களின் அணிகளை ஏற்படுத்துதல்; 20. கூட்டுறவு ஸ்தாபன ஊழிய அதிகாரிகளுக்குக் கல்வியும் பயிற்சியும் அளித்தல்; 21. கூட்டுறவு முறையில் மீன் பண்ணைகள் வளர்ப்பு.

ஒவ்வொன்றும் ரூ. 1000 வீதம் 21 பரிசுகள் வழங்கப்படும். ஒவ்வொரு தலைப் புக்கும் ஒரு பரிசுக்குமேல் அளிக்கப்படமாட்டாது.

மொழியும் நடையும்: பரிசுக்காக அனுப்பப்படுபவை கீழ்க்கண்ட மொழிகளில் எழுதி யிருக்கலாம்:

(1) அஸ்ஸாமீஸ்; (2) வங்காளம்; (3) குஜராத்தி; (4) குர்முகி; (5) ஹிந்தி (6) கன்னடம்; (7) காஷ்மீரி; (8) மலையாளம்; (9) மராத்தி; (10) ஒரியா; (11) சிந்தி; (12) தமிழ்; (13) தெலுங்கு; (14) உருது.

அளவு: பரிசுக்காக அனுப்பப்படும் புத்தகங்கள் எளிய நடையில், சமூக அபி விருத்தி, பஞ்சாயத்து ராஜ்யத் துறை, கூட்டுறவு திட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்குச் சுலபமாக புரியும்படியாகவும் அவர்களை ஈர்க்கும் வகையிலும் எழுதப் பட்டிருத்தல் அவசியம். அவர்களுக்காகவே இப்புத்தகங்கள் உபயோகமாகும். இதை டெமி-ஆக்டோவா காகிதத்தில் 16 பாயிண்டு அச்செழுத்தில் அச்சிட்டால் சுமார் 40 பக்கத்துக்கு, அல்லது 10,000 வார்த்தைகள் கொண்டதாக இருத்தல் வேண்டும். புத்தகங்களாக இருந்தால் போதிய அளவு படங்கள் வரையப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

காபிரைட் உரிமை: பரிசு பெற்ற புத்தகத்தின் பிரசுர உரிமை, எவ்வித வில்லங்கமு மின்றி இந்திய அரசாங்கத்துக்கு மாற்றப்படவோ அளிக்கப்படவோ வேண்டும். பிரசுர உரிமைக்காக இருதரப்பினரும் ஒப்புக் கொள்ளும்படி உரிய தொகை வழங்கப்படும்.

நுழைவுக் கட்டணம்: ஆசிரியர் எழுதியனுப்பிய ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 3/- பிரவேசக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

கடைசி தேதி: 1969 செப்டம்பர் 15ந் தேதிக்குள் பரிசுக்கான புத்தகங்கள், பிரதிகள் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் சேரும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அனுப்ப வேண்டிய கடைசி தேதி: 15-9-1969

போட்டியின் விவரமான விதிகளுக்கும், அறிவிப்புகளுக்கும் விண்ணப்பம் அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டிய விலாசம்:

டைரக்டர் (அடிப்படைக் கல்வி)

உணவு, விவசாய, சமூக அபிவிருத்தி, கூட்டுறவுத் துறை அமைச்சரகம்

(சமூக அபிவிருத்தி, கூட்டுறவு இலாகாக்கள்)

கிருஷி பவன், புது தில்லி

டேன்... தாங்கவே மாட்டேன்' என்று வாய் விட்டு அரற்றினான்.

ஆனால் விக்கிரகத்துக்கு ஜலசமாதி கொடுக்கும் துன்மதி படைத்தோர் கிணற்றுக்குள் தான் எறிந்திருப்பார்களா? அதைவிட ஏரியிலேயே எறிந்திருப்பார்களோ? கிணற்று நீரையாவது கொஞ்சம் சிரமப்பட்டு இறைத்துத் தேடி விடலாம். ஏரி நீரை....?

இன்னொரு சந்தேகமும் வேணுவுக்குத் தோன்றியது. மீண்டும் சந்நிதிக்கு ஓடிவந்தான். சந்நிதியில் பெருக்கப்படவும் இல்லை; கோலமும் போடப்படவில்லை!

அப்படியானால் பாகீரதி வருவதற்கு முன்பே விக்கிரகம் தொலைந்து போயிருக்க வேண்டும். அப்படியானால் பாகிரதி என்ன செய்தாள்? எங்கே காணாமல் போனாள்? ஏன் உடனடியாக வீட்டுக்கு வந்து மீனாட்சியிடமோ அயலாரிடமோ வந்து தகவலைச் சொல்லவில்லை?

வேணுவுக்கு மயக்கமே வந்து விடும் போலிருந்தது.

வெளியே வந்து வடக்குப் பக்கம் பார்த்தான். தூரத்தில் ஆற்றங்கரையிலிருந்து யாரோ ஒரு பெண்... பச்சைச் சுங்கடிப் புடவை..... ஓடி வருவது தெரிந்தது. பாகிரதிதானோ? பாகிரதிதான். அசப்பில் பார்த்தால் அவ்வாறே தோன்றியது.

வேணு வேகமாக எதிர்கொண்டு ஓடினான். ஐந்து நிமிட ஓட்டத்துக்குப் பிறகு இருவரும் சந்தித்துக் கொண்டனர்.

பாகிரதியின் தலை, உடல், புடைவை எல்லாம் ஒரே ஈரம்! கேசம் பேயாட்டம் ஆடினாற்போல் கலைந்து பரந்து தொங்கிற்று. கண்கள் அழுது அழுது சிவந்திருந்தன. நடுங்கும் அவள் கரங்களுக்குள்... நல்ல வேளை.... நடராஜ விக்கிரகம்!

வேணுவுக்கு மூச்சு வந்தது. ஆசுவாசத்தோடு நெஞ்சைத் தடவிக் கொண்டான்.

''அண்ணா... அண்ணா....'' பாகிரதி விஷயத்தைக் கூற முடியாமல் விக்கி விக்கி அழுதாள்.

''சொல்லிவிட்டு அழுது தொலையேன்!''

வேணுவுக்கு வந்த ஆத்திரத்தில் அவளை அடித்துவிடுவான் போலத் தோன்றியது.

''உமா......உமாதான்....''


''உமாவா? உமாவையா திருடியாக்கப் பார்க்கிறாய்?' பாகிரதியும் மீனாட்சியும் உமாவின்மீதுள்ள பொறாமையால் அவளைத் திருடியாய்ப் பார்க்கிறார்கள் என்ற எண்ணத்தோடு, இல்லாத பல கற்பனைகளும் தோன்றவே, பாகிரதியைப் பேயாக அலறத்துவிட்டான் வேணு.

பொறி கலங்கி யிருந்தாலும், ''விஷயத்தைக் கேள் அண்ணா....'' என்று பாகிரதி சாந்தமாகக் கூறினாள்.

விடியற்காலையில் பாகிரதி பெருக்கிக் கோலம் போடுவதற்காகக் கோயிலுக்குள் நுழைந்தவள், விக்கிரகத்தைக் காணாது திடுக்கிட்டுப் போனாளாம். ஏனெனில், முந்தின நாள் இரவுகூட அவள் மீனாட்சியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, கையில் அரிக்கேன் விளக்கோடு வந்து, எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்து விட்டுப் போயிருந்தாள்.

விக்கிரகம் போய் விட்டது என்று தெரிந்ததும் திக்பிரமையோடு கோயிலுக்கு வெளியே வந்தாள். ஏரிப் படித் துறையில் அவர்கள் வீட்டுப் பால்காரி குளித்துக் கொண்டிருந்தாள். அவள் சற்று முன்புதான் சதானந்தம் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருக்கும் பம்பாய்ச் சீமைப் பையன் வந்து விட்டுப் போனதாகச் சொன்னாள்.

உடனே பாகிரதி விஷயத்தைத் தெரிந்து கொள்ளச் சதானந்தம் வீட்டுக்கு ஓடினாள். மாமி கூடத்தில் தயிர் கடைந்து கொண்டிருந்தவள், 'சுரேஷையா கேட்கிறாய்? அவன் சற்று முன்புதான் பெட்டியை எடுத்துக் கொண்டு ஊருக்குப் போவதாகக் கிளம்பிப் போனான். நான்கூட, 'என்னடா, இப்படித் திடீரென்று காலில் கஞ்சியைக்



கல்கி நேயர்களுக்கு

ஒவ்வொரு கல்கி இதழும் ஒரு குடும்பத்தில் உள்ளவர்களை மட்டுமின்றி அக்கம்பக்கத்து வீடுகளில் உள்ளவர்களையும் மகிழ்விக்கிறது.

பல பேர்கள் கல்கியைக் கையிலெடுத்துப் படிக்கும்பொழுது அது நைந்து போகாமல் பத்திரமாகப் பாதுகாக்க உதவும் வகையில் உயர் ரக பிளாஸ்டிக் மேலட்டை ஒன்று தயாரித்திருக்கிறோம். இந்தப் பிளாஸ்டிக் அட்டையை ஓரிதழிலிருந்து அடுத்த கல்கி இதழுக்கு மாற்றிக் கொள்ளலாம். கல்கியின் ஆசிகி தெய்வமான விநாயகப் பெருமானின் திருஉருவத்தைத் தாங்கி அழகுறப் பொலியும் இம் மேலட்டையைக் கல்கி காரியாலயத்துக்கு ஓராண்டு சந்தா ரூ. 20/- அனுப்பி வைப்பவர்கள் இலவசமாகப் பெறலாம். இம் மேலுறையைத் தனியே விற்பதற்கு இல்லை. தயவுசெய்து மன்னிக்கவேணும்.


இச் சலுகையை ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கி மே இறுதிக்குள் சந்தாத் தொகை அனுப்பும் அன்பர்களுக்கு மட்டும் அளிப்பதென முடிவு செய்திருந்தோம். பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இச் சலுகையை மேலும் ஒரு மாதத்துக்கு, அதாவது ஜூன் மாத இறுதிவரை நீடித்திருக்கிறோம் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தாத் தொகை அனுப்ப வேண்டிய முகவரி:

மானேஜர், கல்கி காரியாலயம், சேத்துப்பட்டு, சென்னை - 31

கொட்டிக் கொண்டு கிளம்பு கிறாய்? அப்படி என்ன அவசரம்? உமாகூட ஆற்றுக்குக் குளிக்கப் போனவள் இன்னும் வரவில்லை. அவள்கூட உன் புறப்பாட்டைப் பற்றி எதுவும் முன்னால் பிரஸ்தாபிக்கவில்லையே?' என்று சொல்லிப் பார்த்தேன். அவன், 'பரவாயில்லை மாமி. நான் அவளை ஆற்றங் கரையிலேயே பார்த்துச் சொல்லி விட்டு அப்படியே ஸ்டேஷனுக்குப் போய் விடுகிறேன்' என்று சொல்லி விட்டு இப்போது தான் போனான்'' என்றாள்.

உடனே பாகீரதியின் சந்தேகம் புலப்பட்டு விட்டது. ஆற்றங்கரைக்கு ஓட்டமாக ஓடினாள், தான் பத்தொன்பது வயதுப் பெண் என்பதையும் நினையாது.



''ஐயோ பாவம், நீ நிறைய மார்க் வாங்கியிருக்கியேடா! எப்படித்தான் காலேஜில் சேரப் போகிறாயோ?''

யோடு, பிரளய கால சமுத்திரம் போல் பெருக்கெடுத்தோடும் முல்லையாற்றில் பிடித்துத் தள்ளி விட்டானாம்.

பாகீரதி விழுந்து விட்டதைப் பார்த்து உமா பீதியில் கூவத் தொடங்கினாளாம். கூக்குரல் கேட்டு யாராவது ஓடி வந்துவிடப் போகிறார்களே என்று அஞ்சி வெருண்ட அக்கிராதகன் உமாவைக் கண் மூக்கு பாராது அடிக்க ஆரம்பித்தானாம். பட்டணத்தில் நலுங்காமல் பிறந்து வளர்ந்த உமாவால் அதைத் தாங்க முடியவில்லையாம்.

பாகீரதிக்கு நன்றாக நீச்சல் தெரியுமெனினும் சுரேஷ் உமாவை அடிப்பதைத் தடுக்க ஒரே வழி, மூழ்கி விட்டது போல் நடிப்பது தான் என்று நிச்சயித்து அப்

நல்ல வேளையாக சுரேஷ் இன்னமும் உமாவோடுதான் சம்பாஷித்த வண்ணம் இருந்தான். பாகீரதி ஓடோடிப் போய், அவர்கள் கவனிக்குமுன் மரத்தடியில் வைத்திருந்த சுரேஷின் பெட்டியைத் திறந்துவிட்டாள். நல்ல காலமாக அதனுள் விக்கிரகம் இருந்தது.

உமாவும் எதுவும் புரியாது விழித்தாள். சுரேஷ் ஆத்திரத்தோடு பாகீரதியை நோக்கி ஓடி வந்தான்.

விஷயத்தைப் புரிந்து கொண்ட உமா பத்திரகாளி ஆனாள். சுரேஷைப் பார்த்து வசைமாரி பொழிந்தாள்.

அவர்கள் தர்க்கத்தில்தான் பாகீரதிக்கு எல்லாமே புரிந்தது. சுரேஷின் தொழிலே இதுதானாம். கவனிப்பாரற்றுக் கிடக்கும் கோயில்களிலிருந்து விலைமதிப்பற்ற விக்கிரகங்களைக் களவாடி பம்பாய் வழியே வெளிநாட்டாருக்கு உயர்ந்த விலைக்கு விற்று விடுவானாம். தஞ்சை ஜில்லாவிலிருந்த மிராசுதார்கள் பலர் நிலத்திலிருந்து வருமானம் குறைந்து விட்டதால் பட்டணங்களுக்குக் குடியேறி விட்டனரென்றும், அதனால் அவர்கள் மேற்பார்வை செய்து வந்த கிராமக் கோயில்கள் பல நித்தியப்படி பூஜைக்கு வழியின்றி இருண்டு கிடக்கின்றன என்றும் கேள்விப்பட்டு இந்தப் பக்கம் வந்தானாம். கால் மாற்றி ஆடும் இந்த அபூர்வச் சிலையைக் கண்டதும் பெரும் பணத்தாசை பிடித்துவிட்டதாம். இதை ஐயாயிரம் ரூபாய் கொடுத்துக்கூட வாங்கிக் கொள்ளும் மேனாட்டினர் இருக்கிறார்களாம்.

சுரேஷ் முதலில் நயத்தோடு, ஒரு நூறு ரூபாய் நோட்டை நீட்டிச் சிலையைத் தந்து விடும்படி கேட்டானாம். உமா, பாகீரதி இருவருமே தீர்மானமாக மறுத்து விட்டனர்.

மிரட்டலுக்குப் பாகீரதி பணியாமல் போகவே சுரேஷ் பலவந்தமாகச் சிலையைப் பிடுங்க யத்தனித்தானாம். தொடர்ந்து நடந்த சண்டையில் பாகீரதியைச் சிலை

படியே கூவினாளாம். உமா திக்பிரமையடைந்து நின்றாளாம். பாகீரதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவது போல் பாசாங்காக மிதந்தாளாம்.

அதே சமயத்தில் அக்கரையில் யாரோ வருவது போல் இருந்ததாம். பயந்துபோன சுரேஷ் உமாவையும் பிடித்துத் தள்ளிவிட்டுப் பறந்தோடி விட்டானாம்....

''ஐயையோ! அப்புறம் என்ன ஆயிற்று? உமா இப்போது எங்கே? சொல்லு பாகீரதி... சீக்கிரம் சொல்லேன்?'' என்று வேணு பிரலாபித்தான்.

பாகீரதி அவனைப் பார்க்கத் தெம்பின்றித் தரையைப் பார்த்துப் புலம்பினாள்.

''அதுதான் அண்ணா, எனக்கும் தெரியவில்லை. நான் ஒரு கையால் விக்கிரகத்தைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கையால் கஷ்டப்பட்டு நீந்தி ஒரு பர்லாங்குக்கு அப்பால் கரையேறினேன். ஆனால் அவள்... இன்னும் இதுவரை கரையேறவில்லை. நானும் நெடு நேரம் கண்ணுக்கெட்டிய வரை பார்த்து அலசி விட்டேன். அவளுக்கு நீந்தத் தெரியுமோ, தெரியாதோ?....''

வேணு கதறினான் நெஞ்சே வெடித்து விடும்படி.

''ஐயோ, உமா! இன்று காலை வெகு தூரத்திலிருந்து உன்னைப் பார்த்தது கடைசி முறையா? இல்லை... இல்லை... வாய்க்கால் பாசன மதகுக் கதவு இன்னும் திறந்து விடப்பட்டிரா விட்டால் அதன் சுவரின் அருகிலாவது உன் பூவுடல் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும். அதையாவது தரிசியாமல் திரும்பி வரமாட்டேன்: இது சத்தியம்!....''

தலைதெறிக்க ஓட ஆரம்பித்தான் வேணு, கண்ணீரும் கம்பலையுமாக.

கையில் விக்கிரகத்தோடு மதிமயங்கி நின்றாள் பாகீரதி.

காற்று ஜிலுஜிலுவென்று வீசியது. ஆனால் வெய்யிலும் தகித்தது.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

காலைப் புத்துணர்ச்சியை மாலை வரை நீடிக்கச் செய்யுங்கள்!

காலையில் குளித்தபின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடலில் தூவிக் கொண்டால் புத்துணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்திருக்கும். வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மையுடைய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் கடுங்கோடையில் கூட உங்களை இதமான உணர்ச்சியுடனும் உல்லாசத்துடனும் இருக்கச்செய்யும். உங்கள் உடலைத்தழுவி நிற்கும் ட்ரீம்ஃப்ளவர் நறுமணம் உங்களைச்சூழ்ந்துள்ளவர்களை மகிழவைக்கும். எல்லா காலநிலைகளுக்கும் ஏற்றதாகையால் வருடம் பூராவும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்!



பாண்ட்ஸ்

**ட்ரீம்ஃப்ளவர் டால்க்—
மென்மை மிக்க மகோன்னத டால்க்!**

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



லைப்பாய்

இருக்குமிடம்: அதுவே...
ஆரோக்கியம் இருக்குமிடம்

லைப்பாய் ஸ்நானம் - உற்சாகப் பெருக்கு. உல்லாச ஊற்று..
ஒவ்வொரு குளியலும் உணர்த்தும்: நல்ல சோப்புக்குரிய நன்மைகள்
யாவும் பெறலாம், அதற்கு மேலும் பெறலாம் ஆரோக்கியமுடன்.

அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு